89

பொன்னி

1-1-53.. PONNI.. 4 அணா



89/1.53

N53.6.21
208418

பொங்கல் வாழ்த்து

பலவித நிறங்களில் அழகாக
அச்சிடப்பட்ட கவர்ச்சிகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்
விற்பனைக்குத் தயாராக
இருக்கின்றன.

மொத்தத் தேவைக்கு வியாபாரிகள்
உடனே எழுதக் கோருகிறோம்.

மாதிரி வேண்டுவோர் 8 அணு தபால் தலைகள் அனுப்புக

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை—21

1-2-53 இதழில்

குழந்தை இன்பம்
(கவிதை)
தமிழழகன்

★

பேசும் பாறைகள்
(கட்டுரை)
பிலோ இருதயநாத்

★

மக்கள் மன்றம்

★

நிழல்
(நாடகம்)
பி. எல். சாமி

★

ஜெகசிற்பியன்
வாணிதாசன்
ஜடாதரன்
இரா. இளஞ்சேரன்
பி. எஸ். ராமகிருஷ்ணன்
ரா. பாலாஜி
தன. நடராஜன்

ஆகியவர்கள் எழுதுகிறார்கள்

OFFICE OF THE REGISTRAR OF ...
JAN 1953

பொன்னி

பொருளடக்கம்

மலர் 6	ஜனவரி 1, 1953	இதழ் 21

திருவள்ளுவர் ஆண்டு 1983
மார்கழித் திங்கள் 18-ம் நாள்

விட[illegible]ன், பார்!	...	2
ஆந்திராவில் விடிவெள்ளி	...	3
உலகக் கண்ணோட்டம்	...	7
தாம்பத்தியம்	...	10
பொழுது போக்கு	...	16
பேச்சு வழக்குகள்	...	17
ஓடோடி வந்தும்...!	....	22
அழகி	...	26
அன்பின் திருப்பம்	...	27
காகிதப் படகு (சிறுவர் தொடர் கதை)	....	34
குழந்தை உள்ளம்	...	40
மக்கள் மன்றம்	...	46
காணாமல் போகாத பேசரி	...	47
எச். ஜி. வெல்ஸ்	...	50
ஒற்றை ரோஜா (தொடர்கதை)	...	51

★

அட்டைப்படம்:
அன்பின் திருப்பம்

விடமாட்டேன்......பார்!

நேரு அறிக்கைப்படி ஆந்திர மாகாணம் அமைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென்கிறார் பிரகாசம்.

208418

ஆந்திராவில் உரிமை ஒளி!
தமிழகத்தில்...?

தியாகம்! உயிர் மறுப்பு! இவற்றின் ஆற்றல் மிகப்பெரிது. தியாகத்தின் முறை சரியா, அதன் நோக்கம் முற்றிலும் தூய்மையானதா? அது வேறு கேள்வி. எவ்வகையிலும் தியாகம் தியாகம்தான்! மனித இனம் எந்த உருவிலும் தியாகத்தைக் குறைவாக மதிக்க முடியாது. எல்லா உரிமைகளிலும் தியாகத்தின் உரிமை பெரிது. எல்லாவகை மதிப்புக்களிலும் தியாகத்தின் மதிப்பே உச்சநிலையில் மதிப்பிடத் தகுந்தது.

சென்ற டிசம்பர் 15-ஆம் தேதியன்று இரவு சாகும் வரை உண்ணா நோன்பிருக்கத் துணிந்து, உண்மையிலேயே சாகும்வரை உண்ணாநோன்பிருந்து முடித்துவிட்ட ஆந்திரத்தியாகி பொட்டி ஸ்ரீராமுலு அவர்களின் கடுந்தவத்திற்கு நாம் தலைவணங்காமலிருக்க முடியாது! அவருடன் நமக்குள்ள அத்தனை கொள்கை வேற்றுமை, நோக்க வேற்றுமை, முறை வேற்றுமைகளும் கடந்து மொழியினத்தின் உரிமைக்காக உயிர்விட்ட அப்பெருந்தகைக்கு நாம் மனமார வணக்கம் செலுத்துகிறோம்!

இத் தியாகத்துக்குப் பின்னணியிலுள்ள இயக்கத்தின் உணர்ச்சியை நாம் மதிக்கிறோம். அவ்வியக்கத்தில் அறிவமைதி வாய்ந்த திட்டம் இல்லாமலிருக்கலாம். அது தவறான திசையில் துவேஷ மனப்பான்மையைக் கிளறிவிட்டிருக்கலாம். ஆனால் இவற்றாலும் தியாகத்தின் பெருமை குறைபட்டுவிட முடியாது. மேலும் இந்தத் தியாகத்துக்குக் காரணமாயிருந்த தேசியச் சூழ்நிலையில்கூட அறிவமைதியுடைய திட்டம் இருப்பதாக நாம் கூற முடியாது. அத்துடன் மொழித் துவேஷத்தைத் தடுத்துவிடுவதற்குரிய ஆழ்ந்து பரந்துயர்ந்த தேசியப்பற்றார்வம் வளர்ந்திருப்பதாகவும் கூறமுடியாது. அறிவுடையவர், ஆற்றலுடையவர்களின் தன்னலத்துக்குமுன், அறிவும் ஆற்றலும் அற்ற ஏலமாட்டா உணர்ச்சி என்ன செய்ய முடியும்? தியாக பீடத்தில் தன்னைப் பலியிடுவதைத் தவிர்த்து அதற்கு வழி ஏது?

ஆந்திரநாடு ஆந்திரருக்கே என்ற ஆந்திரரின் உரிமைக்குரலை நாம் மதிக்கிறோம். மதிக்கவேண்டும். ஏன்? அதே ஆர்வம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நமக்கும் உண்டு. அத்துடன் எல்லா மொழித் தாயகங்களுமே மொழிப்பிரச்சினை வகையிலும் உள்நாட்டு ஆட்சியுரிமைகள் வகையிலும் முழுநிறை உரிமையும், தங்குதடையற்ற தன் மு

மையும் உடையனவாய் அமையவேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். மேலும், ஆந்திரநாட்டுக் கோரிக்கையில் ஆந்திரா காட்டும் ஆத்திரத்தையும் அவசரத்தையும் துடிதுடிப்பையும் சுட்டிக்காட்டிக் கேலிசெய்பவர்களல்ல, நாம்! உண்மையில் அதே ஆத்திரத்தையும் அவசரத்தையும் துடிதுடிப்பையும் நம் தமிழர்களோ மற்ற மொழியாளர்களோ காட்டவில்லையென்றால், அது அவர்கள் குற்றமல்ல, நம் குற்றம்! அது நாம் பெருமைப் படத்தக்க செய்தியன்று; ஓரளவு நாம் வெட்கப்படத்தக்க நிலையேயாகும்.

பொட்டி ஸ்ரீராமுலுவின் தியாகம் தன்னலத்துக்காகவோ, அற்பக்குழு நலங்களுக்காகவோ, வீம்புப் புகழுக்காகவோ மேற்கொள்ளப்பட்டதன்று. பெற்ற தாய்நாட்டுக்காக, தாய்மொழி பேசும் மக்களினத்தின் உரிமைக்காக ஆற்றப்பட்டது ஆகும். எனவேதான், தவறான திசையில் தூண்டப்பட்டும், பாதகமான சூழ்நிலைகளிடையே நடைபெற்றும், அது ஒளி வீசிவிட்டது. அது பயன் தந்துவிட்டது. ஆந்திரமக்கள் இதுகாறும் எழுப்பி வந்த குரலின்போதும், பொட்டி ஸ்ரீராமுலு அவர்களின் உண்ணா நோன்புத் துயரின்போதும் அசைந்து கொடுக்காத காங்கிரஸ் மேலிடமும், ஆட்சி வகுப்பும், மறைந்த தியாகியின் வாய்விடா நுண்குரலுக்குமுன் அசைந்துகொடுக்கத் தொடங்கியிருக்கிறது. மொழிவாரி மாகாணத்தில் உறுதியான நம்பிக்கையோ, அது வகையில் அறிவார்ந்த தேசீயத் திட்டமோ இல்லாத காங்கிரஸ் மேலிடத்தை இத் தன்மறுப்பொளி ஒரு சிறிதேனும் கனியவைத்திருக்கிறது. அது ஆந்திரர்களுக்குமட்டுமாவது மொழிவாரி மாகாணம் என்ற வரப்பிரசாதத்தை வழங்க முன்வந்திருக்கிறது.

ஸ்ரீராமுலுவின் தியாகத்தின் ஒளி, ஆந்திரமொழியார்வம், ஆந்திர நாட்டார்வம் ஆகியவற்றின் ஒளி. ஆனால் அந்தத் தியாகத் தீயின் புகையாக அதில் நாம் ஒரு குறையையும் காணமுடியும். அதில் மொழியுணர்ச்சியுடன் கூட மொழித்துவேஷமும் கலந்து இருக்கிறது. அவர் ஆந்திர மாகாண அமைப்புக்காக மட்டும் உண்ணாநோன்பாற்றவில்லை. அத்துடனே சென்னை நகர் ஆந்திரருக்குத் தரப்படவேண்டுமென்பதற்காகவும் நோன்பாற்றினர். இது வெறும் விருப்பம் மட்டுமன்று. இதுவும் ஒரு மொழியின் உரிமைக் குரலுடன் மற்றொரு மொழியின் உரிமை எதிர்க்கும் குரலாகி, ஆந்திரர் மொழியுணர்ச்சியைத் தமிழர்மீது துவேஷமாக மாற்றியுள்ளது. தியாகத்தை அடுத்து அதன் புகழைக் கெடுத்து அது தன் சொந்த உருவைக் காட்டி அழிவு வேலைகளிலும் இறங்கியிருக்கிறது. ஆந்திரமொழியார்வம் இங்கே தமிழர் மொழியார்வத்தையும மொழியுரிமையையும் எதிர்ப்பதாய் இருக்கிறது. அவர்கள் மொழிவாரி மாகாண ஆர்வம், அதே வகையில் மொழிவாரி மாகாண ஆர்வமுடைய மற்றொரு மொழியாளரை எதிர்ப்பதாய் அமைகிறது. இது மொழியுணர்ச்சியுடையவர்களுக்கும், மொழிவாரி மாகாணக் கொள்கைக்கும் வலுவூட்டுவது என்று கூறமுடியாது. மொழிவாரி மாகாணத்தில் நம்பிக்கையற்றவர்களுக்குத்தான் இந்தப் போக்கு உதவியாயிருக்க முடியும். மொழித்துவேஷத்தையும் மொழிவெறியையும் சாக்குக் காட்டி,

'மொழிப்பற்று என்பது தேசிய ஒற்றுமைக்குக் கேடுபயக்கக் கூடியது' என்று கூறி, அந்தப் பிரச்சினையை எல்லையற்ற காலம் நீடித்து ஒத்திப்போடவோ, அல்லது நாளடைவில் அந்த ஆர்வத்தையே நிலையாக அழிக்கவோ இது இடமளித்துவிடக்கூடும்.

தமிழகம், மொழிப்பற்றில் எந்த மொழித் தாயகத்துக்கும் பிற்பட்டதல்ல. ஆனால் இந்தியாவுக்கே சமரச உணர்ச்சியைத் தந்தவர்கள் தமிழர்கள். இன்னும் பல கேடுகளை அதனால் அடைந்தும், சமரச உணர்ச்சியிலே நிற்பவர்கள். மொழி வேறுபாடு சிறிதும் காட்டாமல் தமிழகம் எல்லாத் தாய் மொழிகளுக்கும் தன்னகத்தே இடம் கொடுத்திருப்பது மட்டுமன்றி, எல்லா மொழியாளருக்கும் தன்னகத்தே உரிமையையும் பதவியையும் கொடுக்கத் தயங்கவில்லை. ஆனால் மிகுந்த பல்வகை முனைப்பான குழுவுணர்ச்சிகள் எழுந்து வளர்ந்துவரும் இன்றைய உலகச் சூழ்நிலையில், தமிழரின் சமரசம் தமிழர் உரிமைகளுக்கு இரண்டக நிலையையே உண்டு பண்ணி வருகிறது. உணர்ச்சியற்ற தூக்கத்திலும் அதன் பயனான அகவேற்றுமையை, கட்சி உட்கட்சிபூசல்களிலும் தமிழர் இன்னும் நெடுநாள் பிரிவுற்றுக் கிடக்க மாட்டார்கள், கிடக்கக்கூடாது. ஏனெனில், ஏற்கனவே பழய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மரபு பாஞ்சாலங்குறிச்சி மரபின் மீது பலவகையில் வர்மத்துடன் நடந்துகொண்டு வந்திருக்கிறது. 1912லேயே தமிழ் மாவட்டமாயிருந்த பழய வட ஆற்காட்டு மாவட்டத்தின் பகுதிகளை அது புதிதாகச் சித்தூர் மாவட்டமாக்கி அதிலுள்ள மக்கள் மொழியுரிமைகளை மெல்ல அரித்து வந்துள்ளது. ஆந்திரர் அதன்மீதிருந்து தமிழர் கவனத்தைத் திருப்பவே சென்னை வகையில் கூச்சல் கிளம்பியுள்ளது என்பதைத் தமிழர் அறியாமலில்லை. ஏனெனில் அரசியலில் தூங்கிக் கொண்டிருந்த தமிழன் காதில் பண்டைத் தமிழிலக்கியம் முழுவதும் இரண்டாயிர ஆண்டிற்கு முன்னிருந்தே—ஆந்திர மொழியும் இலக்கியமும் பிறக்கும் முன்பே இந்தியாவில் வேறு மொழியும் இலக்கியமும் ஏற்பட விரும்பிச் செந்தமிழ் நிலத்தின் எல்லையடைந்திருப்பதைக் கூறியுள்ளது. அத்துடன் நாற்பது ஆண்டுத் தமிழ்க் கல்வி மறுக்கப்பட்டும் சித்தூர்த் தமிழர் இன்றும் தமிழை மறந்துவிடவும் இல்லை. ஆகவே ஆந்திரர் சென்னைக் குரலை உடனடியாக விடா விட்டால், சித்தூர்த் தமிழர் குரல்தான் அவர்கள் மொழிச் சார்பான நாடுகளுக்கு மறுமொழி தருவதாகும். கருத்து வேற்றுமையற்ற ஆந்திரப் பகுதிகளிலுள்ள அவ்வட்டத்தின் பிரச்சினையை அவர்கள் இச்சூழ்ச்சியினால் மறைக்க முடியாது என்று எச்சரிக்கிறோம்.

ஆந்திரர்களில் பல தலைவர்கள் சென்னையை வற்புறுத்துவதனால் ஆந்திரமாகாணப் பிரச்சினை நிரந்தரமாக ஒத்திவைக்கப்பட்டு விடவே நேரும் என்பதை அறிந்து அதை விளக்கியே உரிமை கோர முன் வந்துள்ளனர். முதல்வர் நேருவும் தம் அறிக்கையில் இதையே வலியுறுத்தி ஆந்திர மாகாணப் பிரிவினையைச் செயற்படுத்த முன் வந்திருக்கிறார். இது வரவேற்கத்தக்கது. ஆனால் மொழித்துவேஷத்துக்கு இடமில்லாமல், மொழியுரிமைகள்

அனைத்தையும் நேர்மை அடிப்படையில், தேசிய முறையில் நிலைநாட்டுவதானால், மேலிடத்து அரசியலார் இரண்டு வகையில் தங்கள் மொழிவாரி மாகாணக் கோட்பாட்டை மாற்றியமைக்க வேண்டும். முதலாவது எல்லா மொழித் தாயகங்களின் பிரிவினையையும் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டத்திலிணைத்துப் பிரிக்க வேண்டும். இரண்டாவது, அத் திட்டத்தில் மொழி எல்லைப் பிரச்சினையை முதலில் வைக்காது, பிரிவினையை முதலாவது வைத்து, எல்லை எதுவாயினும் நாட்டு மொழிகளின் உரிமைகள் எவை, நாட்டு மொழி அல்லாத மற்றத் தாய்மொழிகளின் பாதுகாப்புரிமைகள் எவை, எல்லை உறுதி செய்வது பற்றிய பொதுக் கோட்பாடுகள் எவை, எல்லை வகையில் ஏற்படும் சச்சரவைப் பொதுவாகத் திர்க்கும் முறைகள் எவை என்பனவற்றை முதலில் வரையறுத்துவிட வேண்டும். இம்முறையால் எல்லைப்பிரச்சினை உண்மையில் போராடும் இரண்டு தேசங்களுக்கிடையிலுள்ள வெற்றி தோல்வி வாழ்வு தாழ்வுப் பிரச்சினையாகாமல், நாளடைவில் கலந்து பேசுவதன் மூலமாகத் தீர்த்துக் கொள்ளப்படத்தக்க தற்காலிகப் பிரச்சினை ஆகிவிடும்.

தமிழகத்தின் சமரச மனப்பான்மை தமிழர் உரிமைகளுக்குக் குந்தகமாயிராத நிலை ஏற்படவேண்டுமானால், இந்திய மாநிலமும் அதன் மற்ற மொழிப்பகுதிகளும் தமிழகத்தின் சமரசக் குறிக்கோளைப் பின்பற்றி இத்தகைய தேசியத் திட்டம் உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால், தமிழர்கள் தற்கொலைப் பண்பாகிய தங்கள் சமரச மனப்பான்மையை விட்டுவிட்டு, ஆந்திர மாகாணம் அமைக்கும் அதே நேரத்திலேயே தமிழகம் அமைக்க வேண்டும் என்ற உணர்ச்சியுடன் கிளர்ந்தெழ வேண்டியது அவசியம். ஏனென்றால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் பிரிவற்ற உட்கலத்திற்கு ஆந்திரர் உரிமைக்குரல் ஏற்படாத அன்று கஞ்சம் மாவட்டத்தைப் பறிகொடுத்தது போல, தமிழகமும் ஆந்திரருக்கும் உரிமைக் கிளர்ச்சி செய்யும் மற்ற மொழியாளருக்கும் ஒவ்வொரு உரிமையாக விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். ஆந்திரரும், மலையாளிகளும், கன்னடியர்களும் தத்தம் உரிமைக்கு வாதாடும்போது, தமிழர் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டுபோகாமலிருக்க முடியாது. ஒவ்வொருவருடனும் போராடும்போது தமிழின் மொழியுணர்ச்சியற்ற சமரசமனப்பான்மை அவனுக்கெதிராகவே இருக்கும். அவன் உரிமைகள் 'எளியவன் மனைவி' நிலையிலேயே இருந்து எல்லோராலும் சுரண்டப்படும். இந்த நிலைமையை மாற்றியமைக்கத் தமிழர் இன்றே கிளர்ந்தெழுந்து உரிமைக்குரல் முழக்குவார்கள். தமிழகக் குரலுக்குத் தடையாக தமிழரின் இந்திய மாநிலப்பற்றோ, சென்னை மாநிலப்பற்றோ இருந்தால், அது அடிமைத் தமிழனின் பற்றாகவே அமையும். நாமிருக்கும் நாடு நமதானால், அதில் நம் நிலையும் உரிமையும் ஏனையோருடன் சரிசம நிலையும் சரிசம உரிமையும் உடையதாயிருக்கவேண்டும். சமத்துவத்துடன் கூடிய ஒற்றுமையே கூட்டுறவு ஒற்றுமையாகும். அஃதில்லாத ஒற்றுமை ஆண்டான்—அடிமை ஒற்றுமையேயன்றி சுதந்தர ஒற்றுமை ஆகமாட்டாது. ★

உலகக் கண்ணோட்டம்

'வில்லன்'

கணக்கான கைதிகளின் பொருட்டு லட்சக் கணக்கான கொரியர்களை நாசம் செய்ய அமெரிக்காவுக்கு உரிமையேது? இன்று யுத்த சமாதானம் ஏற்படாததற்கு அமெரிக்காதான் பொறுப்பேற்கவேண்டும். இந்தியா ஐக்கிய நாடுகள் சபையில் சமரசத் தீர்மானமொன்று கொண்டு வந்தது உண்மைதான். அமெரிக்கா இறுதியில் அதை ஏற்றது உண்மையே. ஆனால் ஜினீவா சம்பிரதாயத்திற்கு விரோதமாக அமெரிக்காவுக்கு விட்டுக்கொடுக்க மறுக்க சீனாவுக்கு அதிகாரமில்லையா? சீனா முழுவதையும் ஆளும் சீன அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நுழையவிடாமல் தடுத்து வரும் அமெரிக்காவுக்கு தர்மம் பேசுவதற்கு உரிமையேது? ஷியாங்கேஷேக் என்னும் நாடோடிக்கு ஆயுத பலமும் பணமும் அளித்து சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்தி வரும் அமெரிக்காவின் நல்லெண்ணத்தை சீனா ஏன் நம்பவேண்டும்? ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐஸன்ஹோவர் கொரியா விஷயத்தில் முடிவு செய்துவிட்டாராம். அவர் முடிவின் பயனாகச் சீனர்களுக்கு விரோதமாகத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உலக யுத்தம் மூளுமாயின், அதற்கு அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டும். அமெரிக்காவுக்குக் கடன்பட்ட நாடுகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அமெரிக்காவை ஆதரித்து சோவியத் ருஷியாவையும் கம்யூனிஸ்ட் சீனாவையும் தூற்றலாம். ஆனால் நடுநிலை வகிக்கும் இந்தியா வாயைத் திறந்து சொல்லாவிடினும் அமெரிக்காவையே

அமெரிக்காவின் பொறுப்பு

இன்று உலக மக்களின் உள்ளத்தினின்று யுத்த பயத்தை அடியோடு விலக்குவதற்கு அமெரிக்காதான் முன் வரவேண்டும். சோவியத் ருஷியாவும் கம்யூனிஸ்ட் சீனாவுமே உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றன என்பதெல்லாம் வெற்றுப் பிரசாரம் என்பதை மக்கள் கண்டு கொண்டுவிட்டனர். எந்தத் தருணத்திலும் போர் மூளுவதற்குக் காரணமாயிருந்து வருகிறது கொரியா நிலை. கொரியாவில் ருஷியச் செல்வாக்கு ஓங்கி வருகிறதென்ற காரணத்தினால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பேரில் அமெரிக்கா கொரியப் போரில் இறங்கியது. சீன எல்லைப் புறத்தைத் தாக்கியதின் காரணமாக, சீனா போரில் இறங்கவேண்டியதவசியமாயிற்று. கொரிய மக்கள் தாமே தம் தகராறைத் தீர்த்துக்கொள்ள விடாமல், ருஷியரையும் கம்யூனிஸ்ட் சீனரையும் மடக்குவதன் பொருட்டு கொரிய நாட்டை நாசப்படுத்த அமெரிக்கருக்கு என்ன நியாயமுண்டோ தெரியவில்லை. ஜினீவா சம்பிரதாயப்படி அந்தந்த நாட்டுக் கைதிகளை அந்தந்த நாட்டிடமே விட்டுவிட வேண்டுமென்றிருக்க, கம்யூனிஸ்ட் சீனாவுக்குத் திரும்பிச் செல்ல மறுக்கும் சீன யுத்தக் கைதிகளையும் வட கொரிய யுத்தக் கைதிகளையும் தம் நாட்டுக்கு அனுப்பக் கூடாதென்த் தர்மம் பேசி, ஆயிரக்

வாழ்த்துகிறோம்

பொன்னி லிமிடெட் மானேஜிங் டைரக்டர் திரு பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார் துணைவியார் அவர்கட்கு 19—12—52 அன்று ஆண்மகவு பிறந்திருக்கின்றதென்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பொறுப்பாளியாக்கும். இதில் சிறிது ஐயமே இல்லை.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம்

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குக் கேடுகாலம் வந்துவிட்டது. இந்தோ—சீனு போரில் அமெரிக்காவின் உதவி பெற்றிருந்தும் வியட்மின் அதை முறியடித்து வருகிறது. டூனிஷியா விஷயத்தில் அமெரிக்க ஆதிக்கம் பெற்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஆதரவு பெற்றிருந்தும், அராபியரின் எழுச்சி பலப்பட்டு வருகிறது. மொராக்கோவிலும் மக்கள் கிளம்பிவிட்டனர். பிரெஞ்சு அடக்குமுறை பலிக்கப்போவதில்லை. தேசிய வாதத்தை அடக்க முயலும் எந்த ஏகாதிபத்தியமும் உருப்பட முடியாது. பிரான்ஸ் மோசநிலையடைந்து வந்தும் அதன் வறட்டு ஜம்பம் நிற்கவில்லை. அரசாங்க வருமானத்தின் பெருந் தொகையை இந்தோ சீனப் போரில் செலவிட்டு வரும் பிரான்ஸ் எத்தனை காலம் படுநாசத்தைத் தவிர்க்க முடியும்?

மன்னராட்சி ஒழியுமா?

எகிப்திய சர்வாதிகாரி நகீப் நடைமுறையில் இதுகாறும் இருந்துவந்த அரசியலமைப்பை ரத்துச் செய்துவிட்டார். 1923-ல் ஏற்பட்ட இந்த அமைப்பு மன்னனின் பேராசைகளுக்கும் சூழ்ச்சிகளுக்குமே பயன்பட்டு வந்ததாம். பரூக் மன்னர் அமைப்புக்கூட்டத்திலிருந்த ஓட்டைகளைத் தமக்கனுகூலமாக்கிக் கொண்டாராம். புது ஆமைப்புச் சட்டம் நிறுவப் படுமாம். புது அமைப்புச் சட்டம் மன்னராட்சியை அடியோடு ஒழித்து எகிப்தைக் குடியாட்சியாக்கிவிடின் அது ஆச்சரியம் விளைவிக்காது!

தமிழ் நாட்டில் புயல் நாசம்

மழைக்காகத் தவம் செய்தோம். செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடுகளில் பெய்த மழை இயற்கையன்னையின் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். ஆனல் வளம் மிகுந்த சோழ நாட்டில், திருச்சி தஞ்சைப் பிரதேசங்களில் அன்னை சீற்றமடைந்து கோரத் தாண்டவமே புரிந்தாள். மணிக்கு 70 மைல் வேகத்தில் அடித்த பலமான புயலின் காரணமாக கால் நடைகள், மரங்கள், குடிசைகள், வீடுகள், பலபல நாசமாயின. ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் கொலையுடன் விழுந்தன. கரும்பு வெற்றிலைப் பயிர் அடியோடு நாசமாயின: 50 சதம் வீதம் நெற்பயிர் நாசம். ஏரிகள் பல உடைப்பெடுத்தன. கோடிக் கணக்கான ரூபாய் சேதம். இந்த ஆபத்தில் பிற தேசங்களிலுள்ள மக்கள் சோழநாட்டு மக்களுக்குப் போதரவு அளிக்க வேண்டும். அரசாங்கத்துடன் ஒத்துழைத்து திருச்சி தஞ்சை, புதுக்கோட்டை மக்கள் தலையெடுக்க உதவுவது நம் கடமையாகும்.

கைநெசவு

கைநெசவுத் தொழில் நாடுமுழுதும் பரவியுள்ள முக்கிய கைத்தொழில்களுள் ஒன்று. லட்சக்கணக்

கான மக்கள் அத்தொழிலால் பிழைக்கின்றனர். நெசவாலைகள் ஆக்கமடைந்தும், அத்தொழில் மறையாது நிற்பது அற்புதமே. கைநெசவாடைகள் அழகாயும் உறுதியாயும் உள்ளன என மக்கள் இன்னும் கைநெசவை ஆதரிக்கின்றனர். கொஞ்ச காலமாகப் போதிய நூல் கிடைப்பதில்லை. நெய்யப்பட்ட சரக்குகளுக்கும் போதிய கிராக்கியில்லை. அயல் நாடுகளுக்கும் அதிகமாக ஏற்றுமதியாவதில்லை. ஆலையின் போட்டி பலமாய் விட்டது. இத்தொழிலையே ஜீவனமாகக் கொண்ட லட்சக்கணக்காக குடும்பங்கள் தவிக்கின்றன. ராஜாஜி சில ரக ஜவுளிகளுக்கு ஆலைகள் போட்டியிடக் கூடாதென்றார். இந்த யோசனையை இந்திய அரசாங்கம் ஆதரிக்கவில்லை. திடுமெனப் புரட்சிகரமான யோசனையை ஏற்க அது பயப்படுகிறது. ஆயினும் இந்திய அரசாங்கம் கஜம் மில் துணிமீது காலணா வீதம் வரிப் போட்டுச் சேரும் ரூ. 4,5 கோடியை கைநெசவுத் தொழிலின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்த முன்வந்துள்ளது. தொழில் சட்டப் பயிற்சியளிக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து இத்தொழிலின் நலனைப் பாதுகாப்பளிக்கவும் ஆவன செய்ய முன்வந்துள்ளது. தற்சமயம் இவ்வுதவியை நெசவாளர் மனமுவந்து ஏற்று அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். கம்யூனிஸ்ட் வலையில் விழாமல் ஆக்க வேலையில் புகவேண்டும். சொற்ப காலத்தில் அவர்கள் தங்கள் இதர தேவைகளையும் வலியுறுத்தலாம். ராஜாஜியும் மெல்ல மெல்லப் போராடிச் சிலரக துணைகளைக் கைநெசவுத் தொழிலுக்கே ஏகபோகமாக்கி விடலாம். பொறுமைவேண்டும். ★

முற்போக்கு எழுத்தாளர் சங்கம், சென்னை.

தலைவர்

திரு. நாரண துரைக்கண்ணன்

அறிக்கை

சென்னையில் 7-12-52 அன்று நடந்த காங்கிரஸ் ஊழியர் மகாநாட்டில் சென்னை முதலமைச்சர் ராஜாஜி பேசுகையில், முற்போக்குத் தமிழ் எழுத்தாளர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் எனும் பொருள்படப்பேசி இருப்பதைக் கண்டு சென்னை முற்போக்கு தமிழ் எழுத்தாளர் சங்கம் பெரிதும் ஆச்சரியமுற்றது.

இச்சங்கம் இலக்கியத்தைப் பொருத்தவரையில் சில தெளிவான கருத்துக்களைக் கொண்டதே தவிர, எந்த அரசியல் கட்சியின் ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டதல்ல.

இதுஒரு சுயேச்சையான சங்கம் என்பதையும், சங்கச் சட்டதிட்டங்களை ஒப்புக் கொள்ளும் எழுத்தாளர்கள் அனைவரும் அரசியல் கட்சி பேதமில்லாமல் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இடமுண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சிறுகதைத் தொடர்ச்சித்திரம்

தாம்பத்தியம்

எழுதியவர்: — வேம்பு

சிறு நிகழ்ச்சி என்றாலும் அதுவும்தான் தாம்பத்தியப் பிணைப்புக்கு எவ்வளவு குந்தகம் விளைத்து விடுகிறது. சிறு கல் விழுந்தாலும் நீர்ப்பரப்பின் தெளிவு சலனம் காணுவதைப்போல. ஆனால் சலனம் சாந்தி பெறும் போது, தாம்பத்தியம் காணும் இன்பத்திற்கு ஈடேது?...

படுக்கையில் ஒருமுறை புரண்டு படுத்தேன். பாதித் தூக்கத்திலே விழித்துக்கொண்டதைப் போன்ற ஒரு நினைவு. தூக்கம் நன்றாகக் கலைந்துவிட்டது. காலைமட்டும் மூடியிருந்த போர்வை கட்டிலிலிருந்து கீழே தோரணம்போல் தொங்கிக் கொண்டிருந்தது. போர்வையை இழுத்துப் போத்திக்கொண்டு அவள் பக்கம் திரும்பினேன்.

அவள் இன்னும் தூங்கவில்லை. இலேசாக விம்மல் சிணுக்கலுடன் எழுந்துகொண்டிருந்தது. நான் நன்றாகத் தூங்கியிருக்கிறேன். அவள் தூங்கவில்லை.

தூக்கத்திற்கு முன்பிருந்த ஆத்திரமும், கோபமும் எனக்கு அப்பொழுதில்லை. கதவைத் திறந்து வெளியே போய்விட்டு வந்தேன். மங்கலான விளக்கொளியில் ஓரிரண்டு கொசுக்கள் அங்குமிங்கும் பறந்து இனிய நாதம் ஏற்படுத்திக் கொண்டிருப்பதும், கூடத்தில் படுத்திருக்கும் தம்பி குறட்டை விடுவதும் தெளிவாகக்கேட்டன. கடிகாரத்தைப் பார்த்தேன். மணி இரண்டு.

"ஜானகி, இன்னுமா தூங்கவில்லை" என்றேன்; குனிந்து அவள் தோளை உலுக்கி. அவள் பதில் பேசவில்லை. கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய ஒளியில் நிறைந்திருந்த கண்கள் பளபளத்தன. மூக்கிலே அணிந்திருந்த அந்த பேசரிக் கற்களும் பளபளத்தன.

"ஜானகி, என்ன சொல்லி விட்டேன். இன்னும் தூங்காமல் அழுகிறாயே" என்று கூறி அவளை என் பக்கம் இழுத்தேன்.

சின்னக் குழந்தையாக அவள் துவண்டாள். அணைப்பினால் ஏற்பட்ட ஆறுதல் அவள் இதயத்தில் மீறியிருந்த வேதனையையும் விம்மலாக வெளியே கொட்டியது.

அவள் தலையைக் கோதியவாறே நான் சொன்னேன்: "என்ன சொல்லிவிட்டேன் என்று இப்படி அழுகிறாய், ஜானகி? ஊருக்குத் தானே போகவேண்டும்? போ."

தழுதழுத்த குரலில் அவள் கூறினாள்: "நீங்கள்...?"

"நான் வருகிறேன், வரவில்லை. நீ போ. எனக்குச் சௌகரியப்படாது"

"என்னைத் தனியாகப் போகச் சொல்கிறீர்களா?"—அவள் குரலில் சற்று அழுத்தமிருந்தது.

"தனியாகவா போகச் சொல்லு கிறேன். உன் மாமாதான் நாளைக் குப் போகப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஸ்டேஷனில் உன்னைக்கொண்டுவிட்டுவிடுகிறேன். வேறு இதைவிடப் பெரிய துணை வேண்டுமா?"

"நான் போகவில்லை..."

"ஜானகி, நீ ரொம்பவும் பிடிவாதக் காரியாகத்தானிருக்கிறாய். என் கஷ்டம் உனக்குத் தெரிவதில்லை. சொன்னாலும் எடுப்பதில்லை இப்போது உன்னுடன் ஊருக்கு வரச் சௌகரியப் படாது. அவ்வளவுதான்."

அணைத்திருந்த அவள் பிடி விலகியது. "உங்கள் கஷ்டம் எனக்குத் தெரியாதா? அதனால்தான் நான் ஊருக்குப் போகவில்லை என்கிறேன்" என்றாள். அவள் எழுந்து கூஜாவிலிருந்து ஒரு வாய்த் தண்ணீர் குடித்தாள். மறுபடியும் வந்து படுத்துக் கொண்டாள். போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டாள். புயலுக்குப்பிறகுள்ள நிலைமை எங்கள் இருவரிடையேயும் நிலவியது.

"ஜானகி, இப்படிக் கோபித்துக் கொண்டால் என்ன செய்கிறது. சரி நானும் வருகிறேன். உன்னை அழைத்துவர வருகிறேன்" என்று கூறி அவளது கன்னத்தைச் செல்லமாக நிமிண்டியவுடன்தான் அவள் முகத்தில் புன்னகை நிலவியது.

"இதை முதலிலேயே சொல்லியிருக்கக்கூடாதா? ஒன்பது மணியிலிருந்து நான் அழுது, விம்மித் தலைவலியை வரவழைத்துக் கொண்ட பிறகு தாங்கள் சரி என்கிறீர்கள். உங்களை நான் என்ன கேட்கிறேன்? பட்டுப் புடவை கேட்கிறேனா தங்க ஒட்டியாணம் கேட்கிறேனா..."

எனக்குச் சிரிப்பு வந்தது. அதே சமயம் அதை அடக்கிக்கொண்டு நினைவை எங்கோ செலுத்தினேன். காலச் சக்கரத்தின் சுழற்சியில்



ரோஜாவும், முள்ளுமாக மாறி மாறி வரும் நிகழ்ச்சிகளை எண்ணினேன்.

கலியாணமாவதற்கு முன்பு நான் வேலையாயிருந்த கம்பெனி பிரபலமான கம்பெனி. எனக்கும் நல்ல சம்பளம். அதையெல்லாம் 'ஒரு கண்' வைத்துக் கொண்டுதான் எனக்குப் பெண் கொடுக்க வந்தார்கள். நானும் வேலையின் திருப்தியினால் மிகத் தெம்பாக இருந்தேன். ஆனால், கலியாணமான மறுமாதமே கம்பெனி வேலையாக நான் வடக்கே போக வேண்டியிருந்தது. சென்ற வேலைகளில் எனக்கு வெற்றியில்லை. திரும்பி வரும்போது வேலையிலிருந்து நீக்குவதற்கான உத்தரவு காத்திருந்தது. என் உள்ளத்தே வளர்ந்திருந்த கசப்பு, அவர்கள் நீக்கு முன்னமேயே நான் ராஜிநாமாவை நீட்டிவிட்டுக் கிளம்பி விட்டேன். கிராமத்திலிருக்கும் வயதான தாயாருக்குச் சாப்பாட்டுக்குப் பணம் வேண்டும். கலியாண சமயம் ஆடம்பரச் செலவுகளுக்காக வாங்கிய கடன்களுக்காகக் கொடுக்க வேண்டும். இரண்டு மூன்று நாட்கள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஹோட்டல் அறையைக் காலி செய்ய வேண்டும். சாப்பாடு டிக்கெட் அன்று வரையில்தான் இருக்கிறது.

நான் வேலைக்கு ராஜிநாமா கொடுத்தது யாருக்கும் தெரியாது, திருமணமானவுடன் ஊருக்குப் போய்விட்ட என் புது மனைவிக்கும், யாருக்கும் சமாச்சாரம் தெரியாது. கலியாணமென்பது வாழ்க்கைக் கடலில் மிதக்கும் இன்பத் தோணி என்பார்கள். எனக்கென்னவோ புதுப் பந்தமாக அது பட்டது. கௌரவம்,

சுயமரியாதை எல்லாம் கலியாணத்திற்குப் பிறகு ஏற்படுகிறது. மனைவியின் எதிரேயும், மாமனார் முன்னிலையிலும் கௌரவமாக இருந்தால் தானே மதிப்பு? இப்படி ஒரு எண்ணம் அப்போது எனக்கு உருவாகியிருந்தது. நான்கைந்து ஆண்டுகள் பெரிய கம்பெனியில் பொறுப்புள்ள பதவி வகித்துவிட்டு இப்பொழுது சாதாரண வேலையைத் தேடுவதென்றால்...யோசனையிலும், குழப்பத்திலுமாக மனதை அலையவிட்டேன். வேலை தேடும் படலமும் தொடங்கியது. வேலையும் ஓரிடத்தில் முன்புள்ள சம்பளத்திற்குக் குறைவாகவே கிடைத்தது என்று வைத்துக்கொள்ளுங்களேன்.

ஊரிலுள்ள மனைவிக்கு விஷயத்தை எழுதினேன். மாமனாருக்குத் தெரிந்தது. அவர் சகஜமாகத்தான் எடுத்துக் கொண்டார். தனிக் குடித்தனம் தொடங்குவதற்கான ஆயத்தங்கள் செய்தார்.

வாழ்க்கைக் கடலில் தாம்பத்தியப் படகு கிளம்பிவிட்டது. ஆடி அசைந்து சென்றது. ஏறி இறங்கிச் சென்றது. மனைவியின் இன்முகத்தையும், தாம்பத்தியத்தின் புதுருசியையும் அனுபவிப்பதில் சில தொல்லைகள் என் கண்முன் நிற்காமலில்லை.

பிரச்சினைகள் தலை தூக்கின. புதுக் குடித்தனச் சமயம் கொஞ்ச நாள் வந்திருந்த தாயார் கிராமத்துக்கே போய்விட்டாள். அத்தனை வாடகை அதிகம் கொடுக்க முடியாததால் வேறு சிறு இடத்தைப் பார்த்துக் கொண்டோம்.

என்னென்ன கனவுகள் கண்டேனோ அதையெல்லாம் ஒன்றுகூட நிறைவேற்ற முடிவதில்லை. மாலை ஐந்தரை ஆறுக்கே ஜானகி வாசலில் என் வரவை எதிர்நோக்கிக் காத்திருப்பாள். என்னாலோ அவ்வளவு சீக்கிரம் வர முடிவதில்லை. என் 'ஹெட் கிளார்க்' தன் மேலிடத்து அபிமானம் பெற ஏழு, எட்டு என்ற வரையில்கூட இருப்பார் சில நாட்கள். 'அதைக் கொடு, இதை எடு' என்று என் உயிரையும் எடுத்துவிடுவார்.

சோர்ந்து போய் உள்ளத்தை வீட்டிலே முன்னாலேயே ஓடவிட்டு, மின்சார ரயிலில் வெளி இருட்டையே வெறித்துப் பார்த்துக்கொண்டு வந்து இயந்திர மனிதன் போல் மெத்தைப் படி ஏறி இறங்கி வீடு வந்து சேருவேன்.

எதிர்பார்த்து ஏமாந்து போய் விளக்கைக்கூட ஏற்றாமல் உட்கார்ந்திருப்பாள் ஜானகி.

சாப்பாடு, படுக்கை, யோகக்ஷேம மெல்லாம் எங்கள் படுக்கை அறையில் தான். பாதி அறையை அந்தக் கட்டிலே அடைத்துக்கொண்டிருக்கும். சட்டிவிலே பழுப்பேறிய கொசுவலை. அதைத் தொங்கவிடவே எங்களுக்கு வழியில்லை. கட்டிலின் அடியில்தான் பெட்டிகள்.

கலியாணச் சீர் அதில்தான் இருக்கின்றது. இருக்கின்றது என்று நான் அழுத்திச் சொன்னால் என் மனைவியின் கண்களில் நீர் தளும்பும். இரண்டு பேருக்கும் பொதுவாகக் கொடுத்ததுதான் அந்த வெள்ளிப் பாத்திரங்கள். பணம் போதாத போது அவை பெட்டியை விட்டுக் கிளம்பும்; மார்வாடிக் கடையை அடையும்.

உழைத்துச் சம்பாதித்தவர்கள் ஆண்கள்; செலவிடும்போதோ, இழக்கும்போதோ அவர்களுக்கு வேதனை அதிகமாவதில்லை. முத்தை ஈனும் போது சிப்பி படும் துயரம்போல் இழக்கும்போதும் பெண்ணுள்ளம் வேதனைப்படுகிறது. அணிகலன்களை அடைவதிலேற்படும் இன்பத்தைவிட இழக்கும்போது ஏற்படும் துன்பந் தான் அதிகம்.

என் கனவுக்ள் தேய்வதை நான் கண்டேன். வருமானம் போதாமல் துயரம் மேலிடும்போது தாம்பத்தியத்தில் ஏற்படும் சிறு வேதனையும் பூதாகாரமாகத் தோன்றத் தொடங்கி விடும்.

தனிக் குடித்தனம் வைத்து ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. மனைவி இரண்டு தடவைகள் பிறந்த வீடு போய் வந்துவிட்டாள். அந்தத் தடவையும் அவள் ஊருக்குப் போக வேண்டும் என்று அவள் கேட்ட போதுதான் எனக்கு ஆத்திரம் வந்தது. அவள் மாமா வந்திருந்தார். அடுத்த வாரம் ஊருக்குப் போகப்போவதாகக் கூறினர். தன் சொந்தக்காரரைப் பார்த்தவுடன் ஜானகிக்கு ஊர் நினைவு வந்துவிட்டது.

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி

'பொன்னி'யின் புதுமைப் பித்தன் சிறுகதைப் போட்டிக்கென வந்த சிறு கதைகள் அனைத்தும் போட்டிக்குரிய நிதிக் குழுவினரின் பரிசிலனையில் இருக்கின்றன. பரிசிலனை முடிந்து, ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் முடிவு தெரிவிக்கப்படும். போட்டியில் கலந்து கொண்ட எழுத்தாள அன்பர்கள் இதைக் கவனிப்பார்களென நம்புகிறோம்.

"ஊருக்கு மாமா கூப்பிடுகிறார். ஊரில் மார்கழித் திருநாள். தேர் பார்க்கவேண்டும்..."

"ஹூம்..."

"ஹூம் என்றால்...வாயைத் திறந்துதான் சொல்லுங்களேன்"

"......"

"உங்கள் மௌனம் எனக்குத் தெரியும். இந்த வீட்டில் அடைந்து நாள் பூராவும் கிடக்கவேண்டும். ஆபீஸ், வீடு இது இரண்டும் தவிர உங்களுக்கு ஒன்றும் வேண்டாம்..."

"என்னச் செய்யச் சொல்லுகிறாய்"

"என்ன செய்யச் சொல்லுகிறேன்? நான் என் ஊர் உலகம் போல் தினமும் சினிமா கச்சேரி என்று கேட்கிறேனா? பட்டுப் புடவையும் பீதாம்பரமும் கேட்கிறேனா..."

"ஆமாம் பட்டும், பீதாம்பரமும் கேளேன். வாங்கிக் கொடுக்கக்கூடிய நிலையில் இருப்பவனாயிருந்தால் கேட்பாய்"

"பேச்சை எங்கேயோ கொண்டு செல்கிறீர்கள். ஒன்றும் நான் கேட்காமல் இருக்கும்பொழுதே இப்படி 'உம்' என்றிருக்கிறீர்களே..."

"இதுபோதும், ஒரு குறைவும் இருப்பதாகத் தெரியவில்லை எனக்கு. சாப்பாடுக்குக் குறைவில்லாத வரையில் சரிதான்."

"அதுவா பெருமை? வைத்ததை ஒன்றுமே வாங்கவில்லை. கைவளையல் கூட வாங்காமல் நான் ஊருக்குப் போனால் கேட்கமாட்டார்களா? என் அண்ணி வந்திருப்பாள்..."

"அதற்குத்தான் இப்போது ஊருக்குப் போகவேண்டாம் என்றேன்... அடுத்த மாசம் எப்படியாவது உன் வளையலை வாங்கிவிடுகிறேன்"

"நமக்கு அடுத்த மாசம் என்பதே கிடையாதே, தெரியாதா எனக்கு! என் மாமா கேட்டபோதகூடப் பெட்டியில் இருக்கிறது என்று விட்டுக் கொடுக்காமல் கூறினேன். இப்படி வைத்ததை வாங்காமல் இருக்கிறது அப்பாவுக்குத் தெரிந்தால்..."

"என்ன அடுக்கிக்கொண்டே போகிறாயே... அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன செய்துவிடுவார்? நகைகள் எல்லாம் எதற்காக இருக்கின்றன? ஆபத்துக் காலத்தில் உதவத்தானே..."

இதைச் சொல்லிக்கொண்டே திடீரென்று படுக்கையைவிட்டு எழுந்தேன்.

"சரி சரி, பாதி ராத்திரியில் கத்தாதீர்கள். எனக்கு ஊரும வேண்டாம் உலகமும் வேண்டாம். இங்கேயே அடைந்து சாகிறேன்" என்று என் மனைவி தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

நான் மௌனமாயிருந்தேன். எதிரேயுள்ள படத்தைப் பார்த்துக்

கொண்டே யோசனை செய்தேன். ஏழாம் தேதிக்கு இன்னும் எட்டு நாட்களிருக்கின்றன. அந்த 'ஏழாம் தேதியே இந்தத்தடவை சம்பளம் வருகிறதோ, வெறும் பட்டியலில் கையெழுத்து வாங்குகிறானோ என்று எண்ணினேன். சம்பளம் வந்துதான் பயன்? இந்த மாதம் கழுத்தைப் பிடிக்கும் தொல்லைகள் இருக்கின்றனவே.....!

இப்படிப் பலப்பட எண்ணியவாறே தூங்கிவிட்டேன். திடீரென விழித்துக்கொண்ட போதுதான் அவள் விம்பிக்கொண்டிருந்தது தெரிந்தது.

அவளைச் சமாதானப்படுத்த வேண்டும்போலிருந்தது. அவளுக்குத்தான் வேறு என்ன ஆறுதல்? கணவனைத் தவிர வேறு யார்?

பெண்களே விசித்திரம். பெண் குழந்தைகளைத் தாயார்கள் சீராட்டி வளர்க்கிறார்கள். எட்டு வயதிலிருந்தே வீட்டு வேலை செய்யக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஏதாவது தப்பிதமாகவோ, முகங்கோணியோ இருந்தால் "இப்படித்தானடீ புருஷன் வீட்டுக்குப் போய் இருக்கப்போகிறாய்" என்று கேட்க ஆரம்பித்துவிடுகிறார்கள்

பிஞ்சு உள்ளத்தில் கணவனைப் பற்றிய கற்பனை விழுகிறது; மறைகிறது, மீண்டும் ஏற்படுகிறது. பதினாறு பதினேழு வயதில் மீண்டும் மாப்பிள்ளை தேடும் படலம். பெண்ணின் கற்பனை வளர்கிறது. வரப்போகும் கணவனையும், நடத்தப்போகும் வாழ்க்கையையும் பற்றிக் கற்பனைப் படுத்திக்கொள்கிறாள்.

கலியாணமானவுடன் கணவனது முதல் அரவணைப்பு அவளைப் புதுச் சுவர்க்கத்திலாழ்த்தி விடுகிறது. கணவனைவிட மேலானவர்களில்லை என எண்ணிவிடுகிறாள் பெண்.

தாம்பத்தியச் சக்கரத்தைச் சுழற்றுபவர்கள் இருவருமே. கணவன், மனைவியைப் புரிந்து கொள்ள வேண்டும்!

ஜானகியிடம்தான் கூறிவிட்டேனே ஊருக்குப் போகச் சொல்லி. தேர் பார்க்க அவளுக்கு ஆசை! திரும்ப அழைத்து வரும்போது நான் வருதாகக் கூறியிருக்கிறேனே. அவள் நிச்சிந்தையாகத் தூங்கிச் சந்தோஷமாக இப்பது ஒன்றே போதும். வீட்டை அவள் சிறைக்கூடமாக எண்ணக்கூடாது இப்படியெலலாம் நான் எண்ணிக் கொண்டேன்.

★

காலையில் எழுந்தவுடன் பழைய நண்பன் ஒருவனைத் தேடிச் சென்றேன். நான் கேட்டதை மறுக்கவில்லை. வேறு என்ன கேட்டிருக்கப் போகிறேன்? கடன்தான். அந்த நாலு நோட்டுக்களையும் பையில் போட்டுக் கொண்டு மார்வாடியிடம் போய் ஜானகியின் வளையல்களை மீட்டுக் கொண்டு வீடு வந்தேன்.

"ஜானகி, கையை நீட்டு"

"என்ன, சொல்லுங்களேன்"

"நீட்டென்றால் நீட்ட வேண்டும்"

அவளுடைய கையில் பொன் விலங்கை மாட்டினேன்.

"எப்படி வாங்கி வந்தீர்கள்?"

"எப்படியோ"

"எனக்குத் தெரியாதம்மா, இப்படி கடன் அடைக்கக் கடன் வாட்டுவது..." என்று ஜானகி வளையல்களை ஒருமுறை தடவிப் பார்த்துக் கொண்டாள்.

"கடன், கடனடைக்க மட்டுமா தாம்பத்தியச் சக்கரம் நம்மைப் போன்றவருக்குச் சுலபமாக ஓடவுங் கூட" என்றேன் கையிலிருந்த சாக்லெட்டை அவள் வாயில் திணிக்க.

"ஐய, யாராவது பார்க்கப்போகிறார்கள், காலம்பற வேளையிலே இந்த நாடகத்தை" என்றாள் துணிவி கன்னங்குழிய, வெட்கத்தால் செந்நிற ரேகைகள் முகத்தில் படர.

யார் கேலி செய்து கொக்கரித்து என்ன சொன்னால் எனக்கு என்ன? தாம்பத்தியம் சரியாக நடந்தால் போதும்...! ★

பொழுதுபோக்கு

ராதா

பெண் மனம்

புராணக் குப்பைகளைப் படமாக்கி வந்த படாதிபதிகளெல்லாம், இப்போது சமூகப் படங்களைப்பிடித்துச் சமுதாயத்தைச் சீர்திருத்த முற்பட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே தான், புராணப் படங்களையே இதுவரை தயாரித்து வந்த டைரக்டர் சௌந்தரராஜன் பட உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ண எண்ணி 'பெண் மனம்' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார். ஆனால், படம் தோல்விப் பாதையிலே நடை போடுகிறது.

நடிப்புக் கலைஞர் டி. கே. சண்முகம் பொறுப்புணர்ந்து நடித்திருக்கிறார். கொழும்புத் தெருக்களிலே பழக்கப்பட்ட ரிக்ஷாக்காரனைப் போல் ரிக்ஷா இழுக்கிறார். ஆனால் இவரின் நடிப்பு இதில் சோபிக்கவே இல்லை. இனிமேல், இம்மாதிரிப் படாதிபதிகளின் படங்களிலே நடித்து தன் நல்ல பெயரைக் கெடுத்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன். இதுவரை மீசையோடு காட்சியளித்து வந்த வி. கே. ராமசாமி, அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி இதில் மீசையே இல்லாமல் தோன்றுகிறார். இவரின் நடிப்பில் ரசிகர்கள் பெரிதும் ஏமாற்றமடைகிறார்கள். ராஜம்மா குறை சொல்ல முடியாதபடி உணர்ச்சியுடன் நடித்துத்தன் நல்லபெயரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறார். மேனகாவிற்குச் சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. இதில் தாராளமாக நடிக்கின்றார் மேனகா! எஸ். ஏ. நடராசன் வழக்கமான தொண்டையுடன், வழக்கமாகவே நடிக்கிறார்.

கதையின் முடிவு எதிர்பாராத விதமாக — ஆனால் அசம்பாவிதமாக இருக்கிறது. ஒரு தாய், தன் மகன் என்னதான் கொடியவனாக இருந்தாலும் மனம் வந்து அவனைச் சுட்டுக் கொல்ல மாட்டாள். மக்களுக்கு ஒரு அதிர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்று கருதிக் கதையை இப்படி முடித்திருக்கிறார் டைரக்டர். வள்ளியின் முடிவு என்ன ஆயிற்று என்றே காட்டப்படவில்லை.

கிராமத்து இயற்கைக் காட்சிகள் நல்ல முறையில் படமாக்கப் பட்டுள்ளன. ஒளி, ஒலிப் பதிவுகள் திருப்திகரமாய் இல்லை. பாடல்களிலே 'வாழ்வில் ஆனந்தமே' என்ற பாட்டுத் தான் இனிமையுடன் அமைந்திருக்கிறது.

சண்முகம்—ராஜம்மா இவர்களின் நடிப்பிற்காக வேண்டுமானால், படத்தை ஒரு முறை பார்த்துவைக்கலாம். ★

பேச்சு வழக்குகள்

கட்டுரை: பி. எல். சாமி

பேசுவதுபோல் எழுதலாமா?

'பேசுவதுபோல் எழுதவேண்டும்' என்று பல எழுத்தாளர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் 'யார் பேசுவது போல்' 'எங்கு பேசுவதுபோல்' என்ற கேள்விகளை எழுப்பினால், பதில் பலவகையாக இருக்கும். 'ரிக்ஷாக்காரர்கள்' பேசுவதுபோலா? கோயமுத்தூர் கொங்கு வேளாளர் பேசுவது போலா? பாண்டிநாட்டுக் கள்ளர் மறவர் பேசுவதுபோலா? அல்லது அக்கிரகாரத்தில் பேசுவது போலா? பேசுவதுபோல் எழுதுவது பொதுவாக நல்லதாயிருப்பினும், பேசுவதுபோல் எழுதுவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் எழுதுவதுபோல் மக்களைப் பேசத் தூண்டுவதும்! இந்த உண்மையைப் பலர் உணர்வதில்லை.

பேசுவதுபோல எழுதுகிறோம் என்று பறை சாற்றுவோர், "அஜகஜாந்திரம், ஸ்வச்சமான, அங்குரார்ப்பணம், சமர்ப்பணம்," என்ற காதிலும் கேட்டிராத சொற்களை வழங்குகின்றனர். இம்முறையில் புரியாத சொற்களைப் புகுத்துவதே 'தெய்வப் பிரீதி'யான செயலாகவும், அதுவே தமிழணங்கின் 'சௌலப்பியத்தை' உயர்த்தும் 'கைங்கரியமாக'வும் கருதுகின்றனர்.

அருமையான வழக்கு

தமிழில் பேச்சு வழக்குகளுக்குப் பஞ்சமேயில்லை. அழகிய அருமையான வழக்குகள் தமிழ்நாட்டில் மக்களின் நாவிலும் நடையிலும் தவழ்கின்றன; உலவுகின்றன. இவைகளை எளிதாக எழுத்தாளர்கள் கையாளலாம். 'சுகி' போன்ற எழுத்தாளர் சிலர் திருநெல்வேலித் தமிழையே தமது 'நாவல்'களில் வெளுத்து வாங்குவதைப் பார்த்திருக்கலாம். சென்னை எழுத்தாளர் சிலர், இங்கு வழங்கும் இழி வழக்குகளையும், கலப்படத் தமிழையும் கையாளுகின்றனர்.

பேச்சு வழக்குகளை ஆராய்வது ஒரு சிறந்த பொழுதுபோக்கு. சில வழக்குகள் பண்டைய இலக்கிய அடிப்படை கொண்டு தொன்றுதொட்டு வருகின்றன. சில இடைக்காலத்திலும் தற்போதும் தோன்றின. சில வழக்கு இலக்கிய நயம் பொருந்தியவை. சில உவமை பழமொழி உருவில் உலவுகின்றன. சில வழக்குகள் படம் பிடிப்பதுபோலக் கருத்தை வருணிக்கின்றன.

மொழியும் நிலநூலும்

'பிக்மாலியன்' என்ற ஷா எழுதிய நாடகத்தில் ஒரு பேராசிரியர் வருகிறார். மக்கள் மொழியைப் பேசும் முறையிலிருந்தும், வழங்கும் பேச்சு வழக்குகளிலிருந்தும், இங்கிலாந்தில் இந்த விடத்தார், இன்ன இனத்தார் என்று அவர் சொல்லி விடுவார். கொங்கு வேளாளரை இராகம் இழுத்துப் பேசுவதைக் கொண்டே கண்டுபிடித்து விடலாம். அதுபோல் மதுரை, திருநெல்வேலிக்காரரையும், வடஆர்க்காட்டாரையும் சென்னை வாழ்வோரையும், பேச்சு வழக்குகளைக் கொண்டே, அறிந்து விடலாம்.

இங்கே தமிழக மாவட்டங்களின் சில அருஞ் சொல்வழக்குகளைத் தேர்ந்து தர விரும்புகிறோம்.

'பெண் பெரிதாய் விட்டாள்' என்பர் பலர், சிலர் 'புஷ்பவதியாகி விட்டாள்' என்பர். ஆங்கிலம் படித்தவர்கள் பெருமையாக 'மேஜர்' ஆகிவிட்டாள் என்பர். 'பூப்பு எய்தி விட்டாள்' என்பது பண்டிதர் வழக்கும் திருநெல்வேலி வழக்கும் ஆகும்.

'சமைந்துவிட்டாள்' என்பது தென்னார்க்காட்டு வழக்கு. 'திரண்டுவிட்டாள்' என்று அழகாகக் கூறுவர் வட ஆர்க்காட்டினர். பசு கன்று ஈன்றவுடன் தரும்பாலைச் 'சீம்பால்' என்கின்றனர். சில இடங்களில் 'சின்னப்பால்' என்பர். வட ஆர்க்காட்டில், இலக்கிய மணத்தோடு 'கடும்பால்' என்று வழங்குவர்.

திசை வழக்குகள்

எண்ணெயில் காய்கறிகளைப் பதமாக்கும் இரும்புச் சட்டியை 'வறுக்கஞ் சட்டி' என்பர். கொங்குநாட்டில் 'பொரிக்கஞ் சட்டி' என்பர். 'கிடாய்' என்பர் தமிழ்நாட்டின் வட எல்லைகளிலிருப்போர். 'பாணல்' 'வாணல்' என்பதும் அவர்கள் வழக்கு.

'படுகாலிப் பயல்' என்பது மதுரை—அதாவதுதென்மாவட்டத்தார்வாயில் வரும் அன்றாடவழக்கு. 'துடைக்காலி' என்பர் தென்னார்க்காட்டார். 'ஆடுகாலன்' என்பர், கொங்குநாட்டார்; 'போடுகாலான்' என்பாரும் உளர். 'விடுகாலிப் பெண்கள்' என்று பரத்தையரைக்கூறுவர், சில இடங்களில்.

தனிக் காசுகளை 'விடுகாசு' என்பர் கொங்குநாட்டில். தனித்த பூக்களை 'விடுபூ' என்பது இலக்கிய வழக்கு. 'உதிரிப்பூ' என்பது பேச்சு வழக்கு.

'செருப்பு' என்பார் பலர். சில பகுதியினர் 'மிதியடி' என்பர். புதுக்கோட்டைக்காரர்கள் 'நடையன்' என்பர். 'ஜோடு' என்பாரு முளர். 'தொடுதோல், புதைஅரணம், பாதரக்ஷை' என்பன இலக்கியவழக்குகள்.

சிறிதளவை 'கொஞ்சூண்டு' என்பார் பலர். 'இத்துனூண்டு' என்பார் சிலர். 'துக்குனூண்டு' என்பார் தஞ்சை மாவட்டத்தார். தென்னார்க்காட்டினர் 'ரவூண்டு' என்பார். 'து' 'இறை' என்பன சிறிதைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள்.

'மாடு சினையாகி விட்டது' என்பது பரந்த வழக்கு. 'பயிராகி விட்டது' என்பது தென்னார்க்காட்டில் வழங்குகிறது. 'பலன்பட்டது' என்பதும் காணும் வழக்காகும்.

'கேலி பண்ணுகின்றான்' என்கிறார்கள். 'கிண்டல், கெண்டை பண்ணுதல்,' என்பனவும் உள. 'உடைசல்' என்பார் கொங்குநாட்டார்.

விரைவாக என்பதை 'விரசலாய்' என்றும், 'சுருக்கா' என்றும், 'சட்னு' 'சீக்கிரம்' என்றும் வழங்குவதைக் கேட்டிருக்கலாம்.

மாமிசத்தைக் 'கறி'என்பார் பலர். தெற்கு வட்டங்களில் 'இறைச்சி' என்பார்கள். 'ஊன்' என்பர் மலையாளத்தார்.

பேசும் இலக்கியம்

இலக்கிய அடிப்படையைக் கொண்டுவரும் பல அழகிய பண்டைச் சொற்கள் பாமரர்கள் வாயில் வழங்குகின்றன. இவ்வழக்குகளில் பல பாண்டிநாட்டில் உலவுகின்றன. 'சோம்பல் கூடாது'என்பதற்கு 'மடியக்கூடாது' என்றும்,'ஞாபகமில்லை' என்பதற்கு 'ஓர்மையில்லை' என்றும், பைத்தியத்தைக் 'கோட்டி' என்றும், கெட்ட நாற்றத்தை 'வீச்சம்' என்றும் வழங்கி வருபவை சில. மணமாகாத பொறுப்பற்ற இளைஞர்களை 'விடலை' 'இளவட்டம்'என்பது தென் மாவட்ட வழக்காகும். 'கலியாணமாகாத தண்டுவன்' என்பதும் ஒரு வழக்கு. 'விடலை' என்பது கீழே விழுந்துவிடும் சிறு தென்னங்காய்க்கும் பெயர். இதைத் 'தென்னங் கூந்தல்' என்பார் நெல்வேலித் தமிழர்.

'மத்தியானம்' என்பர் படித்து நாகரிகமடைந்தவர். 'உச்சிவேளை' என்பார் சில பகுதியினர். 'உரும்' என்பது இலக்கியத்தில் அரிதாக வழங்கும் தூயசொல், சூரியனைக் குறிக்கும். இதுவே 'உச்சி உருமவேளை' என்று பாமரர் பேச்சுவழக்கில் தவழ்கிறது.

பாக்கைப் 'பிளவை' என்று கூறும் இலக்கிய வழக்கையே பேச்சில் ஈழத்தார் வழங்குகின்றனர்.

'தள்ளு'என்பதைத்'தூக்கித்தள்ளு' என்பர் வடார்க்காட்டார். 'தூக்கு' என்ற பண்டைச் சொல் தெலுங்கி லும் வழங்குகிற . 'சகோதரன்' என்று நாம் கூறுவோம். நாட்டுப் புறத்தில் 'ஒடம்பிறந்தான், பிறந்த வன்' என்ற அழகிய வழக்குகளைக் கையாளுவர்.

'மாசு' என்ற சொல் மேகத்தைக் குறிக்கும் இலக்கியச் சொல். புது வையிலிருந்து பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். என்னருகில் அமர்ந்திருந்தவர் மேக மூட்டம் போட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு 'மானத்தில் மாசுநிறைய இருக்கிறது,மழை பெய்யும்'என்றார். 'மாசு' என்ற சொல் புதுவையில் புகுந்து உயிருடன் இருப்பது எனக்கு வியப்பைத் தந்தது!

கலையும் தமிழும்

மேகங்கள் கூடிக் கருக்கலிட்டு மழை பெய்வதைக் குறித்து வழங்கும் பேச்சு வழக்குகள் இடத்திற்கிடம் மாறுகின்றன. வானம் 'செனைப் படுது' என்பர் தென்னார்க்காட்டில். 'சூல்கொண்ட மேகங்களை வர்ணிக் காத கார்காலம்பற்றிய பாடல்களைச் சங்க இலக்கியத்தில் காண்பதரிது.

குள்ளமான என்பதற்கு 'கூழை யான' என்பர் கொங்கு, மதுரை வட் டத்தார். உண்மையாக, சத்தியமாக என்பதற்கு 'உளுமையாக' என்று தென்னாற்காட்டில் நாட்டுப்புறத்தார் கூறுவர். 'உரைமுதல் காட்டி உளமை கூறி' என்ற பெருங்கதை வரியில் 'உளமை' உண்மை என்ற பொருளில் வழங்குகின்றது. உளமை என்ற சொல்லே உளுமை என்று மாறிற்று.

அழகாக என்பதற்கு 'வடி வாக' இருக்கிறது என்று ஈழத்தார் கூறுவர். 'வடிவு' இலக்கியச் சொல் லாகும்.

'உங்க பிள்ளைமட்டும் ஓவியமோ' என்று மனைவி கணவனைக் கேட்கும் பேச்சு வழக்கு திருச்சி மாவட்டத்தில் வழங்குகிறது. 'உங்க பிள்ளை மட்டும் ஓசத்தியோ' என்று வழங்குவதே அதன் பொருள். 'ஓவியம்' அழகிய அருமையான விலையுயர்ந்தபொருள். நுண் கலைகளில் ஒன்று. ஆதலின் மக்களின் உயர்வை ஓவியத்தின் சிறப்பால் உணர்த்துகின்றது இவ் வழக்கு. வியப்பைத் தருவது ஓவியம். 'அதிசயப் பிள்ளையோ' என்பதற்கு 'ஓவியமோ' என்று கூறுகின்றனர். குழலோசை, யாழிசைகளை மழலைக் கொப்பில்லை என்று கருதும் தமிழ் நாட்டில் ஓவியத்தைக் குழந்தையொடு ஒப்பிட்டுப் பேசுவது வியப்பில்லை. இது இலக்கிய வழக்காகும்.

'சித்திரப்பூமி வித்தக நோக்கி' என்று வரும் பெருங்கதை வரியிலும் 'சித்திரம்' எனும் சொல் 'ஆச்சரிய மான' என்று பொருள் தருகின்றது.

கலைச்சொல்லாக்குபவர்க்கு ஒரு கருத்துரை

'இசை கேடாய் மாட்டிக்கொண் டேன்' என்ற வழக்கில் இசைக் கலையைப் பேச்சு வழக்கில் பயன் படுத்துகிறார்கள். 'மதிசுதி இல்லா மல் பேசாதே' என்கிறார்கள். சுருதி, ஒழுங்கு இல்லாதஇசை, பயனற்றது. சுருதி 'சுதியாகி' மதியுடன் கூடி முட்டாள் தனத்தைக் குறிக்கின்றது, இப்பேச்சு வழக்கில்.

சென்னைக் கண்காட்சிச் சாலையில் ஆண் சிங்கத்தைப் பெண்புலியோடு சேர்த்ததில், புலி புது முறையான குட்டிகளைப் பெற்றது. இம்முறை யில் தோன்றும் புது இனத்தைக் கலப்பினம் (*Cross Breed*) என்பர் கலைச்சொல்லாக்க அறிஞர். இதற்குப் புதுச்சொல்லைத் தேடி அலைகின் றனர். ஆனால் கொங்கு நாட்டில் 'இடைவெட்டு' எனும் சொல் இதே பொருளில் வழங்குவதைப் பலர் அறியார். இச்சொல்லையே கலைச் சொல்லாகக்கொள்வது,புதுச்சொல் புனைவதை விடச் சிறந்தது.

உவமைகள், பழமொழிகள்

சில வழக்குகளில் பழமொழிகள், உவமைகள் அடங்கியுள்ளன. சில

கருத்தை அப்படியே வருணிக்கின்றன. வயிற்றைச் சுட்டிக் காட்டும் வழக்குகள் பல, அழகானவை. 'வயிற்றுக்குப் பால்வார்த்த மாதிரி' 'வயிறு திறந்த வேளை அப்படி' 'வயிறும் பிள்ளையுமா அழகிட்டுக் கிடக்கிறாள்' என்பனசில. குழந்தைக்குப் பல் முளைக்கின்றது என்பதற்கு 'எகிருக்குத் திண்ணை போடுது' என்று வழங்கும் பேச்சைப் பலர் கேட்டிருக்க மாட்டார்கள்.

'அந்தஸ்துக் கெட்டவன்' என்பதற்கு 'வாசற்படியிருந்தவன்' என்பது ஒரு வழக்கு. 'மதியாதார் வாசல் மிதியாதே' எனும் பழமொழியிலிருந்து இவ்வழக்கு வருகின்றது.

'பின்னாலே கோடாலி போடறதைவிட இப்பவே நகத்தாலே கிள்ளி விடுகிறதுநல்லது' என்கிறார்கள். இது,

"இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"

என்ற குறளின்பொருளைத் தாங்கி வருவதை நோக்குக. அனுபவ மற்றவனை 'இளசு' என்றும் 'பசலை' என்றும் தென்வட்டங்களில் வழங்குகின்றனர். 'அறியாப்பிள்ளை' என்பர் தென்னார்க்காட்டில்.

நல்ல அனுபவமுள்ளவனைப் 'பழமுந்தின்னு கொட்டையும் போட்டவன்'என்று பாண்டிநாட்டில்கூறுவர். மணமாகி பல ஆண்டுகள் குழந்தை இல்லையென்றால் 'கலியாண மாகி ஒரு பூவுன்னு பூக்காமே, காய்னு காய்க்காமே' என்று பேசுகிறார்கள். பூ, காய், பழம் கொட்டையெல்லாம் பேச்சு வழக்கில் வருகின்றது.

மரூஉ வழக்குகள்

'என் கைப்பூப் பறிக்கவா போச்சு, தீவட்டிப் புடிக்கவா போச்சு' என்பன சில வழக்குகள். முட்டாளைத் தீவட்டிப் பயல், முட்டுக்கட்டை என்பர். முட்டாளை 'கூமுட்டைப்பயல்' என்று வழங்குவது கொங்குநாட்டு வழக்கு. 'கூழ்முட்டை' என்பதே கூமுட்டையாகியது. கூழ்பட என்று பெருங் கதையில் ஒரு சொல் வருகிறது. இதற்குக் 'கலக்கமுண்டாக' என்று பொருள் கூறப்பட்டுளது. 'கூழவன்—தெளிவில்லாதவன்' என்பார் நீலகேசி உரையாசிரியர். அழுகிய கலங்கிய முட்டைபோன்றவன் என்பதே 'கூமுட்டை' என்பதின் பொருள். பெருங்கதை ஆசிரியர் கொங்குவேண் மாக்கோதை கொங்குநாட்டு வழக்கைக் கையாண்டிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

திருநெல்வேலி மாவட்ட வழக்குகளே ஒரு தனிப் போக்குடையவை. 'நன்றாக அடித்தான்' என்பதற்கு 'செலவுக்குச் செமக்கக் கொடுத்தான்' என்பார்கள். திருச்சியில் இச் செலவு என்ற சொல் வேறு பொருளில் வழங்குகிறது. 'என்ன செலவுக்கு என்று' என்று கூறினால் 'எனக்கு என்ன வந்தது' என்பதே அதன் பொருள். 'எலே என்ன, தண்ணி தூக்கினையா, இல்லை உன்னைத்தான் தண்ணி தூக்குதா' என்ற தன்வினை பிறவினையாகி வரும் வழக்குகள் நெல்வேலிக்கே உரித்தானவை.

மலிவானது என்பதற்கு'சல்லிசா' என்பர் தென்னார்க்காட்டில். எளிதில் கிடைக்காது, அரிது என்ற பொருளில் 'வல்லிசா' என்ற சொல் கொங்குநாட்டில் வழங்குகிறது. நல்லது, சிறந்தது என்ற பொருளில் 'பதவிசு' 'நறுவிசு' என்ற சொற்கள் வடக்கில் வழங்குகின்றன. 'பிரயோசனமில்லை, பாவாயில்லை' என்று சொல்வதை தென்னார்க்காட்டில் 'தகாதில்லை' என்று அழகாகக் கூறுவர். 'தேவலை' என்பதும் ஒரு வழக்கு. மலிவாக இருக்குது, அதிகமாயிருக்குது, கூடுதலாயிருக்குது, மிச்சமாக, கொள்ளையாக என்பன மிகுதிப் பொருளைக் குறித்துவரும் பல வழக்குகள்.

பானை உடைந்தால் அதைக் குறித்து வழங்கக்கூடிய வழக்குகளைப் பார்ப்போம். பானை நுனியில் உடைந்தால் முனையிலுடைந்தது என்பதற்கு 'சொனையிலுடைந்தது'

என்பர் வடார்க்காட்டார். 'வாய்ப் பாட்டில்' உடைந்தது என்பதும் வழக்கு. செங்குத்தாக உடைந்ததை 'நிலைக்குத்தாய்' உடைந்தது என்பர். பக்கத்தில் உடைந்தால் 'அல்லையில்' உடைந்ததென்பர். அடியில் ஓட்டை விழுந்த தென்றால் 'சில்விட்டது' என்பார். வடார்க்காட்டில் அடியில் 'தொண்டி' விழுந்தது என்பார்.

இன வழக்குகள்

சில பேச்சு வழக்குகள் இன மதத்திற்கேற்ப, சிறிதளவு மாறுவதையும் காணலாம். 'தாச்சுக்கோ' 'தூத்தம்' அம்மாஞ்சி, காமிராஉள், அத்திம்பேர், ரேழி, சொல்லச்சே, என்பன சில பார்ப்பனரிடை வழங்கும் பேச்சு வழக்குகள். இவைகளில் சில தூய தமிழ்ச் சொற்கள், சில வடமொழி தழுவியவை. 'சமையல்உள்' என்பர் பார்ப்பனர். 'அடுக்களை' என்பர் பலர். சமையலறையைக் 'குசினி' என்ற போர்த்துக்கீசியச் சொல்லால் வழங்கும் கிறித்துவர்களும் உளர். சென்னைப் பகுதியில் பயிலும் வழக்குகளில் பல, தமிழ்மரபுக்குப் புறம்பானவை; பிறமொழியிலிருந்து புகுந்தவை. சில இழிவழக்குகள் 'திராணி' 'திராப' 'பேஜாராக்' 'சம்மியாக்' 'டகுல்பாச்சிப் பயல்' 'பலான பேர்வழி' முதலிய பல வழக்குகள் சென்னையிலும் அதைச்சுற்றிய மாவட்டங்களிலும் பெரிதும் வழங்குகின்றன.

தொல்காப்பியம்: திசைச்சொல்

சிறந்த பேச்சு வழக்குகளை அந்தந்த இடங்களிலிருந்து எடுத்து இலக்கியத்தில் கையாளுவது மிகவும்நல்லது. தொல்காப்பியம் திசைச்சொல் என்று குறிப்பது இப் பேச்சு வழக்குகளையே. சிந்தாமணி, சிலப்பதிகார உரையாசிரியர்கள் பேச்சு வழக்கு மாற்றங்களை அங்கங்கு காட்டிக்கொண்டே செல்கின்றனர். பாமரர் வாயில் பல நயமான அழகிய வழக்குகள் வழங்குகின்றன. அங்கங்கு அவைகளைத் திரட்டி ஆராய்ந்து 'பேச்சு வழக்ககராதி' வெளியிடுதல் தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். அதை இன்றே செய்யவேண்டும். ஏனெனில் பட்டணத்துப் போலிப்பகட்டு வழக்குகள் இயற்கையான பொருள் செறிந்த நாட்டுப்புற மக்களின் பேச்சு வழக்குகளை விரட்டி வருகின்றன. பேச்சு வழக்குகளின் பெருமையையும் அருமையையும் அறிந்து அவைகளைத் தொகுப்பது அறிஞர்களின் கடமையாகும். ★

சஞ்ஜீவன் சிலாஜித் லேகியம் எல்லாக் காலங்களிலும் பலத்தை அளிக்கிறது.

இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம்

இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும், தாது விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்று வலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகுமூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை:- 44 நாட்கள் டப்பி ரூ. 5-4-0 | தபால் செலவு
22 ,, ,, ரூ. 3.4-0 | இனம்

நீலகிரி டிப்போ, அரிசிப்பேட்டை சவுக், பெங்களூர் சிட்டி.

NILGIRI DEPOT, AKKIPET SQ., BANGALORE CITY.

ஓடோடி வந்தும்....!

ஆனந்ததீர்த்தன்.

பம்பாய் மலபார்குன்றின் மீதுள்ள பூங்காவைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே தான் காணும் மனோரம்மியமான காட்சிகளை வியந்தவண்ணம் நடந்துகொண்டிருந்த ரகுநாதன், தற்செயலாகத் தன் பார்வையை ஒரு திசையில் செலுத்திய பொழுது ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் மற்றவர்கள் பார்வைக்குச் சுலபமாகத் தெரியாத ஒரு மறைவிடத்தில் இரு இளம் காதலர்கள் நெருங்கி உட்கார்ந்துகொண்டு அந்நியோந்நியமாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். அவள் குஜராத்திப் பெண் என்பதை அவள் ஆடையே எடுத்துக் காட்டிற்று. வாலிபன் மேனாட்டு முறையில் ஆடை தரித்திருந்ததால் அவன் இன்ன ஜாதியைச் சேர்ந்தவன் என்று நிர்ணயிக்க முடியாமல் இருந்தது. ஒரு வேளை, இருவரும் கணவன் மனைவி தாமோ? அன்றி, கூடிய விரைவில் விவாகம் செய்துகொள்ளப்போகிறவர்களோ? அல்லது தற்செயலாக அன்றுதான் சந்தித்துக் கொண்டவர்களோ என்றெல்லாம் எண்ணச் சுழல்கள் ரகுநாதனின் மனத்தில் பலபல தோன்றின.

சிறிது தூரம் நடந்து செல்பவன் போல் நடந்து சென்று தன் பார்வையிலிருந்து அவர்கள் மறையாவண்ணம் ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு அவர்களையே கவனித்தான் ரகுநாதன்.

அப்பெண் நல்ல அழகி. வெண்மையான அழகிய முகம். அடிக்கடி அவள் கலகலவென்று சிரிக்கும்பொழுது தெரிந்த முத்துப்போன்ற பல்வரிசை அவளுடைய அழகை இன்னும் மிகைப்படுத்திக் காட்டியது. அந்தப் பெண் மேலாக்கு மெல்ல நழுவிக் கீழே சரிந்து விழவிருந்த அவளது நிலையை ஆர்வமுடன் அவ்வாலிபன் கவனிப்பதை அறிந்து, நாணங்கொண்டவள் போல நிதானமாக அதைச் சரிப்படுத்திக்கொண்டாள். அந்த ஒரு கணத்தில் அவளது உடலின் சிற்பம் போன்ற வாளிப்பு ரகுநாதனின் மனத்தைக் கிறுக்கியது.

சிறிது நேரத்தில் இருட்ட ஆரம்பித்துவிட்டது. அவ்விருவரின் உருவமும் அவன் பார்வைக்குச் சிறிது சிறிதாக மங்கிக்கொண்டே வந்தது. ஆனால் அவ்விருவருக்கும் மத்தியில் இருந்த இடைவெளி சிறிதுசிறிதாகக் குறைந்துகொண்டே வந்து ஒருவரை ஒருவர் இறுக அணைத்துக்கொண்டு விட்டதை மாத்திரம் ரகுநாதனால் கவனிக்காமலிருக்க முடியவில்லை.

நீண்ட ஒரு பெருமூச்சுடன் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்திருந்து வீடு செல்லப் புறப்பட்டான் ரகுநாதன்.

அவன் கண்ட இக்காட்சி அவனுக்குப் புதுமையாயிருக்கவில்லை. பம்பாய்க்கு வந்து கடந்த பத்து நாட்களில் இதுபோல பல இடங்களில் பலவகை உல்லாச ஜோடிகளைக் கண்டு பெருமூச் செறிந்திருக்கிறான் அவன். சவுபாத்தி கடற்கரை, ஜுஹு, விக்டோரியா கார்டன்ஸ், கேட்கவே ஆப் இண்டியா, மியூஸியம், மெட்ரோ, விபர்டி, ரீகல் இவ்வாறாக அவன் சென்ற இடங்களில் எல்லாம் கட்டு மஸ்தான மராட்டியப் பெண்களும், கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் குஜராத்திக் கன்னிகளும், தங்கள் கண்களினாலேயே ஆடவர் மனத்தை மகிழச் செய்யும் பார்ஸி மங்கையரும், சிறிதும் நாணமோ சங்

கோஜமோ இன்றி தத்தம் ஆடவருடன் கைகளைக் கோத்துக்கொண்டும், சில சமயங்களில் இடுப்பைச் சுற்றி வளைத்து அணைத்துக்கொண்டும் செல்லும் காட்சிகளையெல்லாம் கண்டு கண்டு பழக்கப்பட்டுவிட்டிருந்தான் அவன்.

இவைகளையெல்லாம் காணும் பொழுது அவன் நெஞ்சில் ஒரே ஒரு குறை தோன்றி வருத்தும். அது, தானும் தன் மனைவி சகுந்தலாவை அழைத்து வராமற் போய்விட்டோமே என்ற ஏக்கம். சென்னையிலிருந்து அவன் புறப்பட்ட அன்றைக்கு சகுந்தலா தானும் உடன் வருவதாகத்தான் சொன்னுள். ஆனுல் அவள் தகப்பனுர் வேண்டாமென்று தடுத்துவிடவே அவரை மீறி ரகுநாதனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை. தான்மாத்திரம் புறப்பட்டு வந்துவிட்டான்.

***

ரகுநாதனுக்கும், சகுந்தலாவுக்கும் விவாகமாகி ஆறுமாதங்கள் தான் ஆகியிருந்தன. இந்த ஆறுமாதங்களில் இதுவரை அவர்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் ஒரு நாள் கூடப் பிரிந்ததில்லை. சகுந்தலாவும் அவனும் முதல் முதல் சந்தித்துக் கொண்டதே பம்பாயில்தான். அதுவும், அவன் மலபார்குன்றில் அன்று கொஞ்சிக் குலாவிய காதலர்களைக் கண்டு பெருமூச் செறிந்தானே, ஏறக்குறைய அதே இடத்தில் தான் அவன் அவளைச் சந்தித்தது. சந்திப்பு கண்ஜாடையில் தொடங்கி, புன்னகையில் வளர்ந்து, கைகோர்த்துக் கொண்டு ஆனந்தமாக அரட்டையடிப்பதிலே நீண்டு கடைசியில் கல்யாண நிச்சயதார்த்தத்தில் முடிந்தது. அடுத்த மாதமே இருவருக்கும் சென்னையில் விவாகம் நடந்தது.

அந்த நினைவுகளெல்லாம் மீண்டும் அவனது நினைவுத்திரையில் நிழலாட்டம் போட்டன. அதனுல் சகுந்தலாவின் பிரிவு அவனுக்கு இன்னும் வெப்பத்தை ஊட்டியது. உடனடியாக ஊருக்குத் திரும்பவேண்டும் என்னும் தீர்மானமும் மனத்துள் முளைவிட்டது. முளைவிட்ட எண்ணம் வீடுநோக்கிச் செல்லச் செல்ல உறுதிபெற்றது.

2

"அத்தான் நான் நாளை எக்ஸ்பிரஸிலேயே புறப்பட வேண்டுமென்று இருக்கிறேன்" என்று பேச்சை ஆரம்பித்தான் ரகுநாதன்.

"என்ன ரகு, அதற்குள்ளே அவசரம்? வந்து இப்பத்தானே பத்து நாள் ஆகிறது. இன்னும் சிலநாள் இருந்துவிட்டுப் போகலாமே" என்ருர் ரகுவின் அத்தான்.

"இல்லை அத்தான், நான் போய்த்தான் ஆகவேண்டும். தயவு செய்து தடுக்காதீர்கள். எனக்கு அங்கே போய் நிறையக் காரியமிருக்கிறது."

"டேய், சும்மா அளக்காதே என்னிடம். நீ போய் அங்கே வெட்டி முறிப்பது ஒண்ணுமில்லேன்னு எனக்குத் தெரியும். பெண்டாட்டியை விட்டுப்பிட்டு வந்து ஆசாமிக்கு இங்கே இருப்புக்கொள்ளல்லே. துடிக்கிறுன் கிடந்து. அதுதானே?"

ரகுநாதனன் முகத்தில் அசட்டுக்களை சொட்டியது

"சேசே அதெல்லாம் ஒண்ணுமில்லை" என்று வெளியே சொன்னுலும் அகத்தின் ஆழத்தை முகம் அம்பலப்படுத்திவிட்டது.

ரகுநாதனின் அத்தான் எவ்வளவோ எடுத்துக்கூறியும், ரகுநாதன் மசியவில்லை. மறுநாள் எக்ஸ்பிரஸிலேயே புறப்படப்போவதாகத் தீர்மானமாகக் கூறிவிட்டான்.

"சரி, விருப்பப்படியே செய். ஆனுல் நாளைக்கு ராத்திரி மெயிலில் புறப்பட்டுப்போயேன். நானும் ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்பச் சௌகரியமாயிருக்கும் எக்ஸ்பிரஸில் போவதானுல் நான் ஸ்டேஷனுக்கு வரமுடியாது" என்ருர் மூர்த்தி.

ரகுநாதன் யோசித்தான். மெயில் காலை 5-30 மணிக்கு சென்னைபோய்ச்

சேரும். 6 மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போய்விடலாம். ஆனால் சகுந்தலாவுடன் தனிமையில் பேசவும் விளையாடவும் இரவுவரை காத்திருக்க வேண்டும். அதற்கு முன்னால் சந்தர்ப்பம் கிடைக்காது. எக்ஸ்பிரஸ் என்றால் ராத்திரி ஏழுமணிக்குச் சென்னை போய்ச் சேருகிறது. வீடு சென்று வெந்நீரில் குளித்துவிட்டு, சாப்பாட்டை முடித்துக்கொண்டு உடனே படுக்கச் சென்றுவிடலாம். சகுந்தலாவின் கொஞ்சலும் குதூகலப் பார்வையும் உடனே கிடைத்துவிடும்:

"இல்லை அத்தான், மெயிலில் போவதென்றால் பெரிய தொல்லை. முப்பத்தாறு மணி நேரம் ஆடு மாடு அடைக்கப்படுவதுபோல் அடைபட்டுக்கொண்டு போவதென்றால் பிராணன் போய்விடுகிறது. எக்ஸ்பிரஸ் தான் சௌகரியம்" என்று முடிவாகச் சொல்லிவிட்டான் ரகுநாதன்.

"சரி, அப்படியானால் உன் விருப்பம்" என்று பதிலளித்துவிட்டார் மூர்த்தி.

3

சரியாக பகல் 1-40 க்கு மதராஸ் எக்ஸ்பிரஸ் பம்பாய் விக்டோரியா டெர்மினஸை விட்டுப் புறப்பட்டது. ரகுநாதன் ஒரு இன்பப் பெருமூச்சுவிட்டான்.

"கடைசியாகப் புறப்பட்டுவிட்டோம். இனி முப்பது மணி நேரம் தான். நாளை ராத்திரி சென்னை சேர்ந்துவிடலாம். பிறகு......!" என்று இன்பக் கோட்டைகள் கட்டியது அவன் மனம்.

வழியில் ஒவ்வொரு ஜங்ஷனிலும் எக்ஸ்பிரஸ் காலநியதிப்படி 'ஹால்ட்' போட்டாலும், ரகுநாதனுக்கு மாத்திரம் அது ஒவ்வொரு ஜங்ஷனிலும் மணிக்காக நிற்பதுபோல் இருந்தது.

கடைசியாக மறுநாள் காலை ஆறு மணி சுமாருக்கு எக்ஸ்பிரஸ் அரக்கோணம் ஸ்டேஷனை அடைந்தது. ரகுநாதனின் இதயத்துடிப்பும் அதிகரித்தது. இன்னும் ஒரே ஒரு மணி நேரம்! ஏழுமணிக்கெல்லாம் வண்டி சென்டிரலை அடைந்துவிடும். பிறகு அரைமணி நேரத்தில் வீட்டை அடைந்துவிடலாம்...என்று நினைக்கும்போதே அவன் உடலில் பரவச உணர்ச்சி பரவியது.

ஆனால் அவன் பொறுமையைச் சோதிக்கத்தானோ என்னவோ, மணி எட்டடித்தும் எக்ஸ்பிரஸ் அரக்கோணத்தைவிட்டுப் புறப்படும் வழியாகக் காணோம். எஞ்ஜினில் ஏதோ கோளாறு என்று சிலர் பேசிக் கொண்டார்கள். சிலர், அரக்கோணத்திற்கும் அதற்கடுத்த ஸ்டேஷனுக்கும் இடையில் ரயில் தண்டவாளம் பெயர்க்கப்பட்டிருப்பதாகவும் ரிப்பேர் வேலை நடந்துகொண்டிருப்பதாகவும் கூறினார்கள். ரகுநாதன் உள்ளம் குன்றிப்போய் உட்கார்ந்துவிட்டான்.

'கூ'வென்று என்ஜின் கூவியது ரகுநாதனின் செவிகளில் அமிருத தாரையை வார்த்தாற் போன்று இருந்தது. அடுத்த நிமிடம் வண்டி புறப்பட்டது.

சென்டிரல் ஸ்டேஷனை வந்து அடைந்தபொழுது மணி 9-15 ஆகிவிட்டது. ரகுநாதன் பரபரப்புடன் இறங்கிப் போர்ட்டரிடம் சாமான்களைக் கொடுத்துத் தூக்கிவரச்செய்து வேகமாக டாக்ஸி ஸ்டாண்டை நோக்கி நடந்தான்.

டாக்ஸி மயிலாப்பூரை நோக்கி 'விர்'ரென்று போய்க்கொண்டிருந்த பொழுது வீசிய குளிர்காற்று ரகுநாதனுக்கு எல்லையில்லாத ஆனந்தத்தை அளித்தது. 'இன்னும் சில வினாடிகளில் சகுந்தலாவைக் காணப் போகிறோம்; இவ்வளவு நாள் பிரிந்திருந்ததற்கெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமாக அவளுடன் குலாவப் போகிறோம்...' என்ற எண்ணமும் கூடச் சேரவே அவன் மனம் உல்லாசமாக வானில் மிதப்பதுபோல் இருந்தது.

"இந்த வீடுதான், நிறுத்திக்கொள்" என்று ரகுநாதன் கூறியதும் டாக்ஸி நின்றது. டிரைவர் இரண்டுமுறை ஹார்ன் அடித்ததும் வீட்டுக் கதவு திறக்கப்பட்டது. சகுந்தலாதான் கதவைத் திறந்தாள். ரகுநாதனைக் கண்டதும் அவள் முகம் புன்னகையால் மலர்ந்தது.

"இன்றைக்கு வருவதாக லெட்டர் கூடப் போடவில்லையே" என்று அவனை வரவேற்றாள்.

புன்னகையுடனும் ஆனந்தம் துள்ளும் இதயத்துடனும் உள்ளே நுழைந்தான் ரகுநாதன். சகுந்தலா சிறிது ஒதுங்கி அவனுக்கு உள்ளே போக வழிவிட்டாள். ரேழியில் அவன் காலடி எடுத்து வைத்ததும், "இருங்கள்—இருங்கள்" என்று பதைபதைப்புடன் சொன்னாள். ரகுநாதன் திடுக்கிட்டு, காலைப் பின்னுக்கிழுத்துக்கொண்டு அவளை ஏறிட்டு நோக்கினான். அவள் சிரித்துக் கொண்டே உள்ளே சென்று வழியிலே விரித்திருந்த ஜமக்காளத்தையும் புடவையையும் ஒதுக்கி ஒரு ஓரமாகத் தள்ளிவிட்டுப் பக்கத்தில்வைத்திருந்த செம்பையும் தள்ளி ஒரு மூலையில் வைத்துவிட்டு தானும் ஒரு ஓரமாக ஒதுங்கிக்கொண்டு, "ஊம், இப்போது போங்கள். மேலே படாமல் ஒதுங்கிப் போங்கள்" என்றாள்.

ரகுநாதன் கேள்விக்குறி தோன்ற அவளைப் பார்த்தான்.

"மூன்று நாள் லீவ்" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள் சகுந்தலா.

ரகுநாதனின் முகத்தில் அசடுவழிந்தது அந்த இருட்டிலும் சகுந்தலாவால் நன்கு காணமுடிந்தது! ★

அழகி

'சக்திச்சுடர்'

பொன்னுருக்கும் இளம்பரிதி ஒளியிற் பூத்தாள்;
　　பூங்குழியின் தேன்துளியில் தெறித்துப் போய்,அவ்
வன்னமலர் தன்னிலுமே வாழ்ந்தாள்; நீல
　　வாரியின்மேல் நீர்ப்பரப்பில் தகத கென்று
மின்னுமலை நெளிந்தாடி நடனம் செய்தாள்.
　　மீன்விழியார் பார்வையிலும், மலைவான் சோலை
இன்னுமென்னென்ன உண்டோ அங்கே எல்லாம்
　　என்முன்னே அழகியவள் தட்டுப் பட்டாள்!

கொல்லையிலே இருக்கின்ருள்; குலுங்கும் பச்சைக்
　　கொடிமலரில் சிரிக்கின்ருள்; பனிநீர்ச் சொட்டாய்ப்
புல்லிதழின் மீதெல்லாம் வயிரத் தூற்றல்
　　போடுகின்ருள்; வயலெல்லாம் அவள்கண் பட்டு
நல்லமணி நெல்விளைச்சல் தங்கத் தூள்தான்!
　　நாரில்பூத் தொடுப்பதெல்லாம் அவளுக்கின்பம்!
வல்லஅவள் வான்வில்லில் ஆடும் செல்வி;
　　வானம் அன்னுளுக்கே கண்ணுடி மேனி!

நன்செய்க்குள் உழைக்கின்ற உழவன் ஏந்தி
　　நடக்கின்ற கலப்பையிலும் அவளைக் கண்டேன்.
பஞ்சுபடாப் பாடுபடும் பாட்டாளி தன்
　　பருந்தோள்கள் உரத்திலும்பூ ரித்தாள்; சேயர்
கொஞ்சுகின்ற தேன்மழலைச் சொல்லில் இன்பம்
　　கூட்டுகின்ற பொருளாவாள்; யாழெடுத்து
விஞ்சஇசை மீட்டுகின்ற விரல்கள் தம்மில்
　　விளையாடு கின்ருள் அவவழகி கண்டீர்!

விழிக்குவிருந் தாக அமைகின்ற இன்பம்
　　வேறெதுவும் தானுண்டோ? புலைஎண் ணத்தை
அழிக்குமங்கு தூய்மையொடு அழகு கூட்டும்!
　　அலையலையாக் கற்பனையைக் கிளற விட்டுக்
களிக்கடலில் தாழ்த்திவிடும் கவிதை பேசும்!
　　கலையான செயலிலெல்லாம் கலையவள் காண்!
துளிர்க்குமந்த உணர்ச்சி நெஞ்சில் தோன்றிற் றென்ருல்
　　தொல்லைபின்பே இல்லை எங்கும் புதுமை காண்போம்!

அன்பின் திருப்பம்

எழுதியவர்: **இரா. கந்தசாமி**

அன்பின் பாதை ராஜபாட்டையாக அமையமுடியும் அதன் சுற்றுச் சார்பையொட்டி. ஆனால் அன்பிற்குத் திருப்பம் காணும்போதோ....!

டாக்டருக்கு வேலை ஓடவில்லை. வைத்தியப் பத்திரிகை மேஜைமேல் விரிந்து கிடந்தது. கொஞ்ச நாட்களாக இப்படித்தான். எப்பொழுதும் ஓயாத சிந்தனை; ஒழியாத நினைப்பு. மனதில் நிம்மதி இல்லை. எப்பொழுதும் தனிமையிலேயே நாட்டம். ஏதோ ஒன்றை அவர் படாத பாடுபட்டு மறைக்கப் பார்க்கிறார். என்னமோ, அவர் மனதைக் கவ்விப் பிடித்து அழுத்திக்கொண்டிருக்கிறது. அவரைச் சித்திரவதை செய்யும் செயல் என்னவோ? ஊரில் நல்ல பெயர்; நோயாளிகள் வாயார—நெஞ்சார வாழ்த்தினார்கள்; வருவாய்க்குக் குறைவு இல்லை; ஆற்றுப் பெருக்குப்போல் வந்து கொண்டிருந்தது. மற்ற டாக்டர்களிடத்திலும் நல்ல மதிப்பு. இருந்தும் அவர் கவலைப்படுகிறார்; கண்ணீர் உகுக்கிறார். ஏன்? அவர் வாழ்க்கையில் அப்படி நடக்கக்கூடாதது என்னதான் நடந்துவிட்டது...?

வாசுதேவன் அந்த வட்டாரத்தில் பெயர்போன வக்கீல். அவருக்குஒரே ஒரு பெண் மாலா. ஒரு ஆண்டுகாலமாகப் பாயும் படுக்கையுமாகக்கிடந்தாள் மாலா. எத்தனையோ மருந்துகள்; எத்தனையோ டாக்டர்கள்; எவ்வளவோ பணச்செலவு. எல்லாம் காட்டு நிலவாய்ப் போய்விட்டது. அவளுக்கு வியாதி குணம் ஆகவில்லை. எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. டாக்டர்களுக்கு என்ன நோய் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

கண்போல வளர்த்த மாலாவின் உயிர், எந்தக் கணத்தில் காற்றோடு காற்றாய்ப் பறந்துவிடுமோ என்ற கவலை. நம்பிக்கை நலிந்து, உள்ளம் சோர்ந்து, கருத்துக் குழம்பி இருக்கிற சமயத்தில் டாக்டர் கோபாலன் எங்கு இருந்தோ வந்து சேர்ந்தார்.

காண்பவரை இரும்பாக்கித் தன் பால் இழுக்கும் காந்த சக்தி படைத்த கவர்ச்சியான முகம்; எதையும் ஊடுருவிப் பார்த்து உண்மையைக் கண்டுபிடிக்கும் அந்தக் கண்களுக்குத்தான் எத்தனை பிரகாசம்! நோயாளிகளிடம் அன்பு ஒழுகப் பேசிப் பேசி, அவர்கள் மனக் கவலையைப் போக்கும் டாக்டர் கோபாலனின் கைராசியாலோ, தொழிலின் திறமையாலோ, மாலாவின் உடல் தேறி வந்தது. நோயால் வாடிக் கிடந்த அவள் இப்பொழுது வசந்த காலத்துக் கோகிலமாகத் திகழ்ந்தாள்.

* * *

வக்கீல் மிகவும் நல்லவர். கடமை தெரிந்தவர். தங்கை......தங்கையின் மைந்தன்...இவர்கள் பால்மாறாத அன்பைச் சொரிகின்றார். ஆனால், அவருடைய மனைவிக்கு நாத்தனார் என்றாலே பிடிக்கவில்லை.

டாக்டரின் நினைவு, வக்கீல் வீட்டுக் குடும்பத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தது. அவருடைய மனம்

நேற்று நடந்த நிகழ்ச்சியில் குத்திட்டு நின்றது. கையில் சிகரெட் கனிந்தது. புற்றீசல்போல அவர் வாயிலிருந்து புகை வட்டங்கள் புறப்பட்ட வண்ணமிருந்தன.

* * *

டாக்டர் கோபாலன் தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்வதற்காக, வக்கீல் வீட்டிற்குச் சென்ருர். யாரோ செருமிச் செருமி அழும் சப்தம் உள்ளறையில் இருந்து கேட்டது. "யாராக இருக்க முடியும்?"— டாக்டரின் உள்ளத்திலே இப்படி ஒரு கேள்வி முளைவிட்டது. மாலா! மாலாதான் அழுதுகொண்டிருந்தாள். ஏன்? அந்த அழுகையைத் தொடர்ந்து ஒரு இரைச்சல்கேட்டது. வக்கீல் அவர் மனைவியோடு கோபமாகப் பேசிக்கொண்டிருந்தார். அது அவருடைய குடும்பத்தைப்பற்றியது மட்டும் அல்ல. டாக்டரைப்பற்றியதும் ஆகும்.

'பெரிய பண்ணையார் வீட்டுச் சம்பந்தம் நமக்குக் கிடைக்கக் கூடியதா? அது கிடைத்தால் நமக்கு எவ்வளவு கௌரவம். அதெல்லாம் வேண்டாமாம் உங்கள் பெண்ணுக்கு; பெரிய பண்ணையாரின் உதவியை நாடி வந்திருக்கிருரே ஒருவர்— அதான் ஊர் பேர் தெரியாத டாக்டர்—அவனைத்தான் பிடித்திருக்கிறதாம் உங்கள் பெண்ணுக்கு..."

"உஸ்......! இப்படியெல்லாம் பேசாதே. இது டாக்டரின் காதில் விழுந்தால் என்ன நினைப்பார்... ஏன் அந்த டாக்டருக்குத்தான் என்ன குறைச்சல்? அவர் தெய்வம் அல்லவா? என் தங்கையின் மகன் போலவே இருக்கிருர். ஊம்... அவன் இப்பொழுது உயிரோடு இருந்தால் நம் மாலாவிற்குத் தகுந்த கணவனுக இருப்பான். நம் வீட்டோடேயே வைத்திருக்கலாம்..."

வக்கீலின் குரலில் ஏக்கம் இழை பின்னியது.

"நல்லாய்ச் சொன்னீர்கள். அந்தத் தரித்திர நாராயணன் செத்துத் தொலைந்துதான் எத்தனையோ காலம் ஆயிற்றே. எப்பொழுதோ நடந்த கதையெல்லாம் இப்பொழுது ஏன் இழுக்கிறீர்கள்? நான்தான் அவனை அடித்துத் துரத்தி வீட்டை விட்டு ஓடும்படி செய்தேன் என்றெல்லாம் தூற்றியது போதாதா? அவன் இருந்தால் மட்டும் என் செல்வத்தை அவனுக்கா கொடுப்பேன்? அந்தப் பீடையின் பேச்சுத்தானு எப்போதும்?"

'பளீர்!' என்று ஒரு அறை கொடுத்தார் வக்கீல்.

"...ஆமாம்...சொல்லிவிட்டேன்... இன்னும் ஒருமுறை...என் தங்கையைப் பற்றியோ...என் தங்கை மகனைப்பற்றியோ ஏதாவது சொன்னுல்...அப்புறம் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது..."

அனல் தெறிக்கப் பேசினார் வக்கீல். உடன் பிறப்பு என்ற உறவு—ரத்தபாசம்—அவருடைய கோபத்தீயை வளர்க்கும் நெய்யாய் இருந்தது.

* * *

வக்கீலுக்கு ஒரு தங்கை. அவளைத் தஞ்சாவூருக்கு அருகில் உள்ள சுப்பிரமணியபுரம் என்ற ஒரு குக்கிராமத்தில் கொடுத்திருந்தார்கள். அவள் கணவனுக்குச் சென்னையில் வேலை. குதிரைப் பந்தயம் என்றால் அவனுக்கு உயிர். நிலத்தையெல்லாம் விற்றுப் பந்தயத்தில் வைத்து ஓட்டாண்டி ஆகி உயிர் துறந்தான். இதே கவலையாய்க் கிடந்த செங்கமலத்திற்கு வைசூரி கண்டது. மாரியாத்தாள் உடம்பெல்லாம் விளையாடினாள். அவளுடைய தீராத விளையாட்டால், உயிர் பிரிந்துவிட்டது. இறக்கும் பொழுது தன் ஒரே ஒரு மகனை அண்ணன் வாசுதேவனின் கையில் பிடித்துக் கொடுத்தாள். அவனை அன்போடு தன் பிள்ளையாக எண்ணி வளர்த்தார். ஏழு, எட்டு வயது நிறைந்த அவன், ஒருநாள் யாரிடமும் சொல்லாமல் எங்கேயோ போய்விட்டான்....இல்லை....இல்லை ...எந்த ஆற்றில், எந்தக் குளத்தில் விழுந்து இறந்தானோ?

* * *

இப்பொழுது இருந்தால் மாலாவிற்குத் தகுந்த ஜோடி! இதையெல்லாம் நினைத்து நினைத்து முன்பே புண்ணாகிப்போயிருந்த வக்கீலின் மனத்தை அறியாது, அவர் மனைவி அப்படிப் பேசிவிட்டாள்.

அதன் பலன்தான் அந்த இரைச்சல்...மாலாவின் கண்ணீர்ப் பெருக்கிற்கும் அந்தத் தகராறுதான் காரணம்.

* * *

டாக்டரால் வக்கீல் வீட்டு வராந்தாவில் அதிக நேரம் நிற்க முடியவில்லை.

அவர் உள்ளத்தாலும் யாருக்கும் தீங்கு நினைக்காதவர். தன்னுடைய இடையீட்டால் வக்கீலின் குடும்பத்தில் கலவரம் நிகழ்ந்ததே என்று வேதனையோடு வெளியேறினார்.

"பூம் பூம்!" என்ற காரின் ஹாரன் சப்தம் டாக்டரின் சிந்தனையைக் கலைத்தது. காரில் இருந்து பெரிய பண்ணையார் கேசவன் இறங்கி வந்தார். டாக்டர் எழுந்து மரியாதையாக ஆசனம் கொடுத்தார். என்ன இருந்தாலும் வளர்த்து ஆளாக்கியவர் அல்லவா?

"கோபால், உனக்குக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்."—பெரிய பண்ணை கேசவன் சிரித்துக் கொண்டே டாக்டரிடம் சொன்னார்.

"மன்னிக்கவேண்டும்; நான் வெளிநாட்டிற்குப் போவதாக முடிவு செய்துவிட்டேன். தங்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கிக்கொண்டிருந்தேன்......நான் தங்களை மறக்கமுடியாது. நீங்கள்தான் என் தந்தை...இதற்குத் தடை

செய்யமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்...''

"அவசியம் போய்த்தான் ஆக வேண்டுமா?''

"மன்னிக்கவேண்டும், தந்தையே!''—

டாக்டர் முடிவு கட்டிவிட்டார். வளர்த்து ஆளாக்கிய பெரிய பண்ணையையும், நண்பர்களையும் பொன்னான நாட்டையும் துறந்து போக முடிவு கட்டிவிட்டார்.

அதே சமயம், தான் டாக்டராகிய பின் ஓர் நாள் ஏற்பட்ட விபத்தின் காரணமாகப் படுக்கையில் கிடந்த போது தன்னைப் பராமரிக்க நின்ற இரண்டு நர்சுகளும் ஒருவருக்கொருவர் தெரியாமலே தன் காதலுக்குப் போட்டியிட்டுக்கொண்ட சம்பவமும் மறந்த கனவாக அவருள் நினைவோடியது. அப்பொழுதெல்லாம் அவருக்கு மாலாவின் காதல்தான் அவரது உயிரைத் தளிர்க்கச் செய்து வந்தது. ஆனால்...!

* * *

மறுநாள்!

வக்கீலின் வீட்டில் டெலிபோன் மணி 'கண கண' என்று ஒலித்தது.

பெரிய பண்ணை கேசவனும்— வக்கீலும் பேசினார்கள்.

''ஹலோ! ஹலோ! வக்கீல் ஐயாவா பேசறது. நான்—பெரிய பண்ணை பேசுகிறேன். டாக்டர் கோபாலனுக்காகத் தங்கள் பெண்ணைக் கேட்டேன் அல்லவா...?''

"என்ன! என் பெண்ணை டாக்டர் கோபாலனுக்காகத்தான் கேட்டீர்களா? தங்கள் பிள்ளைக்கு என்று அல்லவோ நினைத்தோம்.''

"என்? டாக்டருக்குக் கொடுக்க உங்களுக்குச் சம்மதம் இல்லையா?''

"அதில் எனக்கும் மாலாவிற்கும் விருப்பம்தான். என் மனைவி தங்கள் பிள்ளைக்குத் தரவேண்டும் என்று நினைக்கிறாள்''

''என் பையன் இந்த வருஷம் தான் மெடிகல் காலேஜில் மூன்றும் வருஷம் படிக்கிறான். டாக்டர் திருமணத்தைக்கூடப் பிறகு பார்க்கலாம். சிரமத்திற்கு மன்னிக்கவும்; நான் இன்று அவசரமாக வெளியே செல்கிறேன்.''

தன் பெண்ணின் திருமணம் அபசகுனம்போல எடுத்த எடுப்பிலேயே நின்றுவிட்டது. பிறகு மாறியது. பிறகு அதுவும் தடைப்பட்டுவிட்டதே என்று அவர் மனம் வாடியது.

''ஸார், தபால்!''

குரல் கேட்டு சுய நினைவு பெற்ற பிறகுதான், டெலிபோன் ரிசீவரை அது இருந்த இடத்தில் வைக்கத் தவறியது நினைவிற்கு வந்தது.

அவர் கடிதத்தை உடைத்தார். கவரின்மேல் 'லோகல் டெலிவரி' என்று எழுதியிருந்தது. அவர் கடிதத்தை உடைத்துப் படிக்க ஆரம்பித்தார்:

"அன்புள்ள மாமா அவர்களுக்கு,

கோடி வணக்கங்கள்

என்னை வளர்த்தீர்கள். பரிவு காட்டினீர்கள். நானும் மாலாவும் வளர்ந்தோம்...எங்களிடையே அன்பு வளர்ந்தது, எங்கள் வயது வளர்ந்ததுபோல. நாங்கள் இருவரும் ஜோடிப் புறாக்களாக, எங்கு சென்றாலும் சேர்ந்தே போனோம்.

அன்று ஒரு நாள் பள்ளிக்கூடம் முடிந்தது. தெருவோரம் 'கண்ணாமூச்சி' விளையாடினோம். நான் அகப்பட்டுக்கொண்டேன். என்னைப் பிடித்துவிட்டாள் மாலா. கண்ணைக் கட்டிக்கொள்ளும் முறை எனக்கு வந்தது. நான், மாலாவைத் தொடுவதற்காக ஓடினேன். அவள் ஓடினாள். நான் பின்தொடர்ந்தேன். அந்தோ! கல் தடுக்கியது; இடறிக் கீழே விழுந்துவிட்டாள். பின்னால் சென்ற நான், அவள் மேலே விழுந்துவிட்டேன். அவளுக்கு நெற்றியில் நல்ல காயம். கல் குத்திவிட்டது. ரத்தம் கசிந்தது. அவள்

அழுதாள். அதைக் கண்டு நான் அழுதேன். அழுதுகொண்டே வீட்டுக்குச் சென்ருள். விளையாட்டுப் பிள்ளைகளும், அவளைப் பின் தொடர்ந்தனர்.

"வாடா போக்கிரிப் பயலே! மாலாவைக் கீழே தள்ளிவிட்டாயா? அம்மாவிடம் சொல்லி நல்ல பூசை வாங்கித் தாறேன்..."—எவனே ஒருவன் சொன்னன்.

நான் பயந்து போனேன். நேராக வீட்டிற்குச் செல்லவில்லை. பயம்!

எங்கெங்கோ நின்றேன். இரவு மணி எட்டு இருக்கும். மெதுவாக உள்ளே நுழைந்தேன். நல்ல பசி எனக்கு. அன்று நீங்கள் வீட்டில் இல்லை. "எங்கேயடா புத்தக மூட்டை"– அத்தை அதட்டினர்கள். விளையாடிய இடத்தில் வைத்துவிட்டு மறந்து வந்தேன். என்னைத் திட்டினர்கள்; அடித்தார்கள். நான் என்ன என்னவோ நினைத்தேன். எதை எண்ணியோ கண்ணீர் வடித்தேன். மெதுவாக வீட்டை விட்டு வெளியேறினேன்.

அப்பொழுது வெளியே மழை பிசுபிசு என்று தூரிக் கொண்டிருந்தது. அன்று அமாவாசை. நல்ல இருட்டு. நான் நடந்தேன். எங்கே போகிறேம் என்ற திட்டமோ, எண்ணமோ எனக்கு இல்லை. கொஞ்ச நேரத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்து விட்டது. நான் நன்ருக நனைந்து விட்டேன். இடிகள் பயங்கரமாக இடித்தன; மின்னல் கண்ணைப் பறித்தது.

ரயில் நிலையத்திற்கு வந்து விட்டேன். ஏதோ ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. பசி வயிற்றைக் குடைந்தெடுத்தது. காலையில் சாப்பிட்டது. மழையில் நனைந்ததால் கைகால்கள் எல்லாம் நடுங்கின. பக்கத்தில் வாழைப்பழம் விற்றுக்கொண்டிருந்தான். நான் அவனைக் கேட்டேன். "காசு கொடு. தருகிறேன்" என்ருன். காசிற்கு எங்கே போவேன்?

வண்டியின் அசைவு தாலாட்டுவது போல் இருந்தது. அவன் தூங்கி விட்டான். எனக்குத் தூக்கம் வரவில்லை. பசி! எனக்கு எதிரில் "என்னைப்பார்; என் ருசியைச் சாப்பிட்டுப்பார்" என்று வாழைப் பழங்கள் சீப்புச் சீப்பாக இருந்தன. நாவில் நீர் ஊறிற்று. நான் எடுத்

துத் தின்றேன். உறித்துத் தின்று கொண்டேயிருந்தேன்.

"திருட்டுப் பயலே!"

எனக்குப் பின்னல் ஒரு முரட்டுக் குரல் ஒலித்தது. தூங்கிக்கொண்டிருந்தவன் விழித்தான். என்னை அவன் அடித்தான். ஏதோ ஒரு நிலையத்தில் வண்டி நின்றது. என்னைப் பிடித்து இறக்கினன். ஒரு போலீஸ்காரனிடம் என்னை ஒப்படைத்து, என்னைச் செங்கல்பட்டிற்கு அனுப்பச் சொல்லி விட்டு எங்கேயோ போய்விட்டான்.

"மூளைத்து மூணு இலை வளரவில்லை. அதற்குள் இப்படித் திருட்டா?"

என் காதைத் திருகியபடி கேட்டான் ஒரு போலீஸ்காரன்.

"என்னைப் பார்த்தாத் திருடனுகவா தோன்றுகிறது?"—எதிர்பாராத இந்தக் கேள்வியைக் கேட்டு வாயடைத்துப்போனுன்.

"நீ திருடவில்லையா?" என்ருன்.

"எனக்குப் பசித்தது. அவனைப் பழம் கேட்டேன். அவன் தரவில்லை. நான் எடுத்துத் தின்றேன். எனக்குப் பசிக்கும்போது, அவனுக்கு மட்டும் அவ்வளவு பழம் எதற்கு? நான் பழங்களை எடுத்துத் தின்றேன். நானு திருடன்? திருடன் என்ருல் எங்கம்மா அழுவாளே"

போலீஸ்காரனுக்கு என்ன தோன்றிற்ருே?

அனுபவம்தான் அருமையான பள்ளிக்கூடம். ஆனல், முட்டாள்கள் அதில் கற்றுக் கொள்வது அபூர்வம். அவர்கள் வேறெதிலுமே அவர்களாகக் கற்றுத் தெரிந்துகொள்ள மாட்டார்கள்.

—பிராங்க்லின்

"உங்கம்மா யாரு? எங்கே இருக்குது?" என்று கேட்டான்.

"எங்க அம்மாவும் அப்பாவுந்தான் எப்பவோ செத்துப்போயிட்டாங்களே. அவுங்க இருந்தா, நான், என் தனியாக ரயில்லே வாறேன்?" என்று எதிர்க் கேள்வி கேட்டேன். எனக்குத் தின்பதற்கு வாங்கிக் கொடுத்தான். கையில் காசும் கொடுத்தான். 'உங்க ஊரைச் சொல்லு. அங்கே கொண்டுபோய் விடுகிறேன்' என்றும் சொன்னுன்.

"மறுபடியும் அத்தையிடமா போகவேண்டும்?" என்று என் மனம் அஞ்சியது. சரியாக விலாசம் சொல்லவும் தெரியவில்லை. அப்பொழுது ஏதோ ஒரு வண்டி வந்து நின்றது. அவன் யாருடனே பேசிக் கொண்டிருந்தான். நான் வண்டியில் ஏறிவிட்டேன்.

ஓடிய வண்டி நிற்கப்போகும் சமயம். நிற்கவில்லை. அது நிற்பதற்குள் இறங்கினேன். அப்படியே கீழே விழுந்துவிட்டேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்.

கண் விழித்துப் பார்த்தேன். என் கை, கால், மண்டை—இவைகளில் கட்டுக் கட்டப்பட்டிருந்தது. நான் ஆஸ்பத்திரியில் இருந்தேன். எனக்குப் பக்கத்தில் ஒரு செல்வந்தரின் பிள்ளை. அவனை 'டிஸ்சார்ஜ்' செய்து அனுப்பும்போது என்னையும் அனுப்பினுர்கள். அவன் பெற்ருேர்கள் என்னிடம் பிரியமாய் இருந்தார்கள். அவர்கள் என்னை வீட்டிற்கு அழைத்துப் போனுர்கள்.

அவர்கள் ஆதரவில் வளர்ந்தேன். நாங்கள் இருவரும் படித்தோம். அவன் இன்னும் படித்துக்கொண்டிருக்கிருன். நான் பெரிய பண்ணையாரின் அன்பு ஆதரவினல் டாக்டராக இருக்கிறேன். நான் மாலாவிற்குச் சிகிச்சை செய்து குணப்படுத்தினேன்.

உங்கள் எண்ணம்—மாலாவின் காதல்—அத்தையின் உள்ளம்—எல்லாம் எனக்கும் தெரிந்தது. என்னை எண்ணிக் கவலைப்படும் தங்கள் அன்பிற்கு என் நன்றி. என் இடையீட்டால் கலவரம் நிகழக்கூடாது; பிளவு—மனக் கசப்பு ஏற்படக் கூடாது.

நான் ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன். என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் நீந்தத் தெரிந்த மீன்—இறக்கை முளைத்த பறவை. மாலா, பண்ணையார் கேசவரின் மகனை மணக்கட்டும்.

இந்தியாவை விட்டுப் பிரிகிறேன். இனி என்னைக் காணமுடியாது. உற்றாரை விட்டு, உறவினரைப் பிரிந்து, புரியாத மொழி பேசும், தெரியாத நாட்டிலே அந்நியன்—கறுப்பன் என்று இகழப்பட்டு உழைக்கும் மாடுகளாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கே போகிறேன். தமிழனோடு, தமிழனாக வாழ்வேன். அவர்களுக்கு என் தொண்டைப் பயன்படுத்துவேன். என்னைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. எந்நாடு, எந்நாட்டு மக்கள் வாழவேண்டும்—முன்னேற வேண்டும்—உயரவேண்டும். இதுவே என் கடைசி ஆசை.

சௌபாக்கியவதி மாலாவிற்கு என் ஆசீர்வாதங்கள். அத்தை அவர்களுக்கு என் வணக்கங்கள். யாரிடத்திலும் எனக்குக் குறை இல்லை. நான் விடை பெற்றுக் கொள்கிறேன். உங்களைப் பிரிவதற்காக வருந்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோபாலன்."

* * *

கடிதத்தைப் படித்து முடித்த வக்கீல் பெரிய பண்ணையாரின் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார். ★

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mlore: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை: 134. SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜெண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST., கொழும்பு-11.

2. எதிர்பாராதது!

கோபு ஏன் விழுந்தான், எப்படி விழுந்தான் என்பதொன்றும் ராதைக்குத் தெரியாது. 'நம் அருமை அத்தான் விழுந்து விட்டானே' என்கிற உணர்ச்சி ஒன்றுதான் அவளைப் பிடி பிடித்து உந்திற்று. அதனால் அவள் பதறி அடித்துக் கொண்டு ஓட்டமாக ஓடி வந்தாள். அவள் அருகில் வருவதற்குள் அவன் சமாளித்துக் கொண்டு எழுந்துவிட்டான். அவன் உடைகளெல்லாம் தண்ணீரில் நனைந்து விட்டன. மேலெல்லாம் சேறும் சகதியும். முகத்திலே மீசை போட்டாற் போல மண் ஒட்டியிருந்தது. பதறி ஓடிவந்த ராதைக்கு அவன் அருகில் வந்ததும், அவன் தோற்றத்தைப் பார்த்ததும், மனதில் இருந்த வருத்த உணர்ச்சி மறைந்து விட்டது; அவன் தோற்றங்கண்டு சிரிப்பு வந்து விட்டது. தன்னை மறந்து கலகலவென்று சிரித்தாள்.

அவள் செயல் அவனுக்கு எரிச்சலை உண்டுபண்ணிற்று. பிள்ளைப்பிராயமுதல் அவளோடு ஒட்டிப் பழகியவன், அவள் உள்ளப் பாங்கை நன்கு அறிந்தவன், அவளுக்குத் தன்மீது உள்ள அன்பும் ஆசையும் எத்தகையன என்பதைத் தீர்மானமாக உணர்ந்தவன்—அந்தஒருகணத்தில் அனைத்தையும் மறந்தான். அதே சமயத்தில் அவள் உள்

ளம் தன் நிலை பற்றி என்ன நினைக்கிறது என்பதை ஆழ்ந்து உணரும் ஆற்றலையும் இழந்தான். எரித்து விடுபவன்போல அவளை வெறித்து நோக்கினான். அன்றுவரை அவனிடமிருந்து அத்தகைய பார்வையைக் கண்டறியாத ராதை அவன் பார்வையில் உள்ள கொடூரத்தைக் கண்டு நடுநடுங்கிப் போய் விட்டாள். அடுத்த கணமே அவளுடைய சிரிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடிப் போயிற்று. தன் அறியாமை நிறைந்த செயலுக்காகத் தானே வருந்தினாள். நடுங்கிய குரலில் "கோபு!......" என்றாள்.

அவன் வாய் திறந்து பேசவில்லை. இன்னமும் அவளை வெறித்துத்தான் நோக்கிக் கொண்டிருந்தான். அவள் மெல்ல அவனை அணுகினாள். "சட்டையெல்லாம் மண்ணாய்ப் ...போச்சே!..." என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே அவன் சட்டையில் உள்ள மண்ணைத் தட்டப்போனாள். அவன் "சீ!..." என்று சீறியபடி அவள் கையை வேகமாக உதறினான். அவன் உதறிய வேகத்தில் அவள் நாலடி பின்னுக்குச் சென்று தடுமாறி விழப்போனாள். அவன் தன் ஆடைகளை உதறி விட்டுக்கொண்டு மீளவும் ஒருமுறை அவளை எறிட்டுப் பார்த்தான். அதற்குள் உள்ளே நடமாடிய அவன் மாமா, அத்தை. இருவர் உருவங்களும் கண்ணிலே பட்டன. உள்ளுக்குள்ளே குமைந்து கொண்டிருந்த ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது. சிறுவன் தானே? அழுகையும் வந்தது. அதை அடக்கும் முறையிலே தலை குனிந்தான். கால் பெருவிரலால் தரையில் கோடுகிழித்தான். உள்ளேயிருந்து, 'ராதை!...' என்று அத்தையின் குரல் கேட்டது. குரல் தெருவை நோக்கி வருவது போலவும் தோன்றிற்று. அந்தக் கோலத்திலே மாமி தன்னைப் பார்ப்பதை அவன் மனம் வெறுத்தது. அதன் விளைவாகக் கால்கள் அடியெடுத்து வைக்கத் தொடங்கின. அவன் மேற்கு நோக்கித் தெருவோடு செல்லலானான்.

ராதை அவன் செல்வதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். எங்கே போகிறான், எதற்காகப் போகிறான் என்று தெரியவில்லை. இந்தக் கோலத்தோடு போகிறானே என்று மட்டும் அங்கலாய்த்தது உள்ளம். முதல் முறையாக, 'சீ' என்ற சொல்லையும் புறக்கணிப்பையும் பெற்ற அவளுக்கு அவனைக் கூப்பிடத் தைரியம் இல்லை; கூப்பிடாமல் இருக்கவும் மனம் வரவில்லை. அதன் விளைவாக, 'கோ...பு...!' என்ற சொல் அவள் உள்ளத்திலே எழுந்து அங்கேயே அடங்கிப் போயிற்று. கோபு தெருக்கோடி சென்று திரும்பி விட்டான். அவன் உருவம் கண்ணுக்கு மறைந்து விட்டது.

அப்போதுதான் அவள் பாச உணர்ச்சி குமுறி எழுந்தது. "கோபு!..." என்று அலறிக் கொண்டே மேற்குத் திக்கில் ஓடலானாள். நாலடிகூட ஓடியிருக்க மாட்டாள். அதற்குள் பின்னாலிருந்து யாரோ கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவும்

தட்டென்று நின்று திரும்பிப் பார்த்தாள். அச்சுதன் தான்!

"விடடா என்னை!..."

"சீ கழுதை! எங்கே மழையிலே நனைந்துகொண்டு ஓடுகிறாய்? போ வீட்டுக்கு!..."

"முடியாது. என்னை விடுறாயா, மாட்டாயா?"

"விட முடியாது. பேசாமல் வீட்டுக்குப் போகிறாயா, உதைக்கட்டுமா?..."

"உதைப்பாயோ?...குரங்கு!... விடடா கையை!"

கையை வெட்டி இழுத்து, முதுகிலே ஒரு குத்து விட்டான் அவன். அவள் 'ஓ' வென்று அழ ஆரம்பித்தாள். தற்செயலாக வாசற்புறம் வந்த தாய் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாள். கோபத்துடன் விரைந்து அவர்கள் இருந்த இடத்தை நோக்கி வந்தாள். அச்சுதன் ஓடிவிட்டான். ராதை தான் அகப்பட்டுக் கொண்டாள். அவள் மழைத் தூற்றலிலே நன்றாக நனைந்துவிட்டிருந்ததைக் கண்டதும் தாய்க்குக் கோபம் வந்து விட்டது. 'பளீர்' என்று கன்னத்தில் ஓர் அறை அறைந்தாள். "போ நாயே வீட்டுக்கு!..." என்று கர்ஜித்தாள். அறையின் வலி தாளாமல் அலறி அழ ஆரம்பித்த ராதை, தாயின் மூர்க்கக் குணத்தை நன்கறிந்தவளாதலால் அழுது கொண்டே வீட்டுக்குச் சென்றாள்.

தாய் அவள் தலையைத் துவட்டி உடம்பைத் அடைத்து மாற்றுடை அளித்தாள். "எங்கே பார்த்தாலும் ஜுரமும் காய்ச்சலுமாக அமளிப் படுகிறது; மழையிலே நனைந்து கொண்டு கொட்டமடிக்கிறாயா? வாசற்படியை விட்டு இறங்கு சொல்லுறேன்!..." என்று அதட்டிவிட்டு அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டாள் தாய்.

தகப்பனார் மேஜை எதிரே உட்கார்ந்து என்னவோ செய்து கொண்டிருந்தார். அவர் முகத்திலே எள்ளுங் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. அவருக்கு என்ன ஆத்திரம் என்பதை ராதை அறியாள். தான் அழுவதைக்காண ஒரு போதும் சகியாதவர், மற்றவர்களிடம் தனக்காகப் பரிந்து

கொள்பவர் இப்போது அழுதபடி தான் அங்கே நின்றிருப்பதைக் கண்டும் சமாதானம் ஏதும் சொல்லவில்லையே என்கிற குறை வேறு ராதைக்கு. அதனால் அவள் ஆத்திரம் இன்னும் பலமாயிற்று. அதைக் கண்ட தகப்பனார், "சீ!... இங்கே நின்று ஊளையிடாதே! தொலைந்து போ!" என்று எரிந்து விழுந்தார். 'சர்டிபிகேட்' நாசமாய்விட்ட துக்கத்திலே மூழ்கி அதை மேஜை மீது விரித்து வைத்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த நிலையில் அவருக்கு அருமை மகளின் அழுகை அத்தனை வெறுப்பை அளித்தது. ஆனால் அவர் கோபத்தின் காரணத்தை ராதை என்ன கண்டாள்? கோபு வெறுத்தான்; அச்சுதன் அடித்தான்; வைதான்; அம்மா திட்டினாள், அறைந்தாள்; அப்பாவும் எரிந்து விழுகிறார்— இப்படி ஒரே சமயத்திலே எல்லோரும் நம்மைக் கரித்துக் கொட்டுகிறார்களே என்ற ஆயாச உணர்ச்சி மேலோங்கிற்று. குமுறி வந்த அழுகையைப் பாடுபட்டு அடக்கிக் கொண்டு தெருப்பக்கம் சென்றாள். திண்ணைக் கோடிக்குப் போய் மூலையிலே படுத்து விசித்து விசித்து அழுதாள்; அழுதுகொண்டே இருந்தாள்.

இருட்டிவிட்டது. ராதையின் தாய் தீபத்தை ஏற்றித் தெருத் திண்ணையிலே கொண்டுவந்து

சந்தாதாரர்களுக்கு

பொங்கல் மலர் வேண்டுவோர் ரூ 1—4—0 அனுப்பினல் பதிவு அஞ்சலில் மலர் அனுப்பப்படும்,

நிர்வாகி,

'பொன்னி'

வைத்தாள். ஆனல் மூலையிலே படுத்துக் கிடந்த ராதையைக் கவனிக்கவில்லை. அவள் விசித்துக்கொண்டே இருந்தாலாவது சத்தங் கேட்டிருக்கும். அழுதபடியே அவள் தூங்கிப் போயிருந்தாள்.

மணி எட்டடித்தது. மனம் போனபடி ஓடியாடிக் கொட்டமடித்த அச்சுதன் மிகவும் நல்ல பிள்ளைபோல மெல்ல மெல்ல வீட்டினுள் நுழைந்தான். தகப்பனர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் மேஜையின் மேல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவருடைய அந்த சர்டிபிகேட் விரித்து வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அச்சுதனுக்கு, 'இந்தக் காகிதம் நாம் மத்தியானம் காகிதப் படகு செய்ய எடுத்துக் கொண்டதல்லவா? அதைத்தான் படகு செய்து விட்டோம்; அது தெருவில் மழைத் தண்ணீரிலே போய் விட்டதே! மறுபடியும் அப்பாவின் மேஜைக்கு எப்படி வந்தது?...' என்பன போன்ற யோசனைகள் எல்லாம் எழுந்தன. இதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டான். பிறகு பூனைபோல் நடந்து அடுக்களைப் பக்கம் சென்ருன். அவனைக் கண்ட அம்மா அத்தனை நேரம் வெளியிலே சென்று கொட்டமடித்து விட்டு வந்ததற்காகக் கோபித்துக் கொண்டாள். தகப்பனரும் சேர்ந்து கொண்டு திட்டினர். இடையே "ராதை எங்கே?" என்று இருவரும் ஏக காலத்தில் அவனைக் கேட்டனர். "எனக்குத் தெரியாதே!" என்று கையை விரித்தான் அவன். பிறகு, "கோபு எங்கே?" என்று அவன் திருப்பிக் கேட்டான். "அது எங்கே தொலைந்ததோ கழுதை!" என்று ஆரப்பித்த தாய் சுருக்கமாக நடந்ததைக் கூறினள். அச்சுதனுக்குத்தான் இது போன்ற விஷயங்களில் நல்ல ஊகிக்கும் சக்தி உண்டே? '...ஓகோகோ! அது அப்பாவின் சர்டிபிகேட்டா?... அதை நாம் எடுத்துக் காகிதப் படகு செய்யப் போக அந்தப் பழி கோபுவின் மீது சுமந்து விட்டதா?...' என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டான். பின்னேடு கோபு தன் தகப்பனரிடம் சரியான உதை வாங்கினதை எண்ணிச் சந்தோஷமுங் கொண்டான். உடனே வெகு சாதுரியமாக, "நான் அப்பவே சொன்னேன், அப்பாவின் சர்டிபிகேட்டை எடுக்காதேடா என்று. கேட்டால் தானே?" என்ருன்.

எடுத்ததற்கெல்லாம் கோபுவையே குற்றங் கூறும் தம் மனைவியின் பேச்சிலே முதலியாருக்கு எப்போதுமே நம்பிக்கைக் கிடையாது. சர்டிபிகேட்டைக்

கோபுதான் எடுத்துச் சென்றிருப்பான்என்றுஅவள் சொன்ன போதும் அவருக்கு அதில் உண்மை இருக்கும் என்று முதலில் தோன்றவில்லை. ஆனால் குற்றவாளி தடையமும் கையுமாய்ப் பிடிபடுவதுபோலச் சர்டிபிகேட் காகிதத்தால் செய்யப் பெற்ற படகும் கையுமாய்க் கோபு எதிர்ப்பட்ட போது முதலியாருக்குத் தம்மையும் அறியாது அவன் மீது ஆத்திரம் ஏற்பட்டது. தம் அருமையான சாடிபிகேட் நாசமாகி விட்டதே என்கிற அளவு கடந்த ஆத்திரத்தில் எதையும் தீர விசாரித்து உணராமல் கோபு தன் அருமை மருமகன், தாய்தந்தையற்ற ஏழைச் சிறுவன் என்பனவற்றையும் மறந்து அவனை நையப் புடைத்து உதைத்துத் தெருவிலே தள்ளி விட்டார். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் தான் செய்துவிட்ட காரியத்தை எண்ணி மனதுக்குள் விசனப் படலானார். எனினும் அத்தனை பெரிய தவறைச் செய்தவனுக்கு அத்தகைய தண்டனை வேண்டியதுதான் என்றும், அப்போதுதான் அவன் அதுபோன்ற தவறுகளை இனிமேல் செய்யாமல் சீர்திருந்துவான் என்றும் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார். ஆயினும், அநியாயமாகக் குழந்தையை அப்படி அடித்து விட்டோமே என்கிற அங்கலாய்ப்பு உணர்ச்சிதான் மேலோங்கி நின்றது. இருட்டி இவ்வளவு நாழிகையாகியும் குழந்தையைக் காணோமே என்கிற ஏக்கம் நிறைந்த உள்ளத் துடிப்போடு அவர் இருந்த நிலையில் அச்சுதன் மேற்கண்டவாறு கூறவும், மீளவும் அவர் மனம் கோபுவின் மீது சீற்றங் கொள்ளலாயிற்று.

கணவரின் மனப் போராட்டத்தை ஊகத்தில் உணர்ந்து கொண்ட மனைவி, அவர் மனதைக் கரைக்க இதுதான் தக்க தருணம் என்று அச்சுதனிடம் குழைவாகப் பேசி மத்தியான்னம் என்ன நடந்தது என்று விசாரித்தாள். அந்தப் போக்கிரிப் பையன் நடந்ததை மறைத்து,நடவாததைக் கற்பித்துக் கண், காது, மூக்கு வைத்து அளந்தான். முதலியாரும் நன்கு நம்பிவிட்டார். "எங்காவது ஒழிந்து போகட்டும் கழிசடை!" என்றார்.

"அது சரி, குழந்தை ராதையைக் காணோமே! அது அல்லவா இப்போது எனக்குப் பெருங்கவலையாக இருக்கிறது!" என்றாள் ராதையின் தாய்.

"அவளுடைய தோழிமார் யார் வீட்டிலாவது இருப்பாள். தன்னால் வந்து சேருவாள்" என்றார் முதலியார்.

"பத்மாவின் வீட்டில் இருப்பாள் அப்பா. இதோ நான் போய் அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று தெருப் பக்கம் ஓடினான் அச்சுதன். அடுத்த சில நிமிஷங்களில் தெருப் பக்கத்திலிருந்து, "ஐயோ!... அப்பா!.. அம்மா!... ஓடி வாருங்கள்!" என்று அச்சுதன் குரல் கேட்டது. முதலியாரும் அவர் மனைவியும் தீபத்துடன் தெருப்பக்கம் விரைந்தனர். அவர்கள் அங்கே கண்ட காட்சி...!

ராதை வாசற்படியிலே ரத்த வெள்ளத்திலே கிடந்தாள்.

பிரக்ஞை இல்லை. ஏன் என்ன நேர்ந்தது?

(தொடரும்)

குழந்தை உள்ளம்

சம்பந்தம்

"பரமண்டலத்திலுள்ள பரம பிதாவே..." என்று குழந்தை சூசை முழந்தாளிட்டு தன் சின்னஞ் சிறு செப்புவாயைக் குவித்துக் குவித்து மெல்லெனச் சொல்லிக் கிறிஸ்துவைத் தொழுான். தொழுது முடிந்ததும் தன் கழுத்தில் தொங்கும் சிலுவையை எடுத்து முத்தமிட்டழும் அழகுதான் என்ன? அத்தனையும் அவன் ஆயாளின் பாடம். குழந்தை தொழுது எழும் அழகை சற்று தூரத்திலிருந்து அந்த பொக்கைவாய்க் கிழவி கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருப்பாள். உடனே அவள் உடம்பில் ஒருவித குறுகுறுப்பு ஏற்படும். திடுதிடுவென்று ஓடிவந்து அவனை வாரி யணைத்து முத்தமிடுவாள்.

அந்தக் கிழவிக்கு அந்தக் 'கான்வெண்டில்' ஆயாள் வேலை. தன் சிறு வயதிலிருந்தே அவள் அங்குதான் இருந்து கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரிந்து அந்த மடத்தில் எத்தனையோ கன்னிகாஸ்திரிகள் சாதனை பெற்றுப்போய் இருந்தார்கள். அந்த விஷயத்திலும் அவளுக்கு அனுபவம் அதிகம், அதனால்தான் இத்தனை தள்ளாத வயதிலுங்கூட அவளுடைய ஊழியம் கான்வெண்டிற்கு இன்றியமையாகதாயிருந்தது. அங்கு அவளுக்கென்று ஒரு தனி அறை கட்டிக்கொடுத்திருந்தார்கள்; தற்சமயம் அவ்ளுக்கு அதுதான் வீடு.

அவளுடைய ஒரே மகள்பிலோமினுளுக்குப் பட்டணத்தில் 'டீச்சர்' வேலை. அவள் தன் கணவனுடன் பட்டணத்தில் சௌக்கியமே வாழ்ந்துவந்தாள். கலியாணமான ஒரு ஆண்டிற்குள்ளாகவே பிலோமினுளுக்குக் குழந்தை சூசையப்பன் பிறந்தான். ஆயாள் தான் ஒருமாதம் லீவு எடுத்துக்கொண்டு போய் தன் மகளுக்குப் பிரசவம் பார்த்துத் திரும்பினுள்.

அதிலிருந்து தன் இளம்பேரனின் இனிமையான முகம், ஆயாளை வருஷத்திற்குக்குறைந்தது இரண்டுதடவை யேனும் பட்டணத்திற்கு இழுக்க ஆரம்பித்தது. குழந்தை சூசையப்பனும், மாதங்கள் ஆக ஆக தன் ஆயாளின் முகத்தை நன்ருய் அடையாளங் கண்டுகொண்டுவிட்டான். ஆயாளின் இடுப்பில் ஏறிக்கொண்டால் பிறகு இறங்கவே மாட்டான்.

ஆயாள் அழகு அழகான பட்டுச் சட்டைகளாகவே தைத்துப் போட்டாள். பலதினுசுப் பழங்களை வாங்கி பரிவுடன் ஊட்டினுள். பிறகு சூசை ஆயாளை விட்டு பிரியாமலிருக்கக்கேட்டானேன்!

நாட்கள் மெதுவாய் நடந்து வேகமாய்ப் பறந்தன. குழந்தை சூசை நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் வளர்ந்து வந்தான். ஆனல் கூடவே பொல்லாத குழந்தையானுன்.

அவன் அப்பா அம்மா இருவருமே வெளியில் வேலைக்குக்

காலையில் சென்றால் மாலையில் தான் திரும்புவார்கள். சமையற்காரியும் சற்று வயதானவள். அவளால் குழந்தை சூசையை பகல்வேளையில் கட்டி நிர்வகிக்க முடியவில்லை. தினம் மாலை வேளையில் பிலோமினாள் பள்ளியிலிருந்து திரும்பும் பொழுதெல்லாம் வீட்டில் சூசையின் மேல் ஆயிரம் புகார்கள் காத்துக்கிடக்கும். அவளுந்தான் லீவு நாளில் வீட்டிலிருக்கும் பொழுதெல்லாம் குழந்தையின் விஷமத்தனத்தை யெல்லாம் நன்றாய் கவனித்திருக்கிறாளே!

அந்தச் சமயத்தில் 'கான் வெண்டி'லிருந்து ஆயாள் வந்திருந்தாள் குழந்தையைப் பார்த்துப் போக. ஐந்தாறு நாட்கள் இருந்து விட்டுப் புறப்பட்டாள். அப்பொழுது சூசை அவள் இடுப்பில்தான் ஏறிக் கொண்டிருந்தான்.

"ஏண்டா சூசை! ஆயாளோடவே ஊருக்குப் போறயா?" என்று கேட்டாள் பிலோமினாள்.

"ஓ! போறேன் அம்மா" என்றான்.

"அப்புறம் அங்கே போய், அம்மாவேணும் அப்பாவேணும் என்று கேட்கக் கூடாது" என்று கண்டித்துச் சொன்னாள்.

"ஊம், கேட்கமாட்டேன்." என்று தலையாட்டினான்.

"சரி, போயிட்டுவா" என்று சூசையைப் பிரியமுடனே அனுப்பிவைத்தாள். ஆயாளும் ஆசையுடன் சூசையை 'கான் வெண்டிற்கு' அழைத்து வந்து விட்டாள்.

குழந்தை சூசை தன்னிடம் வந்தபிறகு அந்தக் 'கான்வெண்டின்' இருட்டறை வாழ்க்கை ஆயாளுக்கு எத்தனையோ பிரகாசமாகிவிட்டது. அவன்தான் அடிக்கொரு தடவை 'ஆயா ஆயா' என்றழைத்துக்கொண்டு அவள் முந்தியைப் பிடித்துக் கொண்டு கூடவே சுற்றிக் கொண்டிருந்தானே!

சூசையப்பன் அங்கு மிங்கும் ஓடினான், ஆடினான், பாடினான். அங்கிருந்த அனைவரும் அவனை மிகவும் நேசித்தார்கள்.

ஆயாள், சூசையை மடியிலுட்கார வைத்துக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் கதையையெல்லாம் சொன்னாள். இடுப்பில் தூக்கிக்கொண்டு குழந்தைக்கு அங்குமாட்டியிருந்த மாதாபடம் செயிண்ட் தெரேசா படம், போப் பாண்டவர் படங்களையெல்லாம் காட்டினாள். கிறிஸ்துவேதத்தின் சாரத்தைச் சொல்லிக் கொடுத்தாள். சூசையும் அவைகளைச் சமர்த்தாய் கற்றுக்கொண்டான். ஆயாளுக்கு அளவில்லாத சந்தோஷம். அடிக்கொரு தடவை அவனை வாரி வாரி முத்தங்கொடுப்பாள்.

இருந்துங்கூட சூசையப்பன் அவ்வப்பொழுதுசெய்யும் போக்கிரித்தனங்கள், அவளை ஆராத் துயரத்தி லாழ்த்திவிடும்.

கான்வெண்டின் முன் ஹாலில் கொஞ்சம் எதிரொலி கேட்கும். அதனால் சமயத்தில் சூசை திடுதிடென்று ஓடிப் போய் அங்கு "ஓ! ஓ!!" என்று கத்திவிட்டு ஓடிவந்துவிடுவான். அங்கு நிலவியிருக்கும் நிசப்தத்தில் அந்த எதிரொலி எத்தனை

குந்தகமாயிருக்கும்! “உஸ் உஸ்” என்பார்கள்.

மெழுகுவர்த்தி, ஏற்றி வைத்துக்கொண்டு ஆயாள் பக்தியாக பைபிள் படித்துக்கொண்டிருப்பாள். ‘திடுக்’ கென்று அந்த மெழுகுவர்த்தியை ஊதிவிட்டு, கலகலவென்று நகைப்பான் போக்கிரி சூசை. ஆயாள் எக்கி அவனை அறையப்போவாள். அந்த இருட்டில் அவள் கைக்கு கிடைப்பானா சூசை!

இன்னும், அடிக்கடி தெருவிற்கு ஓடிவிடுவான். அங்கேயே வண்டியும் காரும் ஜேஜேஎன்று எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கும். எங்கே குழந்தை வண்டியில் அகப்பட்டுக் கொண்டுவிடுகிறானோ என்று ஆயாளுக்குப் பயம். ஆனால் குழந்தைமனம் பயம் அறியுமா?

சமயத்தில் சூசை, தன் ஆயாள் அடிக்க வரும் ஓங்கின கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வான். “ஆயா, ஆயா, நீ என்னை மன்னிச்சாத்தானே, உன்னை கர்த்தர் மன்னிப்பார், ஆயா” என்று அவள் பாடத்தை அவளிடமே ஒப்புவிப்பான். அதன் பிறகு கூட ஆயாளுக்கு அவனை அடிக்க மனம் வருமா?

அவளுக்கும் மீறிக் கோபம் வந்துவிட்டால் “சரி, சரி உன்னை நாளைக்கே பட்டணம் அனுப்பிச்சிடறேன்” என்று பயமுறுத்துவாள். சற்று நேரம் குழந்தையிடம் பேசாமல் கூட இருந்து பார்ப்பாள்.

சூசை ‘உம்’ என்று ஒரு மூலையில் உட்கார்ந்துவிடுவான். பிறகு ஆயாளுக்கே அவன்மேல் பரிதாபம் ஏற்பட்டுவிடும். இடுப்பில் தூக்கிவைத்துக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விடுவாள்.

விளையாட்டாக, குழந்தையைக் கூட்டிவந்து ஒரு வருஷத்திற்கு மேலாகிவிட்டது. கோடை விடுமுறையில் பிலோமினாள் வருவதாகக் கடிதம் போட்டிருந்தாள். ஏதோ ‘ஸம்மர் ஸ்கூல்’ என்று அவ்ளால் வரமுடியாமல் போய்விட்டது.

ஆயாளே ஒருதடவை குழந்தையைக் கூட்டிக்கொண்டு பட்டணம்போகயிருந்தாள். ஆனால் அந்தத் தடவை வெயில் கடுமை சகிக்காமல், அந்த கான்வெண்ட் தற்காலிகமாகக் கோடைக்கானலுக்குப் பெயர்ந்தது. ஆயாளும் கூடவே போகவேண்டியதாயிற்று. இருந்தாலும் அந்த வருஷ கிறிஸ்மஸுக்கு அவசியம்

பட்டணம் போவதென்று
அப்பொழுதே தீர்மானித்
துவிட்டாள். சூசையிடமும்
சொல்லி வைத்தாள்.
அன்றையிலிருந்து அவன்
"இன்னும் எத்தனை நாள்
இருக்கு கிறிஸ்மஸ் வர"
என்று அடிக்கடி கேட்டுத்
தொந்தரவு பண்ண ஆரம்
பித்துவிட்டான். "இதோ,
அதோ" என்று சொல்லிக்
கொண்டுவந்து கிறிஸ்மசு
க்கு இரண்டுநாள் முன்ன
தாக, குழந்தை சூசையைக்
கூட்டிக்கொண்டு புறப்பட்
டுவிட்டாள் ஆயாள்.

ரயிலில் சும்மாயிருந்தால்
தானே சூசை! ஜன்னல்
ஓரத்தில்தான் உட்காருவேன்
என்று அடம்பண்ணினான். ரயில்
செல்லும் வேகத்தில், வெளியே
பறந்தோடும் மரங்களையும் மலை
களையும் பார்க்க அவனுக்கு
வெகு வேடிக்கையாயிருந்தது.
வெளியே தலையை நீட்டி நீட்டிப்
பார்த்தான். அப்படியே விழுந்து
தொலைத்து வைத்தால்...!

ஆயாளுக்கு எரிச்சலாக இருந்
தது. பளீரென்று முதுகில்
ஒன்று கொடுத்து அழவைக்க
லாமா என்று கூடக் கோபம்
வந்தது. ஆனால் சூசையின்
பொல்லாத் தனம் பாட்டிக்குப்
பழகிவிட்டது. பெருநாள்
தெரிந்து குழந்தை பட்டணம்
போகிறான். இந்தச் சமயத்தில்
அவன் அம்மாவிடம் போய்
'ஆயாள் என்னை ரயிலில்
அடித்துவிட்டாள்' என்று
புகார் சொன்னால் நன்றாக இருக்
குமா? வந்த ஆத்திரத்தைப்
பேசாமல் அடக்கிக்கொண்டு
இருந்துவிட்டாள்.

ஆயாளின் கோபமோ கடு
கடுப்போ சூசைக்குப் பெரிய
விஷயமாகப்படவில்லை. அவ
னுக்கு அவன் வேடிக்கையே
பெரிதாயிருந்தது.

மாலை இருட்டுகிற வேளையில்
ஆயாளும் பேரனும் பட்டணம்
போய்ச் சேர்ந்தார்கள். நீண்ட
நாள் கழித்துப் பார்த்ததால்,
சூசைக்கு அந்த வீடே புதிதாக
யிருந்தது. பிலோமினாள் அவ
னிடம் கொஞ்சிக்கொஞ்சிப் பேசி
னாள். ரயிலில் வந்த அலுப்பு;
அன்று சீக்கிரமே தூக்கம்வந்து
விட்டது. சூசைக்கு, அம்மா தான்
சாதம் ஊட்டினாள்; சீக்கிரம்
தூங்கிவிட்டான்.

ஆயாள் சூசையின் போக்
கிரித்தனத்தைப் பற்றியெல்
லாம் வெகுநேரம் பேசியிருந்து
விட்டுப் படுத்தாள்.

மறுநாள் காலை கண்விழித்
தான் சூசை. 'கான்வெண்
டின்' அந்த இருட்டறை

யில் படுத்திருப்பது போலவே நினைத்துக்கொண்டான். சுற்று முற்றும் பார்த்து ஏமாந்து உட்கார்ந்தான். ஆங்காங்கு சுவரில் நிறையப் படங்கள் மாட்டியிருந்தன. வாசலுக்கு வாசல் குழாய் மணிகளும் அழகுறத் தொங்கின. அப்பொழுதுதான் அவன் பட்டணம் வந்திருந்தது ஞாபகம் வந்தது. அதற்குள் அவன் அப்பா வந்து சூசையைத் தூக்கிக்கொண்டு உலாத்தினர்.

சற்று நாழிகைக்குள் இரண்டு மூன்று சிறுமிகள் புத்தகமும் கையுமாக உள்ளே ஓடிவந்தார்கள். அவர்களுக்கெல்லாம் பிலோமினாள் 'டியூஷன்' சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். வந்ததும் வராததுமாக அவர்கள் சூசையைப் பார்த்துவிட்டு "டீச்சர், இவன் உங்க குழந்தைதானே" என்று அவனைத் தூக்கிக்கொண்டு கரகரவென்று சுழற்றினார்கள். ஒருவள் சூசைக்கு மிட்டாய்கூட வாங்கிக்கொடுத்தாள்.

அன்று மாலை ஆயாள் கிறிஸ்மசுக்கு 'கேக்' செய்துகொண்டிருந்தபொழுது, பிலோமினாள் குழந்தையைக் கடைத்தெருவிற்குக் கூட்டிப்போய் வந்தாள். நிறையப் புதுப்புது விளையாட்டுச் சாமான்களுடன்தான் கடைத்தெருவிலிருந்து திரும்பினான் சூசை.

அந்த அழகான பொம்மைக்காரை விடுவதற்காகச் சாவி கொடுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பிலோமினாள் கேட்டாள்: "சூசை, நீ இங்கேயே தங்கிவிடேன். ஆயாள் மாத்திரம் ஊருக்குப்போகட்டும்"

"ஓ! நான் இங்கேயே இருந்துடறேன்" என்றான். உள்ளே இருந்த ஆயாளின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்ததுமே அவளுக்கு என்னமோ மாதிரியிருந்தது.

அன்றிரவு சூசை ஆயாள் பக்கத்தில்தான் படுத்துக்கொண்டான். ஏதோ கதையெல்லாம் சொன்னாள். கடைசியில் "ஏண்டா உனக்கு தம்பி வேணுமா, அல்லது தங்கச்சி வேணுமா?" என்றாள்.

"எனக்கு தங்கச்சி தான் வேணும், கொண்டாயேன்" என்றான் குழந்தை. "அதற்குள்ளேயா! இன்னும் ஏழெட்டு மாதம் தெரிந்துதான் அம்மாவுக்குப் பாப்பா பொறக்கும்" என்றாள். 'ஊ...ம்...உ...ம்' என்று நீட்டிச் சொல்லிக்கொண்டான் சூசை.

இரவு எப்பொழுதோ கண் விழித்த ஆயாள், பக்கத்தில் சூசையைக் காணமல் திகைத்தே போனாள். உடனே எழுந்து விளக்கைப் போட்டுப் பார்த்தாள். கூடத்தில் பிலோமினாளின்மேல் தன் சின்னஞ் சிறு கால்களைப் போட்டுக்கொண்டு நெருங்கியடித்துப் படுத்துக்கொண்டிருந்தான்.

சூசையின் உள்ளம் பர்ட்டிக்கு அப்போதுதான் நன்றாய்ப் புரிந்தது. 'குழந்தை இங்கேயே தங்கிவிட்டால், அங்கு 'கான்வெண்டில்' நம் அறைவீடு வெறிச்சென்றாகிவிடாதோ' என்று நினைத்தபோது அவளுக்கு மனம் சங்கடமாகத்தான் இருந்தது. பிறகு ஒருவாறு தன் மனதைத் தேற்றிக்கொண்டு 'உம் என்ன இருந்தாலும் குழந்

தைக்கு அவன் அம்மா அப்பா தானே உயர்வு' என்று முணு முணுத்துக்கொண்டாள்.

கிறிஸ்துமஸ் முடிந்து ஆயாள் ஊருக்குப் புறப்படத் தயாரானாள். கூடத்திலே சூசை, சாவியை முடுக்கி முடுக்கி தன் காரைவிட்டுக்கொண்டிருந்தான். "இன்னும் என்னடா விளையாட்டு? ஊருக்குப் புறப்பட நேரமாயிடுச்சே" என்றாள். நிமிர்ந்து பார்த்தான், ஆயாளை. தூரத்தில் அப்பொழுது அவனையே கவனித்துக்கொண்டிருந்த தன் அம்மாவையும் பார்த்தான். "நான் உன்னோடு ஊருக்கு வரல்லியே.. சொல்லு..." என்று தன் தோள் பட்டையைத் தூக்கிக்கொண்டே சொன்னான்.

ஆயாளுக்கு ஆரம்பத்தில் இருந்த வைராக்கியம், உறுதி முடிவு எல்லாம் படிப்படியாகக் குறைந்து என்னவோபோல் இருந்தது. இத்தனை காலமாகப் பொல்லாத்தனத்தாலும் போக்கிரித்தனத்தாலும் தன் அறை வீட்டையே கலகலப்பாக்கிக் கொண்டிருந்த பேரன் 'நான் உன்னோடு ஊருக்கு வரலே' என்று சொன்னது என்னவோ செய்தது. அந்த அதிர்ச்சியைத் தன்னால் தாங்கமுடியாதுஎன்று பாட்டிக்குத் தோன்றிற்று. "அப்படின்னா இங்கேயே இருக்கிறதா முடிவு செய்துட்டேயாடா கண்ணு?" என்று குரல் தழுதழுக்கக் கடைசியாக ஒரு தரம் கேட்டுவிட்டு ஆயாள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

வண்டி வந்து நின்றது. வண்டிக்காரன் பெட்டி படுக்கையைத் தூக்கிவண்டியிலேற்றிக்கொண்டான். பிலோமினாளும் சூசையும் ஆயாளோடு வாசல்வரை வந்தார்கள். "சூசை, நீ பொல்லாத போக்கிரிப்பயல். கடைசியில் என்னை விட்டுத்தானே இங்கே இருக்கப்போறே?" என்று தளர்ந்த குரலில் சொல்லியபடியே, அவன் அழகு நெற்றியில் சிலுவைக்குறியிட்டு ஆசீர்வதித்தாள். அவன் இரு கன்னங்களிலும் முத்தமிட்டுச் செல்லமாக நிமிண்டினாள்.

சூசை ஒன்றும் சொல்லவில்லை; சும்மாவேயிருந்தான். ஆயாள் படியின்மேல் கால் வைத்து வண்டியிலும் ஏறிக்கொண்டுவிட்டாள். வண்டியும் நகரப் பார்த்தது.

குழந்தையுள்ளம் குமிழ்த்தெழுந்தது. சூசை என்ன நினைத்துக்கொண்டானோ! "ஆயா, நானும் உன்னோடு ஊருக்கு வரேன். நீ அங்கே தனியாத்தானே கிடப்பே! இங்கேதான் அம்மாவுக்குப் பாப்பாகூடப் பொறக்கப் போறதுண்ணு சொன்னியே!" என்று சொல்லிக்கொண்டே வண்டியண்டை ஓடி வந்தான். ஆயாள் ஆவலுடன் கரங்களை வெளியில் நீட்டி, சூசையை எப்படியோ வாரியணைத்து எடுத்துக்கொண்டாள்.

அதற்குள் வண்டி நகர்ந்துவிட்டது. "அவன் சட்டை தொப்பியெல்லாம் இங்கேயே இருக்கே! கொண்டுவரட்டுமா?" என்று கத்தினாள் பிலோமினாள்.

"வேண்டாம், வேண்டாம். நான் எல்லாவற்றையும் அவனுக்கு அங்கே புதிதாகவே வாங்கிக்கொள்கிறேன்" என்று பதிலளித்தாள் ஆயாள்.

அவள் கண்களிலிருந்து அப்பொழுது ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. குழந்தையின் குஞ்சுக் கரங்கள் அதைத் துடைத்தன. ★

மக்கள் மன்றம்

வாழ்விழந்த தமிழகம்

சீரும் சிறப்பும் பெற்று இலக்கியச் சுவடிகளின் சான்றுகளுக்கு ஏற்ப வளம்பொருந்தி வாழ்ந்த அன்றையக் காவிரிப்பூம்பட்டிணத்து மக்கள் இன்றைய தஞ்சைக்குடி. சோறுடைத்த சோழநாடு — தென்னாட்டு நெற்களஞ்சியம்!

புகார்ப்பட்டிணம் மறைந்தாலும் உயிர்மறையாத அந்தச் நதியான காவிரி பாயும் தஞ்சைப் பட்டிணம் கஞ்சிக்குக் கையேந்தி நிற்கிறது. தஞ்சை மக்கள் நாதியற்று வீதியிலே வீழ்ந்துகிடக்கின்றனர்! கேட்பார் இல்லை. தன் நாட்டுவளம் செழித்து கொழித்த அந்நாளிலே மூலதனங்களை மரக்கலத்திலே அலைகடல் தாண்டி வேற்று நாட்டுக்காரருக்கு விற்று வாணிபம் செய்த தமிழகத்தில் இன்று 'பிள்ளையோ, பிள்ளை'யென ஈன்றெடுத்த தன்னரும் செல்வங்களை வயிற்றுச் சோற்றுக்காக விற்றுப் பிழைத்து வருகின்றனர். அடிமையுள்ளமற்ற, தன்மானமுள்ள தமிழன் இக்கொடுமையினை எண்ணிடும் போது அவன்உள்ளத்திலே வேதனை எழும்பி விம்முகிறது.

பொன்னைக் கொடுத்துப் புலமையைப் பெற்ற தமிழகமா இன்று தன் பிள்ளையை விற்று உயிரைக் காக்க எண்ணிவிட்டது?...

மாற்று நாட்டான் நகைக்கிறான், தமிழன் நிலைகண்டு! ஆனால் கொடுமை யுள்ளம் படைத்த ஆட்சி, நகையை விற்றுச் சுங்கம் செலுத்து என்கிறது.

இந்நிலை மாறவேண்டும்; விரைவில் உதயமாகுமா அந்த இன்பச் சூரியன்? அண்மையிலேயே நம் இன்றைய ஆட்சி பலன் பெற்று, புது வாழ்வு பெற்றுப் பண்டைத் தமிழகத்தின் வழிச்சுவட்டில் ஒளிகாட்டித் திகழுமா?

ந. அன்பரசன்
சென்னை-1

★

தவிக்கும் நாடு

சீர்திருத்தம் பேசுபவர்கள் நாட்டிலே நிறைந்து வருகிறார்கள். பேசுவதைச் செயலில் காட்டுபவர்கள் அவர்களில் இல்லையென்றே சொல்லலாம்.

ஆனாலும் மக்களுக்கு உணவைப் பங்கிட்டுத்தரும் பொறுப்பினின்றும் அரசியலார் விலகிக்கொண்டனர். இது வருந்தத் தக்கது

கஞ்சித் தொட்டிகள் வைத்து, பட்டனிச் சாவுகள் நிகழாமல் தடுக்க முயன்றிருக்கின்றனர் இன்றைய நம் துரைத்தனத்தினர். இது பாராட்டுதலுக்குரியது. கஞ்சித் தொட்டிகள் வைப்பதிலும், பஞ்சைகளுக்குக் கஞ்சியைப் பகிர்ந்தளிப்பதிலும்கூட ஊழல்கள் தோன்றி வளர்கின்றன. இந்நிலை கண்டு கண்ணீர் சிந்தவேண்டும். எல்லா வளங்களையும் நாட்டில் கொண்டிருக்கும் இப் பைந்தமிழ் நாட்டிலே மன வளம்தான் இல்லை.

மக்கள் மனதிலே ஊறிக்கிடக்கும் நச்சுக் கொள்கைகளையும், தீய எண்ணங்களையும் அப்புறப்படுத்தி, அவர்கள் வாழ்வைத் தூய்மைப் படுத்தி முன்னேற்ற ஆங்காங்கே திருக்குறட் கழகங்கள் முதலியன தோன்றிச் சலியாது பணியாற்றவேண்டும்.

வே. கோதண்டராமன்
திருவண்ணாமலை.

காணாமல் போகாத பேசரி

'ராஜ்யா'

வெள்ளிக்கிழமையன்று மாலை நான்கு மணிக்கு, அன்னபூரணியம்மாள் பெட்டி, படுக்கை, ஜமக்காளம், மற்றும் அறையிலுள்ள எல்லாப் பொருள்களையும் எடுத்து உதறிப் பார்த்து வீட்டையே அல்லோல கல்லோலப் படுத்திக்கொண்டிருந்தாள்.

"எங்கே வைத்தேனோ, யாருக்கு நினைவுக்கு வருகிறது. ஊருக்கெல்லாம் வைர பேசரி பண்ணிவிட்ட ஆத்திரம்...போச்சு, போச்சு எல்லோர் கண்ணும் பட்டுப்போய்விட்டதே. ஐயோ..." என்று படபடப்புடன் பேசிக்கொண்டு, தன்னையும் ஒரு தடவை திட்டிக்கொண்டு, அதே சாக்கில் தனக்கு வைர பேசரி பண்ணியதற்காக யாரோ பொறாமைப் பட்டதுபோல் அவர்களையும் சாக்கிட்டு வைது கொண்டு வீட்டையே திணற அடித்துக்கொண்டிருந்தாள்.

'ஆறு மணிக்கு அவர் வந்துவிடுவாரே...என்ன பதில் சொல்லுவேன். ஒரு ரூபாயா...இரண்டு ரூபாயா...தொள்ளாயிர ரூபாயாச்சே...இந்த வீட்டைவிட்டே நான் போயிடவேண்டியதுதான்' என்று அங்கலாய்த்துக்கொண்டாள்.

"ஏன் அண்ணி இப்படியெல்லாம் பேசறீங்க...கைமறதியாய் எங்கேயாவது வைத்திருப்பீங்க...அகப்படாமல் எங்கே போயிடும்" என்றாள் வாணி.

"உனக்குத் தெரியாது... இவ்வளவு நாளாக நான் கழட்டி வைக்கலியா...இன்னிக்குன்னு குறிப்பா யாரோ பார்த்துத் தூக்கிட்டுப் போயிருக்காங்க" என்று பிரலாபித்தாள்.

அதற்குள் அன்னபூரணியின் கணவன் ரங்கநாதன்வந்துவிடவே, வீடே நிசப்தமாகியது. வரும்போதே எள்ளுங் கொள்ளும் வெடித்து வந்த ரங்கநாதத்திற்கு இந்தச் செய்தி இன்னும் ஆத்திரத்தையே அளித்தது.

அன்னபூரணி வந்த வேளை அந்த வீட்டுக்கே அதிர்ஷ்டம் என்று எல்லோரும் சொல்லிக்கொண்டனர். மாமியார்தான் 'மகாலக்ஷ்மி மாதிரி வந்து வீட்டையே வாழவச்சே' என்பாள்.

கலியாணத்துக்கு முன்பு வரையில் ரங்கநாதன் ஒரு வேலையிலும் நிலையில்லாமல் வடக்கே அலைந்துகொண்டிருந்தான். நாற்பது ரூபாம் சம்பளங்கூடச் சரியாகக் கிடைக்காது.

இந்த நிலையில் இருபத்து எட்டு வயதுக்கு மேலாகிவிட்ட ரங்கநாதனுக்குக் கலியாணத்தை நிச்சயம் செய்துவிட்டார்கள். இந்தச் சாக்கிலே வட இந்தியாவுக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வந்துவிட்டான் ரங்கநாதன்.

அன்னபூரணி வந்த வேளை அன்னம் பூரணமாகக் கிடைக்காது, நாட்டிலே இருந்து ரேஷன் அரிசிதான் கிடைத்தாலும், பணத்துக்கு அந்தக் குடும்பத்துக்கு ரேஷன் ஒன்றும் இல்லை.

ரங்கநாதனுக்குத் தூர உறவினர் ஒருவர் பம்பாயில் பெரிய கம்பெனி ஒன்று வைத்திருந்தார். அதன் சென்னைக் காரியாலயக் கிளையை ரங்கநாதன் பார்த்துக்கொள்ளும்படியான சந்தர்ப்பம் உண்டாகியது. இடையே தமிழ்நாடு முழுவதும் பிரயாணம் செய்து கம்பெனிக்கு நல்ல பெயரையும் சம்பாதித்துக் கொடுத்தபடியால் சம்பளமும் உயர்ந்தது. ஸைகிள், மோட்டார் ஸைகிளாகி, மோட்டாராகவும் ஆனது.

ரங்கநாதன் அந்தஸ்து உயர உயர, அன்னபூரணிக்கு அந்த வீட்டில் கௌரவம் அதிகமாகியது. ரங்கநாதனுக்கு மேலிடத்திலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு 'சபாஷி'ற்கும், அன்னபூரணிக்குப் புதுப் புடைவையோ, விதவிதமான நகையோ பரிசாகக் கிடைத்தன.

வைர பேசரியும் அத்தகைய சந்தர்ப்பத்தில் கிடைத்தவொன்றுதான். போனசாக ஆயிரம் ரூபாய் கிடைத்தவுடன், ரங்கநாதன் வைர வேட்டையில் இறங்கிவிட்டான். வீட்டிற்கு, வைரம் பரீட்சை பார்க்க வந்து போகலாயின. நல்ல கல்லாகப் பார்த்துப் பொறுக்கி, பேசரியும் கட்டியானது.

அந்த ஒரு பக்கத்தில் வைர மூக்குத்தியைப் போட்டுக்கொண்டு விளக்கு வெளிச்சத்தில் 'டால்' வீச அன்னபூரணி நடக்கும் காட்சியைக் காணும் எவருக்கும் பொறாமை ஏற்படாதிராது.

அன்னபூரணிக்கு மட்டும் உள்ளூர 'நமக்கு சௌபாக்கியங்கள் வந்து சேர்வதைக் காணப் பிறருக்குப் பொறாமை ஏற்படாதிராது' என்ற பயம் இல்லாமலில்லை. அத்துடன் முதல் வாரம் வந்து சென்ற அவளுடைய தாயார் 'அடி பெண்ணே, இந்த வாரம் விரயகாலம். ஜாக்கிரதையாய் இரு' என்று வேறு கூறிப் போனதிலிருந்து, அன்னபூரணிக்கு எல்லாமே சந்தேகமாகவும், பயமாகவும் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை.

அன்றைய தினம் காலையில் எண்ணெய் தேய்த்துக்கொள்வதற்காகத் தோடு, பேசரி முதலியவைகளைக் கழற்றி வைத்துவிட்டு, குளித்தபிறகும் அணியாமல் சாயங்காலம் வெளியே கோயிலுக்குப் போக ஆயத்தங்கள் செய்ய முயன்றபோதுதான் பேசரி காணாதது கண்ணில் பட்டது.

ரங்கநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "இந்த வீட்டில் எப்படி விலையுயர்ந்த பொருள் திருட்டுப்போகும்? வெளியேயிருந்து எவராவது வந்தனரா? இல்லை வீட்டிலே வேண்டுமென்று எவராவது எடுத்து வைத்துத் 'திண்டாடட்டுமே' என்று இருக்கிறார்களா?" என்று கூச்சலிட்டான் ரங்கநாதன்.

போலீஸிலே உடனே புகார் செய்வதுதான் சரியான முறை என்று அவன் தகப்பனார் யோசனை கூறவே, உடனே காரெடுத்துக் கொண்டு கிளம்பினான்.

வழியே குருமூர்த்தியைச் சந்தித்தான் ரங்கநாதன். காரை உடனே நிறுத்தி, குருமூர்த்தியை ஏற்றிக் கொண்டான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும் விவரத்தைக் கூறவும் குருமூர்த்தி சட்டென்று காரை நிறுத்தச் சொன்னான்.

"இதற்கெல்லாம் போலீஸ் என்று ஓடிவிடக்கூடாது, ராமு. வீட்டிற்குள்ளே யார் வந்து, அதுவும் உன் மனைவியின் பேசரியாகப் பார்த்து யார் எடுத்துச் செல்வார்கள்? வீட்டிலே உன் மனைவியின் பேசரியை எடுத்து ஒளிப்பவர்களும் இல்லை. அதனால் தவறுதலாக எங்கேயாவது தான் உன் மனைவி வைத்திருப்பாள்; திரும்பி வா. வீட்டிற்கே போய்ப் பார்க்கலாம்" என்று கூறிக் காரைத் திருப்பினான் குருமூர்த்தி.

அந்த நிலையில் அவன் கூறுவதும் சரியாகப்பட்டது.

வீட்டிற்கு வந்ததும் குருமூர்த்தி ரங்கநாதன் மூலமாகச் சில கேள்வி களைக் கேட்க, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அன்னபூரணி பதிலளிக்கத் தொடங்கினாள்.

காலையிலே வழக்கப்படி எழுந்து காபி அடுப்பை மூட்டியதாகவும், வேலைக்காரிக்கு பத்துப் பாத்திரங் களை ஒழித்துப் போட்டதாகவும், பிறகு மணியாகிவிட்டதென்று எண் ணெய் தேய்த்துக்கொள்ள ஆயத்தங் கள் செய்ததாகவும், வழக்கம்போலத் தோட்டைக் கழற்றி அஞ்சலப் பெட் டிக்குள் வைத்துவிட்டு, பேசரியைக் கழற்றிக்கொண்டிருந்தபோது மூன்றாவது வீட்டு அம்மா வந்து, அவசரமாக ஒருபடி அரிசி கடன் வேண்டுமென்று கேட்டதாகவும் கூறினாள்.

"வெள்ளிக்கிழமையாயிற்றே அரிசி கடன் கொடுக்கலாமா கூடாதா என்று யோசிப்பதற்குள், என்னவோ தோன்றியது. உடனே அரிசித் தகரத்திலே அந்த வார ரேஷனிலிருந்து அந்த அம்மாவின் முகம் முறிக்காமல் ஒரு படியரிசி கொடுத்தேன். பிறகு குளிபல், சாப் பாடு, தூக்கம்—சாயங்கால்ம் முகம் அலம்பிக்கொண்டு, தோட்டைப் போட்டுக்கொண்டு பேசரியைப் பார்த்தால் காணோம்" என்றாள்.

குருமூர்த்தி வாய் வெற்றிலையை ஒரு முறை உமிழ்ந்துவிட்டு, "ரங்க நாதா......சரி அகப்பட்டுவிட்டது. கவலையேபடாதே...போலீசுக்கு ஓடினாயே...! நம் தவறுதலை நாமே திருத்திக்கொள்ள வேண்டியது தான்" என்று கூறி ரங்கநாதனையும் கூப்பிட்டுக்கொண்டு மூன்றாவது வீட்டிற்குப் போனான்.

அந்த வீட்டில் கிருஷ்ணமூர்த்தி என்னும் பள்ளிக்கூட உபாத்தி யாயர், திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

குருமூர்த்தியும், ரங்கநாதனும் வருவதைக் கண்டவுடன் புன்முறுவ லுடன் வரவேற்றார்.

குருமூர்த்தி வந்த காரியத்தைக் கூறினான். பேசரி காணாமல் போய் விட்டதையும், வீட்டிற்குள் வேறு யாரும் வராததையும், காலையில் அரிசி வாங்க அவர் மனைவி வந்ததை யும் கூறினான்.

கிருஷ்ணமூர்த்திக்குக் கோபம் வந்துவிட்டது. "என் மனைவியைத் திருடியென்றா கூறுகிறீர்கள்" என்று பலத்த சத்தம்போட ஆரம் பித்துவிட்டார்.

குருமூர்த்தி அவரைச் சமாதானப் படுத்தி "திருட்டுக் குற்றம் சாட்ட வரவில்லை சுவாமி. உங்கள் மனைவி அரிசி வாங்க வந்தார்களாம். அப் போது மிஸ்டர் ரங்கநாதனின் மனைவி கையிலேயே பேசரியை வைத்துக்கொண்டிருந்தாள். அரிசி அளக்கும்போது மறந்துபோய் அரிசி யிலேயே பேசரியையும் போட் டிருக்கவேண்டும். அது அரிசியோடு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்பதைக் கேட்கவே வந்தோம்..." என்றான்.

கிருஷ்ணமூர்த்திக்கு விஷயம் விளங் கிற்று. ஆனால் இன்று அரிசியை வாங்கிவந்து சமையல் செய்யவும் முடி யாமல் திடீரென அடுத்த தெருவில் தன் தம்பியின் மனைவியின் பிரசவச் செய்தி வந்ததும் தன் மனைவி போய் விட்டது நினைவுக்கு வந்தது. அப் பொழுது அரிசி அப்படியேதான் இருக்கவேண்டும் என்று சமையல் அறைக்குள் போய்ப் பார்த்தார். வாங்கிய அரிசிபடியுடன் அப் படியே இருந்தது. முறத்தில் கொட்டிய வுடன் காணாமல்போன பேசரி பளிச்சென்று மின்னிக்கொண்டு நின்றது.

ரங்கநாதனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை.

"குருமூர்த்தி! எப்படியப்பா துப்பு துலக்கினாய்" என்று ஆவ லுடன் கேட்டான் ரங்கநாதன். அவர்கள் வீட்டிலும் எல்லோரும் இதேகேள்வியைத்தான் கேட்டனர்.

மந்திரம் என்று கூறினானே யொழிய, காணாமல் போகாத பேசரி, இயற்கையாகப் பெண்களுக்கு நகை வைக்கும் இடமாகிய அஞ்சலப் பெட்டி, அரிசிப் பானையைத் தவிர வேறு எங்கு போகப்போகிறது என்பது தெரியாதா, என்ன! ★

இலக்கிய விமரிசனம்.

எச். ஜி. வெல்ஸ்

காா. அப்பாத்துரை

5

வெல்ஸும் ஸ்விஃவ்ட்டும்

குருடர் உலகம் நமக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்விஃவ்ட் கற்பனையில் கண்ட ஆறு அங்குல மனிதர் உலகு, அறுபது அடி மனிதர் உலகு, மனிதருக்குப் பதில் குதிரை நாகரிகமடைந்திருக்கும் உலகு-ஆகியவற்றைப்பற்றிய கல்லிவர் பயணங்களைச் சிறிது நினைவூட்டவல்லது. ஆனால் பெல்ஸ் குருடர் உலகில் காணும் கற்பனை குழந்தைகளுக்கு மட்டுமே இனிதான கற்பனையன்று. அது சிந்திப்பவர்க்கு இனிய செந்தேன். ஆராய்பவர்க்கு ஆராயும் தோறும் இனிய அமுதம்.

''உலகங்களின் போராட்டம்''

நம் நில உலகில் மட்டுமன்றி வேறு ஒரு உலகிலும் மனித நாகரிகம் இருக்கக்கூடும் என்று அறிவு நூலார் ஊகம் செய்துள்ளனர். அதுவே செவ்வாய் உலகம். செவ்வாய் உலகிலிருந்து அவ்வப்போது வரும் பேரொளியை அவர்கள் அவ்வுலக மக்கள் நிலவுலகைச் சீராக்கிச் செவ்வாய் உலக மக்கள் செலுத்தும் பாரிய செயற்கை ஒளிவிளக்கோ என்று ஐயுறுவதுண்டு. அப்படியானால் செவ்வாய் உலகிலுள்ள மக்கள் நம் உலக மக்களைவிட நாகரிகத்திலும் அறிவாராய்ச்சியிலும் முன்னேறியிருக்க வேண்டும். ஏனென்றால் கதிரவனொளிபோல அல்லது திங்கள், விண்மீன்கள் ஒளிபோல, உலகு கடந்து உலகளாவத்தக்க செயற்கை ஒளி விளக்கெதுவும் நாம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

செவ்வாய் உலக மக்கள் நில உலக மக்களைவிட நாகரிகத்தில் உயர்ந்த நிலை அடைந்திருக்கக்கூடும் என்ற இந்த ஊகத்தைக் கற்பனைக் காட்சியில் மெய்ம்மையாகக் காண்கிறார் வெல்ஸ். அத்துடன் இன்னும் நில உலகில் காணப்படும் பறக்கும் தட்டுக்களையும் இணைத்து ஒரு கற்பனைக் கதையே கட்டப்படுகிறது. பறக்கும் தட்டுக்கள் என்ன, எப்படி இயங்குகின்றன என்று இன்றும் அறிவு நூல் விளக்க முடியவில்லை. வெல்ஸ் கற்பனைக் கண்களில் அவை நில உலகுமீது படை எடுக்கும் செவ்வாய் உலக மக்களின் பாரிய விமானங்கள் அல்லது 'ஒண்கலங்கள்' ஆகின்றன. ஜெர்மனியர் ஜெர்மனியை நிறைத்து வாழ்க்கையிட அகலம் (*Liebensraum*) நாடிப்புற உலகில் தாக்குதல் தொடங்கியதுபோல, செவ்வாய் உலக மக்கள் செவ்வாய் உலக முழுதும் அறிவு நூல் வளர்ச்சி காரணமாக நிறைந்து, நில உலகில் படை எடுக்கின்றனர்.

அபாரமான கற்பனை

செவ்வாய் உலக மக்களின் அறிவு நூல் வளர்ச்சி, அவர்கள் உடல் நிலை, உரை நிலைபற்றிய வெல்ஸின் கற்பனை அபாரமானது. இயற்கையின் கருவியாற்றலில் நம் நிலவுலக அறிவு நூல் வளர்ச்சி இயந்திரக் கருவிகளை நெம்புகோல் (*Lever*) சக்கரம் (*Wheel*) ஆகிய இருவடிவங்களாகவே அமைந்துள்ளது. இவை இயற்கையில் இயல்பாக இருப்பவை அல்ல. சக்கரத்தால் குதிரையும் மனிதனும் இயங்கவில்லை. கால் கைகளாகிய உந்துகோல்களாலேயே இயங்குகின்றன. செவ்வாய் உலக மக்களின் இயந்திரங்களும் ஊர்திடலும் சக்கரங்களால் இயங்கவில்லை. கை கால் போன்ற, பலவகை மடிவுடைய கை, கால் போன்ற உந்து கருவிகளிலேயே இயங்குகின்றன. அவர்கள் விமானம் வெடிகுண்டு போன்ற சக்தியால் வானைத் துளைத்து நிலத்தை அடைகிறது. ஆனால் இங்கே நிலத்தில் இயங்கும்போது மூன்று கால்களில் இயங்குகிறது.

(மேலும் கட்டுரைகள் வரும்)

ஒற்றை ரோஜா

எஸ். ஆறுமுகம்

ஏழாம் அத்தியாயம்

இதய முள்

தன் நினைவு வந்து கண் விழித்துப் பார்த்த பூமா, சுவர்க்கடிகாரம் இரவில் மணி பத்து அடிப்பதை உணர்ந்தாள்.

'ரொம்ப நாழி ஆகிவிட்டதே' என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்க முயன்ற அவள், தன் உடல் வேதனையை அறியவே, சற்று முன் நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றாக அப்பொழுது அவள் மனதில் தெளிவு பெற்றன.

ஓடிப் போய்க் கணவனின் அறையைப் பார்த்தாள். அங்கு ராஜேந்திரன் இருந்தால் அல்லவா? ஓடிப்போன சுவட்டிலேயே தன் உயிர்த் துணைவரின் காலில் விழுந்து, தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று தான் அப்படி அவள் விரைந்தோடினாள். அறையில் கணவனைக் காணாததும் அவள் ஏமாற்றமடைந்தாள். அவளை எள்ளி நகையாடுவது போல மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த பூப் போட்ட தலையணையை, அலங்கோலமாகக் கிடந்த பட்டு மெத்தையை, இமைக்காமல் பார்த்து நின்றாள் பூமா. நீர்முட்டிய விழிகளைக் கொண்டு சுவரின் எதிர்ப் பக்கத்தை நோக்கினாள். ரவிவர்மாவின் பேசும் சித்திரங்கள் வாய்மூடி மௌனிகளாக நகைத்து நின்றன. முதன் முதலில் துஷ்யந்தனைக் கண்டதும் சகுந்தலை நாணித் தலை குனிந்து நிற்கும் பாணியைச் சித்தரித்திருந்த படத்தில் அவள் கண் குறிப்பிருந்தது.

அடிநாளில் அவள் தன் அத்தான் ராஜேந்திரனின்மீது கொண்ட அன்புக் காதலின் சம்பவத்தை நினைத்துப் பார்த்தாள். அவளுக்கு அனைத்தும் கனவு கண்டு மறைந்தது போலத்தான் இருந்தது.

கடிகாரம் ஒருமுறை அடித்து ஓய்ந்தது. மணி பத்தரை— இரவில்.

"அவர் எங்கே? இன்னும் காணோமே?"

கடிகாரம் மணிக்கொரு முறை அடித்து ஓய்ந்ததும், அவளுக்கு மேற்கண்ட கேள்வி வினா வடிவில் அவள் முன் கொக்கியிட்டு நின்றது. யார் பதில் சொல்ல இருக்கிறார்கள்? எப்படித் தான்

பதில் சொல்ல முடியும்? என்ன தான்:பதில் கூற இருக்கிறது?..

இரவின் படுதா பூரணமாக விரிக்கப்பட்டது. உலகம் திரை மறைவில் மோன நித்திரையில் ஆழ்ந்து விட்டிருந்தது. வானத்தைக் கவ்வியிருந்த மேகப்படலம் விலகியது. அங்கங்கே இலையுதிரத் தளிர் துளிர்ப்பது போல, நட்சத்திரங்கள் சில சில ஒளி பொழிந்து கொண்டிருந்தன.

'ராஜேந்திரன் வருவான்' என்று உணவு எடுத்து வைத்துக் காய்ந்தது தான் மிச்சம். அவன் கடைசிவரை வரக் காணோம்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது.

'நல்ல பொழுதாக விடிய வேண்டுமே' என்ற பிராத்தனையுடன் படுக்கையை விட்டெழுந்தாள் பூமா. அன்று பூராவும் கூடக் கணவன் வீட்டுக்கு வராததறிந்து, அவள் அடைந்த வேதனை இவ்வளவு அவ்வளவல்ல. கொண்ட கணவன் அல்லவா?

நாள், நாட்களாகிப்பின் ஒன்று, இரண்டு, மூன்று என்று காலத்தின் எல்லைக்கு உள்ளடங்கி நழுவிப் போயின. அவை ஒவ்வொன்றும் அவளுக்கு ஒவ்வொரு யுகமாகத் தோன்றின. பொழுது விடிந்ததும் 'இன்றாகிலும் என் அத்தான் வந்து விடுவாரா?' என்ற ஆசையுடன் அவள் கதிரவனின் மலர்ச்சியைக் காண்பாள்; ஆனால் பொழுது ஆகியும் ராஜேந்திரன் வரமாட்டாதது கண்டு அவள் இன்பக் கனவு தேய்ந்துவிடும். பூமிதேவியைப்போலப் பொறுமையுடன் வீற்றிருக்கும் பூமாவிற்கு அழுகை ஒன்றே கவலைச் சுமை கரைய உதவியது. அன்னை பூமிக்கு அர்ப்பணித்த அவள் கண்ணீர்க் காணிக்கை

எத்துணையோ? காணிக்கை— இன்னும் இந்த அபலை மண்ணில் நடமாடப் பாக்கியம் பெற்றிருக்கிருளே என்று ...?

அன்று பூமா, மேஜை மீதிருந்த ஒரு கடிதத்தை பார்த்தாள். ராஜேந்திரன் எழுதியிருந்தான். படித்தாள்.

'இனிமேல் என்னை எதிர்பார்க்க வேண்டாம்'

தந்தி பேசவில்லை; ஒரு வரிக் கடிதம் பேசியது. கணப்புக்குழியில் கால்தவறி மிதித்துவிட்டாற்போல அவள் துடித்தாள். உடலில் ஒவ்வொரு அங்கமும் துடித்தது. அவள் பெருமூச்சு விட்டாள். நெஞ்சு ஏறித் தணிந்தது.

'இனிமேல் என்னை எதிர்பார்க்க வேண்டாம் — ஏன்? யாருக்குத் தெரியும்? அப்படியென்ருல் அவர் என்றுமே வர மாட்டாரா?...குற்றம் செய்வது மனித இயல்பே யல்லவா? செய்த குற்றத்தை மன்னிப்பது அல்லவா தெய்வக் குணம்? என் மீது அப்படி என்ன அவர் மனம் குறை காட்டிற்று? அப்படியென்ருல் என்கதி—என் நிலை— என் இன்பச் சுமையின் விடிவு...? பெண் பூரணத்துவம் பெறுவதென்ருல் அது அவள் பதியின் உள்ளப் பாங்கையொட்டியல்லவா? அன்று விஜயாவின் அத்தான் – விஜயா இவர்களுடன் நான் படம் பார்க்கச் சென்றது தாஞ அவர் என் மீது கண்ட குறை? வாய் திறந்து என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே. அன்று தான் என்னை எட்டி உதைத்தாரே. என் இன்பக்கனவைக் கூடச் சட்டை செய்ய வில்லையே



அவர். அதைக் கூடப் பொறுத்திருந்தேன். நான் தாய் ஆகி வருவது அவருக்குத் தெரியுமல்லவா? தெரிந்தும் கூடவா இப்படி நடந்து கொண்டார்...'

கடிகாரத்தின் பெண்டுலம் போலப் பூமாவின் பூமனம் முன்னும் பின்னும் அசைந்தாடியது, அவள் மனசாட்சிக்கு உகந்தவாறு.

சோகமே உருவாக அமைந்த அவள் முகம் பேயறைந்த மாதிரி வெளிறியது.

சுடுகாட்டு அமைதி. தனிமை அவளைக் கொன்றது. விஜயா கூட இல்லை. அவள் தன் அத்தானுடன் ஊருக்குப் போய் விட்டாள்; அண்மையில் அவள் விஜயா குமாராகி விடுவாள்!

ஒன்றும் தோன்றவில்லை பூமாவுக்கு. மறுகணம் என்ன வோ தோன்றவே, நடுக்கத்துடன் தன் துணைவரின் அறைக்குள் நுழைந்தாள். அவளுக்கு முகமன் கூறியது ராஜேந்திரனின் புன்னகை தவழ் வதனம். அண்டினுள்; அந்தக் கொள்ளைச் சிரிப்பிலே எவ்வளவு காந்தமயக்கம் இழைகின்றது? அந்தப் பார்வையில்

தான் எத்தனை ஆதரவும் அருளும் படர்ந்திருக்கிறது? பட்டமளிப்பு விழாவின் சமயம் எடுத்த படம் அது. அவள் கண்களில் கண்ணீர் இருந்தது.

மேஜை மீதிருந்த புகைப்படம் ஒன்று அவள் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. தனதாக இருக்குமென்று ஆவலுடன் அவள் கண்கள் படத்தைப் பார்த்தன. ஒருகணம் அவள் அதிர்ச்சியடைந்தாள். அது அவள் படமில்லை!

"மல்லிகா"

அவள் அதரங்களின் கூட்டுறவில் 'மல்லிகா' என்ற பெயர் வெடித்துக் கிளம்பியது. அப் படத்தின் கீழிருந்தது அந்தப் பெயர்!

மல்லிகாவின் எழில் உருவம் அவள் நெஞ்சில் பதிந்தது. பெயரின் அடியிலிருந்த 'இதயராணி' என்ற சொல் அவளைச் சாறு பிழிந்தது.

'இவள்தான் என் கணவரின் மனதை மாற்றிவிட்ட கள்ளியோ? இவள் அழகுக்கு அடிபணிந்துதானு என்னை அவர் இப்படிப் புறக்கணித்து விட்டார்? ஆம்; அவர் மல்லிகாவின் வீட்டில்தான் சரணடைந்திருக்க வேண்டும். அப்படி யென்ருல் யார் இந்த மல்லிகா? எங்கு இருக்கிருள்?'—பூமாவின் கற்பனை ஓட்டம் இது.

அந்தப் படத்தைத் தூர எறிந்து விட்டுப் படுக்கையில் விழுந்து அழுதாள்.

அன்று—அதாவது பூமா ராஜேந்திரனின் சொத்தாகி விட்டதிலிருந்து அவளுக்கு வாழ்வே ஒரு எழிற் கனவாகத் தெரிந்தது. ஆனல் இன்றைக்கு அதே வாழ்வு அவளுக்கு ஒரு பகற் கனவாகி விட்டது. நீர் இறுதியில் கானல் ஆனது போலவோ...?

"பூமா, மனிதன் என்றிருந்தால் அவனுக்கு ஒரு இதயம் தான் உண்டு. அதை ஒருத்திக்குக் கொடுத்து விட்டால், அப்புறம் அதை வேறு எவளுமே அடைய முடியாது".

அன்று 'முதல் இரவில்' தன்னிடம் தன் கணவன் கூறிய அவ்வார்த்தைகள் இன்று கூறுவதுபோல் விழுந்தன பூமாவின் காதுகளில்.

அவள் மூளையில் சத்து இருந்தது.

'ஆம்; அவருக்கு இருக்கும் அந்த ஒரு இதயத்தையும் என்றைக்கு மல்லிகாவுக்குக் கொடுத்தாரோ? அவள் ஆண்ட நெஞ்சிலே நான் எப்படி இடம் பெற நினைக்க முடியும்? அடிக்கொரு முறை என்னிடம்—என் ஒருத்திக்கே அவர் உள்ளம் ஒப்பந்தம் செய்யப்பட்டது போலக் கூறியதெல்லாம் பகட்டுத்தானு?'

பெண்புத்தி பிறப்பித்த எண்ணம் சாரம் பெறவில்லை; அவள் அமைதி பெறவில்லை. தன் உள்ளத்தைத் திறந்து காட்டி, அதன் தலைவாயிலில் அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச் செய்து, மறுபடியும் தாம்பத்தியம் உயிர்ப்படைய எண்ணங்கொண்டிருந்த அவளுக்கு இந்த இடி பெரும் வேதனையைத் தந்தது.

மல்லிகாதான் அவள் கணவனை மயக்கிவிட்டாள் எனக் கொண்டிருந்த பூமா அவளை

'மாயக்காரி' என்று சபித்துக் கொட்டினாள்.

ஒரு பெண்ணின் கண்ணீரில் இன்னொரு பெண் களிப்புக் காணுவதைக் கண்டு அவள் விரக்தியடைந்தாள். வாழ்வு அவளுக்கு விடுகதையாகப்பட்டது. பாருங்கள்; விடுகதைக்குக் கூடக் கடைசியில் விடை கிடைத்துவிடுமே! மல்லிகாவின் மீதுதான் பூமாவின் ஆத்திரம் பூராவும் ஆரோகணித்துவிட்டிருந்தது. ஆனால் உண்மை...!

'அவராவது வருவதாவது?'—பூமா இப்படி வாய்விட்டுத் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அதற்கு எதிரொலியாக வாய்விட்டுச் சிரிப்பதைப்போலச் சில வார்த்தைகள் கடந்த நிகழ்ச்சியின் பின்னணியில் புறப்பட்டன.

'ரோஜாவாக மலர்ந்தும் மதிப்பில்லையானால் பிறகு முள்ளாகச் சுருக்கென்று தைத்துவிட வேண்டுமென்பதுதான் என் கொள்கை...'

அன்று ரேடியோ நாடகமொன்றில் கேட்ட அவ்வார்த்தைகள் அவளுள் புரட்சியாக மாறிக் கனலை எழுப்பிக்கொண்டிருந்தன. அவளது இதயத்தின் இதயத்தினுள்ளே பெண்மை கனன்றது; ரோஜா முள்ளாகியது—பெண் பேய் ஆனாள்...!

முடிவு இப்படி அவளுக்குச் காட்சியளித்து நின்றது. பெண் உள்ளம் பேதலித்தது. கணவன் தன்னைச் சீந்தாமல் புறக்கணித்துவிட்டுச் சென்றதை எண்ணிப் பார்த்த பூமாவுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு வலுவுற்றது. தலைவிரி கோலமாகப் பைத்தியம் பிடித்தவளாக ஓடி வந்தாள். அலமாரியைத் திறந்தாள்.

விஷம்!

சீசாவில் ஒட்டியிருந்த சிவப்பு எழுத்துக்களை அவள் விரல்கள் தடவின; அவள் பார்வை தடுமாறியது. நடுங்கும் கைகளுடன் சீசாவை எடுத்துக்கொண்டாள்.

'இதில் ஒரு சொட்டை உட்கொண்டுவிட்டால்!'—

இந்த நினைவுக்கதிர் அவ்ளுக்கு ஆறுதல் தந்தது. விரக்தியுற்ற அவளுக்குச் சாவு ஒன்றுதான் மருந்தாகப்பட்டது போலும்!...

கணத்தில், சீசாவை வாயருகில் கொண்டு சென்றாள். அதே கணம் பூமா நடுங்கிப்போனாள். கை, கால், உடல் எங்கும் நடுக்கம் ஏற்பட்டது. சீசாவைப் படாரென்று நழுவவிட்டாள். அப்போதுதான் அவளுக்குச் செய்யவிருந்த மன்னிக்கமுடியாத பாவம் புலனாயிற்று. வயிற்றில் வளர்ந்து வரும் இரண்டில் ஒன்றான ஒரு புது ஜீவனைப்பற்றிய ஞாபகம் அவளுக்கு மனசில் பாலை வார்த்தது. சாவின் வாயிலிருந்து தப்பிய அவள், தன் குழந்தை

அறிவிப்பு

14-1-53ல் பொங்கல் மலர் வெளிவருவதால், 15-1-53 பொன்னி இதழ் நிறுத்தப்பட்டிருக்கிறது. அடுத்த இதழ் 1-2-53ல் வழக்கம்போல வெளி வரும்.

—பொன்னி லிமிடெட்

யையும் காப்பாற்றிவிட்ட புண்ணியத்தையும் சம்பாதித்துக் கொண்டாள். அப்போது அவளுக்கு, வளரும் குழந்தை வாழும் தெய்வமாகத் தோன்றிற்று. அவள் பெருமூச்செறிந்தாள். அதில் அமைதி கனிந்தது.

மாலையில் தன் கணவனுக்கு வந்திருந்த தபால் நினைவு அப்போதுதான் வந்தது. அவள் அதைப் பார்த்தாள். அது திருமண அழைப்பிதழ். உள்ளே காணப்பட்ட தம்பதிகளாகப்போகும் இணைப்பின் இரு உருவங்களைப் பார்வையிட்டாள். மணப்பெண்ணைப் பார்த்ததும் அவளுக்கு எங்கோ பார்த்த முகமாகத் தோன்றியது. அன்று காபியுடன் அவள் வரும் சமயம், காரிலிருந்து இறங்கி தன் அத்தானுடன் இணைந்து வந்த அந்த அழகியை அவள் அடையாளம் புரிந்துகொண்டாள். அவள்—பூங்குழலிக்குத்தான் திருமணம். அழகிக்கு ஏற்ற அழகனாகத்தான் இருந்தார் மாப்பிள்ளை. மணமக்களின் பெயரைப் படித்தாள்.

பூங்குழலி — டாக்டர் குணசீலன்

குணசீலன் என்ற பெயரைப் படித்ததும், பெயருக்குரிய உருவத்தைக் கண்டாள். தன் தந்தையின் உயிரைக் காப்பாற்றித் தந்த டாக்டர் இவர்தான் என்பதை அப்போதுதான் அவளால் அறிய முடிந்தது.

அன்று தன் கணவன் தான் கொணர்ந்த காபியையும் அசட்டை செய்து விட்டுப் பூங்குழலியுடன் காரில் சென்ற இரவில் அவளைப் பலவாறு நிந்தித்ததும், அச்சமயம் அவள் இதயத்தின் கடந்த நினைவலையைப் புரட்டிவிட்டது. அதற்கு அவள் இப்போது வருந்தினாள்.

அழைப்புடன் இணைத்திருந்த கடிதமே அதற்குக் காரணம்!

"அன்புள்ள நண்பரவர்களுக்கு,

எங்கள் திருமண விழாவுக்குக் கட்டாயம் தாங்கள் சகோதரி பூமாவுடன் தம்பதிகள் சகிதம் வந்திருந்து எங்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தங்கள்,

குணசீலன்—பூங்குழலி"

அடுத்த நாள் பூமாவைப் பார்த்துப்போக, விருந்தினராக வந்திருந்த மங்களம்-ஆனந்தன் தம்பதிகள் வீடு பூட்டியிருந்ததைக் கண்டு, அக்கம்பக்கத்தில் விசாரித்தனர். விடிகாலையில் பூமா எங்கோ புறப்பட்டுப் போனதாகச் சொன்னதைக் கேட்டுச் சிலைபோல நின்றார்கள் அவர்கள்.

எட்டாம் அத்தியாயம்

கன்னித்தாய்

வாலைக் குமரி போன்ற எழில் மிக்க பூங்கொடி; பருவச் சுழற்சியில் பூத்துப் புன்னகை புரிய வேண்டிய தொன்று. காலச் சுழற்சி விநோதமானது; கொடி பாவம், காய்ந்து விடுகிறது. அதற்குப் பின்னிப் படரக் கொழு கொம்பு ஒன்று உண்டு. அது சுழலில் ஒடிந்து விழுந்து விட்டது. கொடி எங்ஙனம் பிறகு தாவிப் படர முடியும்? பூங் கொடி... ஆம்; பின் அதற்கு வளமேது? வனப்பேது? வாழ்வு தான் வகைப்படுமா?

ஏன்?

"ஏன்?"

இது மல்லிகாவின் புதிர்க் கேள்வி. மல்லிகா தனி மரமா னாள். மரணப் படுக்கையில் சாவுடன் போராடிவிட்டு அவள் தந்தையும் விதிவழி ஏகிவிட் டார்.

தனக்குக் கல்யாணம் செய்து வைத்துக் கண் குளிரப் பார்க்க வேண்டுமென்றிருந்த அப்பா வின் கடைசி ஆசை நிறைவேறக்கூட வில்லையே என்ற நினைவு அவள் தளர்ந்த நெஞ்சைத் தள்ளாடச் செய்தது. தன் கல்யாண நினைவு ஒன்றி லேயே அவரது இறுதி மூச்சின் இழை பிரிந்ததென்பதை மல் லிகா எவ்விதம் மறப்பாள்?

அவள் மனச்சாட்சி அவளைக் குத்திக் காட்டியது; குறை சொன்னது.

'அழகு மறைந்த தன்னை மணக்க உலகிலே அப்படி யார் முன் வரப் போகின்றார்கள்' என்ற தீர்மானமான காரணமே அவளுக்கு வைராக்கியத்தை பலப் படுத்தி விட்டிருந்தது.

மரணச் சடங்குகள் ஒரு வழி யாக முடிந்தன. 'கடனு'க்கு வந்து மொய்த்த உறவினர் கள் திரும்பினார்கள். மல்லிகா வுக்குத் துணைக்கு ஒரு பாட்டி மட்டும் வீட்டோடு இருந்தாள்.

தன்னந்தனியே இருந்த அவ ளுக்குப் புதைந்த ஞாபகங்கள் எல்லாம் அடிக்கடி புத்துயிர் பெற்றன.

சென்ற ஆண்டுத் தொடக் கத்திலே இதே சமயம் அவள் இருந்த நிலவரமும், இப்போது அவளை ஆண்டவன் ஆக்கியிருக் கும் அலங்கோலக் காட்சியும் இரு படித் தட்டுகளின் நிறை யாக நிற்க, அவள் உள்ளுணர்வு சம்பவங்களைத் தராசு முனையில் வைத்து எடை போட்டுப் பார்த் தது.

அப்பொழுது மல்லிகா அழ குக் குமரியாக, கனவுப் பதுமை யாக, பேசும் பொற்சித்திர மாகக் காட்சியளித்தாள். ஆனால் அவள் எழில் யார் கண் ணைக் கரித்ததோ? அழகைப் பலி கொண்டது அம்மன். அவள் சிரித்தனளோ? இவள் அழுது விட்டாளே... அழுகின் றாளே... அழுது தீர்க்கக் காத் திருக்கின்றாளே......!

வண்ண மலர் வாடிவிட்டது. பிறைமதி தேய்ந்தது.

"ஏன்?"

அதன் முடிவு...!

கிட்டத்தட்ட கடந்த ஒரு ஆண்டாகப் பத்திரிகைகளுக்கு

ழுத்துக்கள் படிப்படி
வடிவம் பெற்றன.
ீது காற்றில் தாறு
கிடந்த பழைய சஞ்
றைக் கையை நீட்டி
, 'சிதைந்த காதல்'
அச்சுப்பிரதி அது.
தன் கிலேயைச் சித்
க்கும் அக்கதையை
றுபடியும் நினைத்துக்
ள். அச்சேறிய முதல்
து.

தாக எழுதியிருந்ததை அவர் பார்த்து, அதேபோல நானும் ஆகிவிடுவேனோ என்று வது எண்ணிப் பார்த்திருப்பாரா?...

அவர் எதற்கு இனி என்னைப பற்றி எண்ணப்போகிறார்? இன்பத்தின் உச்சியில் அல்லவா அவர் இப்போது திக்குமுக்காடிக்கொண்டிருப்பார்? அவரைப்பற்றி வீணாக என் உள்ளத்தை அலட்டிக்கொள்வதற்கு நான் யார்? அவர் யார்?...

தினம் மாடியினின்றும் விழுந்து படுக்கையில் கிடந்து, வேதனை குணப்பட்டதும், நாவலுக்குரிய கதையைப்பற்றி அவள் சிந்தித்தாள். தாயின் கருப்பையில் வளரும் சிசுபோலக் கதை அவள் சிந்தனையில் வளர்ந்தது. தாம்பத்திய வாழ்க்கையின் உணர்ச்சிச் சித்திரம் அது. தன் அனுபவத்துக்குப் புறம்பான பரீட்சையின் விளைவுதான்

யாயத்திலும் அ
முன் நின்று பேசுவ
தது. அத்தகைய
லெல்லாம் அவ
சலனமுற்று விடு
பிடித்த கரங்கள்
முகத்தை ஏந்தி
யும் மறந்து யே
முனிவரைப் போ
வாள். மல்லிகா
கரைந்து காகித
ளும்; அதே ச
தெறித்துக் க
மேனியிலுமாகப்
ஒண்ர்வு பெற்ற
உணர்வும் உயிர்
மல்லிகா சுயநினை

ஒருநாள்...!

குறைவிட்டிருந்
யத்தை முடித்து
ரூட உட்கார்ந்தி
லிகா. கடந்த பல
கதை எழுதுவது
வரை கண்டிராத
யும் ஆனந்தத்தை
அனுபவித்தாள்.

மித்துப் பழகினதுபோல நட்புரிமை கொண்டார்கள். நட்பு ஒரு வகையில், தொட்டால் ஒட்டிக்கொள்ளும் பசை போல.

ஏதேதோ பேசித் தீர்த்தார்கள். கதையுலகம் பற்றிப் பேச்சு எழுந்தது.

"மல்லிகா, உங்கள் முதல் கதை எது? எழுத்தாளர்களுக்கு முதல்கதைதானே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது, தாய்க்கு முதல் குழந்தை போல!"

"என் முதல் கதையா, விஜயா? அது ஒரு புண்பட்ட உள்ளத்தின் வேதனைப் பிரதிபலிப்பு. உண்மை நிகழ்ச்சியுடன் முடிவு கற்பனையாகிவிட்டிருக்கிறது."

"கதையைக் காட்டாமல் விமரிசனம் கூறினால்..."

"கதையை இதோ தருகிறேன்" என்றாளே ஒழிய, அவளுக்குத் தன் முதல் கதையை விஜயாவிடம் காட்ட மனமொப்பவில்லை. அவள் தயங்கினாள். வேறு ஒரு கதையைக் காட்டினால் என்ன...?

மல்லிகா யோசனை செய்தாள்.

"மல்லிகா, உங்கள் முதல் கதையின் தலைப்பு 'சிதைந்த காதல்' அல்லவா?"

இதைக் கேட்டதும் மல்லிகா அயர்ந்துபோனாள். அவ்விடமிருந்து எப்படி இனி மல்லிகா தப்பமுடியும்?

மறு விநாடி விஜயா அவளது முதல் கதையைப் படித்து முடித்தாள்.

"மல்லிகா, இந்தக் கதையைப் படித்து இதில் உள்ள ராஜேந்திரன் என்ற பெயரைக் கண்டவுடன் எனக்கு ஞாபகம் வருகிறது. ராஜேந்திரன் என்பவரை உனக்குத் தெரியுமா? பாவம், பூமா என்ற தன் இளம் மனைவியைப் பரிதவிக்கவிட்டு அவர்..."

விஜயா முடிப்பதற்குள் மல்லிகாவுக்குப் பொறுக்கவில்லை.

"அவர்..."

"எங்கோ ஓடிவிட்டார்...! பாவம், பூமாவைப் பற்றியும் இன்றுவரை ஒன்றும் தெரியவில்லை. அவளுக்குக் குழந்தை பிறந்த செய்தி மட்டும்தான் தெரிந்தது. அவளையும் குழந்தையையும் பார்க்கப் பலமுறை பல இடங்களுக்குச் சென்றேன்; காணமுடியவில்லை. இந்நிலையில் அவள் பச்சைக் குழந்தையுடன் எவ்வளவு துன்பப்படுவாளோ?"

"விஜயா, உங்களுக்குப் பூமாவைத் தெரியுமா? அவள்தான் ராஜேந்திரனின் மனைவியா? அப்படியென்றால் அவள் பாக்கியம் செய்தவள். ஆனால், நீங்கள் கூறும் இந்த இடியைக் கேட்டால்...ஆமாம்; ஏன் அவர் அப்படி ஓடிவிட்டார்? எங்கே ஓடினார்? எவ்வளவு நாட்களாகின்றன?"

"மல்லிகா, அதுதான் காரணம் புரியவில்லை. அவர் ஓடிப்போய் மாதங்கள் பல ஓடிப் போய்விட்டன. ஆமாம்; ராஜேந்திரனை உங்களுக்கு..."

"விஜயா, ராஜேந்திரனை எனக்குத் தெரியும். அது ஒருகதை.." என்று நிறுத்திப் பெருமூச்சு விட்டாள் மல்லிகா. அடுத்த நிமிஷம் அவள் கதை சொன்னாள். கதை அல்ல அது; அவள் வாழ்க்கையின் கண்ணீர்ப்படலம் அது!

முன், ராஜேந்திரன் மதுரையில் வேலைபார்த்து வருவதைத் தந்தை சொல்ல அவள் கேட்டிருந்தாள். தப்பித் தவறி அவன் கண்ணில் தான் பட்டு வைக்கக்கூடாதே என்று அடிக்கடி மனம் மருகி நிற்பாள். கடைசிவரை அவள் அவன் கண்ணில்படவில்லை. அப்படித்தான் அவள் எண்ணியிருந்திருப்பாள். ஆனால், அன்று ஓர்நாள் ரிக்ஷாவில் சென்ற மல்லிகாவைக் கண்டதும்தானே ராஜேந்திரனின் வாழ்க்கை நிலவு வானத்திலே கிரகணம் கறைகண்டது...? அதுதானே பூமா—ராஜேந்திரன் தம்பதிகளின் பிளவுக்கு, பிரிவுக்கு அடித்தளம் பரப்பி விட்டது...!

ராஜேந்திரனைப் பற்றிப் பேசெழுந்ததும் அவள் தன் உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு அணையிட முடியவில்லை. விஜயாவிடம் தன் உள்ளத்தைத் திறந்து பேசினாள். தன் 'முதல் காதல்' முறிந்ததிலிருந்து தனக்கு வாழ்க்கையே முறிந்துவிட்டது என்றாள் மல்லிகா.

"விஜயா, ராஜேந்திரனின் விபரீதச் செய்கை வியப்பாக இருக்கிறது. அபலை பூமாவைக் கைவிட்டு விட்டாரே, பாவம்? பூமாவைப்பற்றி விபரம் அறிந்து சொல்லுங்கள். அவளிடம் எனக்கு அனுதாபம் மேலிடுகிறது. என்னாலான ஆறுதல் கூறுவேன். அவளிடம் பேசுவது மூலம் எனக்கும் அமைதி ஏற்படும். அவள் பிள்ளைக் கனியமுதை நான்கண்டால் எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கும். பூமாவையும் அவள் கணவர் ராஜேந்திரனையும் மறுபடியும் இணைக்க என்னாலானதைச் செய்வேன். விஜயா, ஏனோ எனக்குத் தினமும் வாழ்க்கையில் விரக்தி மோதி நிற்கிறது. பலமுறை நானே என் உயிரை மாய்த்துக்கொள்ளமுயன்றேன்; முயல்கிறேன். என் மனம் என்னைஒருசமயம் குத்திக்காட்டுகிறது. மறுசமயம் என்னை ஏளனம்செய்கிறது. மூன்றும் தடவை என்னை ரம்பமிட்டு அறுக்கிறது. இந்த வேதனையை என்னால் பொறுக்கவே முடியவில்லை. எனக்குள் ஏதோ ஒரு மாற்றம் தேவைப் படுகிறது. இருண்ட என் வாழ்க்கைப் பகுதியில் சிறு விண் மீன் ஒளிரும் ஒளிப்பகுதியாகவேனும் அமையக்கூடிய ஒரு கட்டம் தேவைப்படுகிறது. அந்த அனுபவத்தை—தேவையை இக்கணமே நான் உணர்கிறேன். என் மனக்குரங்கின் பித்தலாட்டத்தில் அரைகுறையாகவிருக்கும் என் நாவல் கூட எங்கே பூர்த்தி பெறுதோ என்று கூடக் கலங்குகிறேன். அப்படியாகிவிட்டது என் உள்ளம். விஜயா, எனக்கு மாற்றமளியுங்கள். அந்த மாற்றம் பூமாவின் மூலம் உதயமாகவேண்டும். அவள் குழந்தையின் தரிசனம் இந்த அபலைக்குக் கிட்டச் செய்யுங்கள்..."

மல்லிகாவிற்குத் தன் நினைவு வர நெடுநேரமாகியது. அவள் கண்களினின்றும் கண்ணீர் ஆறுகப் பெருகிக்கொண்டிருந்தது. விஜயாவின் கண்களிலும் நீர் முட்டி நின்றது.

பொழுது சாய்ந்தது. விஜயா விடை பெற்றுக்கொண்டாள். எப்படியும் தேடிக் கண்டு ஆவன செய்து பூமாவைக் குழந்தை

யுடன் அழைத்து வருவதாகக் கூறிச்சென்ற விஜயாவின் உறுதியில் தேறுதல் கண்டது மல்லிகாவின் மனம்.

பழைய சம்பவங்களைக் கிளறிப் பார்க்க நேர்ந்ததில், அவள் இதயம் வெகுவாகப் புண்பட்டது. எல்லாவற்றிற்குமே ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்று இருந்துவிட மனம் இடங்கொடுக்கிறதில்லையே...!

நாட்கள் சில ஆகின.

விஜயாவின் வரவை மல்லிகா ஆவலுடன் தினமும் எதிர்பார்த்தாள். அத்துடன் பூமாவை, அவள் பசுங் குழவியை அதிக ஆசையுடன் எதிர்பார்த்தாள். ஆனால் அது நாள்வரை அவள் நினைத்தபடி அவர்கள் வரவில்லை. அவள் மனம் உடைந்தது.

அவள் சாவின் சந்நிதியில் நின்றாள். 'தான் உயிருடனிருந்து என்ன ஆகப்போகிறது? கருகிய மொட்டு என்றென்றுமே இனிக் கருகிய மொட்டுத்தானே...' என்ற ஒரே நினைவுதான் அவளை ஆட்டிப்படைத்தது; கடைசியில் அவள் முடிவுக்கு அனுசரணையும் செய்தது.

'என்றென்றும் நித்திய கன்னிகையாகப் பூமிதேவிக்கும் பாரமாய் இருப்பதில் என்ன பலன்' என்று எண்ணி எண்ணி நெட்டுயிர்த்த அவளுக்குச் சாவு ஒன்றே இன்பமுடிவாகத் தோன்றியது

கூப்பிடு தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த வைகையை மனதில் கொண்டு நிறுத்தினாள். அன்னை தன்னை வரவேற்பது போன்ற பிரமை எழுந்தது.

பிறைமதியின் பின்னணியாக மின்னின பல தாரகைகள், தேவகன்னிகை முத்துப் பல்லொளி காட்டிப் புன்னகை மலரைத்தூவி விடுவதைப் போல.

சுவரில் படமாகத் தொங்க விடப்பட்டிருந்த பெற்றோருக்குக் கடைசி வணக்கம் செலுத்தி வெளியேறினாள் மல்லிகா.

அப்போது இளங்குழவியின் 'குவா குவா' என்ற யாழ் ஒலி கேட்டது. குரலின் திசையைக் கண்டாள். அங்கு ஒரு குழந்தையையும் கண்டாள். என்ன அதி

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு

(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (P)
No. 260 Esplanade, G. T. Madras

சயம் இது? இந்த அகால வேளை யிலே......குழந்தையின் தாய் எங்கே...?படியிறங்கிச்சுற்றுமுற் றும்பார்த்தாள். யாரும் இல்லை. யார் குழந்தை இது?...

குழந்தையை ஓடிப்போய் வாரி எடுத்தாள். நிலவில் குளித்துக் கொண்டிருந்தது பேசும்பொற்சித்திரம். அது புன்னகையில் அவளிடம் பேசிற்று; கண்ணொளியில் அவளிடம் பேசிற்று.

சிலநாள் முன் அவள் விஜயா விடம் வேண்டிக்கொண்டது அக்கணம், அவளது நினைவுக்கு வந்தது.

அவள் விரக்திக்கு மாற்றம் தேடி வைக்கவா இக்குழந்தை...? யார் குழந்தை இது? இந்நிலை யில் அவள் 'முடிவு' அவளை விட்டு ஓடியது. இந்த முடிவுக்கு என்ன சொல்வது...?

வாழ்க்கையை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை அப்போது.

'யார் இப்படிக் குழந்தையைத் தனியே விட்டுச் சென்றிருப் பார்கள்' என்று மூளை யைக்குழப்பிக்கொண்ட அவளுக்கு விடை சொல்லுவது மாதிரி யிருந்தது கீழே கிடந்த கடிதம்.

"மல்லிகா,

உங்கள் அரவணைப் புக்குக் காத்திருக் கிருள் என் குழந்தை. எப்படியும் என் கணவர் ராஜேந் திரனிடம் சேர்ப்பிக்க முயற்சிசெய்யுங்கள் கோடிப் புண்ணியம் உண்டு.

இப்படிக்கு,

பூமா"

'அப்படியென்ருல் பூமா...' என்ற கேள்வி எதிரொலித்தது அவள் நெஞ்சிலே இடியும் மின் னலுமாக, எரிமலையும் பூகம்பமு மாக.

குழந்தையும் கையுமாகப் பூமா வைத் தேடினுள்; ஆனுல் அவ ளுக்குத்தான் பூமாவை யார் என்று கூடத் தெரியமாட் டாதே! இரவுடன் இரவாக விஜயாவைத் தேடிப்போனுள். அவள் பட்டணத்திற்குப்போய் விட்டதாகச் செய்தி கிடைத் தது.

அவள் மனம், மூளை எல்லாம் குழம்பியது. பூமாவைப்பற்றி அவள் நினைத்துக் கண்ணீர் பெருக்கினுள்.

'என்னைப்போல அவ ளும் அல்லல்பட்டு, குழந்தையை என்னி டம் ஒப்படைத்து விட் டுத் தற்கொலைக்கு முயற்சித்திருந்தால்...?'

அவள் நெஞ்சு வெடித்து விடும்போலி ருந்தது. குழந்தையை அணைத்தவாறு கூடத் திற்குள் ஓடி நின்ருள். அங்கே காட்சிதந்த கன்னித்தாய் மேரியின் படம் மல்லிகாவிற்கு எவ்வளவோ ஆறுதலை யும் அமைதியையும் கொடுத்தது.

(தொடரும்)

புத்தாண்டுப் பரிசு

Rs. 60,000

Tele:
'JINIX'

முழுதும் சரியாக உள்ள 11 பரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

எல்லாப் பரிசுகளுக்கும் உத்தரவாதம்

எல்லாம் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,500. இரண்டு வரிசைகள் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,700. முதல் ஒரே ஒரு வரிசை மட்டும் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 170. முதல் இரண்டு எண்கள் சரியாக உள்ளதற்கு ரூ. 27. பரிசுகள் நிச்சயம் வழங்கப்படுகின்றன.



2-லிருந்து 17 வரையுள்ள எண்களைத் தந்திருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் அல்லது எல்லாப் பக்கங்களிலும் எப்படிக் கூட்டினாலும் 38 வரவேண்டும். ஒரு எண்ணை ஒரு முறைதான் உபயோகிக்கவேண்டும்.

முடிவு தேதி: **15-1-53.** விடை: **27-1-53**

பிரவேசக் கட்டணம்:-கூபன் 1-க்கு ரூ. 1. 4 கூப்பன்களுக்கு ரூ. 3. 8 கூப்பன்கொண்ட செட்1-க்கு ரூ. 5.

முந்திய விடை
மொத்தம் 66

11	14	23	18
12	24	17	13
21	9	16	20
22	19	10	15

விதிகள்: வெள்ளைத்தாளில் விதித்துள்ள பிரவேசக் கட்டணத்துடன் எவ்வளவு கூபன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன்களுடன் M.O. ரசீது, போஸ்டல் ஆர்டர், பாங்க் டிராப்ட் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்தலாம். புலந்த்ஷாரிலுள்ள பெரிய பாங்கியில் சீல் செய்திருக்கும் எங்கள் விடைகளுக்குச் சரியாக இருப்பதையே சரியான விடையுள்ளனவாக கொள்ளப்படும். ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதவேண்டும். M.O. கூப்பனில் உங்களது பெயர், விலாசம் வேண்டும். முழுதும் சரியான விடைகளுக்குத் தக்கபடி பரிசுத்தொகை அமையும். ஆனால் உத்தரவாதம் செய்யப்பட்ட பரிசுகள் மாறமாட்டாது. விடை தேவையானால் தபால் தலையுடன் கூடிய விலாசமிட்ட கவர் அனுப்பவேண்டும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதாகும்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

PHOENIX CORPORATION REGD. (P. M.)
BULANDSHAHR, U. P.

Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.
Editor: K. Appadurai M. A.

விருந்து

வரிசையில் 12 உலக இலக்கியங்கள்

மொழிபெயர்ப்பு: **கா. அப்பாத்துரை**, M. A., L. T.,

ஒவ்வொன்றும் விலை **8** அணா

இந்துலேகா	(மலையாள நாவல்)
மாமனார் வீடு	(ஆங்கில நாடகம்)
துன்பக்கேணி	(ஜப்பானியக் கதை)
நூர்ஜஹான்	(வங்காளி நாடகம்)
கைக்கடிகாரம்	(ரஷ்யக் கதைகள்)
முத்துமாலை	(சீனக் கதைகளும் நாடகமும்)
தாயகத்தின் அழைப்பு	(ஆங்கில நாவல்)
அறக்கோட்டம்	(இந்தி நாவல்)
மாலதி—மாதவன்	(சமஸ்கிருத நாடகம்)
கடல் மறவர்	(பிரஞ்சு நாவல்)
கல்மனிதன்	(ஸ்வீடிஷ் கதைகள்)
ஆண்டிமடம்	(ஆங்கில இசை நாடகம்)

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்,

த. பே. எண். 1165 சென்னை — 21

Regd. No. M. 4849. PONNI

பொன்னி

பொங்கல் மலர் 1953

விலை ரூ. 1—0—0

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் சிறந்த கதை, கவிதை, கட்டுரைகளுடன் அழகுக் குவியலாக, ஒப்பற்ற கலைப்படைப்பாகச் சிறந்த முறையில் வெளிவருகிறது.

விவரங்கட்கு :

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165

சென்னை—21.

PONNI ACHAKAM, MADRAS-21.